
KALKI
006 ரூ.8.00
பக்கங்கள்
கல்கி
குடும்பத்துடன் படிக்க...
வேட்டையாடு விளையாடு...
கனவிலும் காணாத சிக்கல்கள்!



தங்கத்தின் விலை ஏற்றம்
உங்கள் எதிர்கால பர்சேஸ்களை பாதிப்புகுள்ளாக்கும்
யாருக்குத் தெரியும்?
தங்கத்தின் விலை தீபாவளிக்குள் ஒரு கிராமிற்கு
ரூ.1,200/-ஐ கூட தொட்டுவிடலாம்.
கவலைப்படாதீர்கள் இதோ எங்களுடைய...
கோல்டன் ஐடியா
☆ இன்றைய விலையிலோ அல்லது வாங்கும் நாளன்று உள்ள விலையிலோ (எது குறைவாக உள்ளதோ) உங்கள் எதிர்கால பர்சேஸ்களை முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.
☆ உங்கள் எதிர்கால பர்சேஸ் தொகையை முழுமையாக செலுத்தாமலேயே முன்பதிவு செய்யலாம்.
☆ தங்கம் விலை ஏற்ற இறக்கத்திலிருந்து நீங்கள் பாதுகாக்கப்படுகிறீர்கள்.
SINCE 1973
KFJ®
• இறுதியாக வாங்கும் நகைகளின் பேரில் செய்கூலி இல்லை
• இந்த சலுகை எங்களது 3 ஷோரூம்களுக்கும் பொருந்தும்.
• 916 ஹால்மார்க் தங்கம் மட்டுமே KFJ-ல் விற்பனை செய்யப்படுகிறது
தங்கம் • பிளாட்டினம் • வைரங்கள்
அண்ணாநகர் | லஸ் கார்னர், மைலாப்பூர் | புரசைவாக்கம்
விபரங்களுக்கு 98842 22290 / 92 / 95 / 96 / 97



இலங்கை விவகாரம்...

கலைஞர் Vs காங்கிரஸ்!

10



"நானும் அரசியலுக்கு வருவேன்!"

20



சீரியல்னா இளக்காரமா?

56



அட்டென்பரோவின் 'காந்தி' திரைப்படத்து பென் கிங்ஸ்லியை நினைவிருக்கிறதா...? தலைப்பாகை, மீசை, பஞ்சகச்சம் என்று வேடம் ஏற்று நடித்தாரே... அதே பென் கிங்ஸ்லி லண்டனில் மாக்பெத் நாடகத்தில் நடித்தபோது அத்தனை கதாபாத்திரங்களையும் ஏற்று 'மோனோ ஆக்டிங்' செய்தாராம். ரசிகர்கள் அசந்து போய்விட்டார்களாம்.

• துகாராம் மஹாராஜ்



மஹாராஜ் செய்த...

இந்த பென் கிங்ஸ்லி மட்டும் கடந்த ஆகஸ்ட் 20 அன்று சென்னை மயிலாப்பூர் பி.எஸ். ஹைஸ்கூல் அரங்கில் கடையநல்லூர் துகாராம் கணபதி மஹாராஜ் நிகழ்த்திய அபங்க ஹரிகதை நிகழ்ச்சிக்கு வந்திருந்தால்... தாமும் ஒரு தம்பூராவைத் தூக்கிக் கொண்டு பண்டரிபுரத்துக்கு வாரகரி யாத்திரை புறப்பட்டிருப்பார்.

வாரகரி சம்பிரதாய பஜனை என்பது மஹாராஷ்டிர பாரம்பரிய பஜனை- ஹரிகதை முறை. துகாராம் கணபதி மஹாராஜ் இதனைத் தமிழ்நாட்டில் சில ஆண்டுகளாகவே மிக நேர்த்தியாகச் செய்து பக்தர்களின் மனத்தைக் கொள்ளை கொண்டு வருகிறார். ஆனால், ஆகஸ்ட் 20 அன்று அவர் வழங்கிய நிகழ்ச்சி புதியதொரு கூடுதல் பரிமாணத்தையும் உள்ளடக்கியிருந்தது.

ஒரு டஜன் சிஷ்யர்கள் கையில் ஜால்ராவுடன் அணிவகுத்து நிற்க, பக்கவாத்தியக் கலைஞர்கள் மேடையின் ஒரு புறம் அமர்ந்து, அண்ணாவை (மஹாராஜ்) அண்ணாந்து பார்த்தபடி இசைக்க, தலைப்பாகை, மீசை, பஞ்சகச்சம், தம்பூராவுடன் நின்றபடியே கதை சொல்லிப் பாடி, கொஞ்சம் நாட்டியமும் கலந்த மோனோ ஆக்டிங் செய்துவிட்டார் துகாராம் கணபதி. நரஹரி ஸோனார் கதையும் ரவிதாஸ் சரித்திரமும் அன்று மேடையில் பக்தி விகசிக்க அரங்கேறின.

ஹரிகதையில் மோனோ ஆக்டிங்கா...? உண்டு - பழைய நாட்களில். அந்தச் சம்பிரதாயத்தை மீட்டெடுத்துத் தமது நிகழ்ச்சியில் அளவோடு கலந்து வழங்கினார் துகாராம் கணபதி. பாண்டுரங்கன், நரஹரி ஸோனார், பண்டா, பண்டரிபுர மக்கள், ரவிதாஸ், மீரா, மீராவின் தாயார் அனைவரும் நம் கண் முன்னே ஆஜர்!

நரஹரி ஸோனார் தீவிர சிவ பக்தர். பண்டரிபுரத்துக்காரர். ஆனால் சிவனைத் தவிர எந்தத் தெய்வத்தையும் ஏறெடுத்தும் பாராத விரதம். இவருக்கு வந்ததே சோதனை! பாண்டுரங்கனுக்குத் தங்க அரைஞாண் செய்யும்படி அவருடைய நீண்ட நாள் 'கஸ்டமர்' ஒருவர் கேட்க, ஊர் ஜனங்களும் வற்புறுத்த, இவர் முதலில் 'மாட்டேன்' என்று அடம்பிடிக்க, கடைசியில் வழிக்கு வந்தாராம். 'கோயிலுக்குப் போய் பாண்டுரங்கனின் இடுப்பளவை எடுக்க முடியாது. நீங்கள் அளவு கொடுத்தால் செய்து தருகிறேன்' என்றாராம்.

இந்தக் காரியத்துக்குக் கூலி வாங்கிக் கொள்ள முடியாது என்று நிபந்தனை வேறு. ஏனென்றால் விட்டலனுக்கு நகை செய்வது சிவ காரியம் அல்லாத பாபச் செயலாம்.

அளவெடுத்துத் தந்தபடி ஸோனார் செய்தும் கொடுத்தார். ஆனால் பாண்டுரங்கன் இடுப்புக்கு அது ரொம்ப 'லூஸாக' இருந்தது. மறுபடி அள வெடுத்துக் கொடுத்து மறுபடி செய்து பார்த்தால் 'ரொம்ப டைட்'! பக்தர்களுக்கு ஆக்ரோஷம் வந்துவிட்டது. "நீயே வந்து அளவு எடு!" என்று ஸோனாரிடம் கூச்சலிட்டார்கள். அவரும் கண்ணைக் கட்டிக் கொண்டு வந்து விட்டலன் இடுப்பளவு எடுக்க முற்பட, அந்த மூர்த்தியைத் தொட்டுப் பார்த்தால் அது சாக்ஷாத் சிவலிங்க வடிவாகவே இருந்ததாம்.

"அவிழ்த்தார் கண் கட்டை; தூக்கி எறிந்தார் ஹரிஹர பேதத்தை; பொழிந்தார் அபங்க கீதங் களை" என்று துகாராம் அண்ணா இந்தக் கதை முடிவில் அபிநயித்து வர்ணிக்க, கண்டு - கேட்ட பக்தர்கள் அடித்தனர் 'அப்ளாஸை'!

மேடையிலும் பார்வையாளர்களிடையேயும் பரவிய இந்த மின்சார குதூகலம், ரவிதாஸுக்கு விட்டலன் செருப்பு தைத்துக் கொடுத்த சரித்திரத் திலும் நீடித்தது.

குழந்தை சீடர்களுடன் கணபதி துகாராம் புன்முறுவல் செய்தபடி குதித்து, விட்டல் நாமா வளிகளைப் பாடி அனுபவித்ததைப் பார்க்க, நமக் கும்கூட குதிக்க ஆசை வரத்தான் செய்தது.

சில வருடங்களுக்கு முன்பு துகாராம் கண பதி மஹராஜ் நிகழ்ச்சிகளில் எல்லோரும் உட் கார்ந்தபடியே இசைத்தார்கள். பின்னர் சீடர்கள் மட்டும் நின்றபடி பாடினார்கள். இப்போது மஹ ராஜே நிற்க ஆரம்பித்திருக்கிறார். அடுத்து பக்க வாத்தியக்காரர்களும் நிற்க ஆரம்பிப்பார்களோ...?

யார் நின்றால் என்ன.. யார் அமர்ந்தால் என்ன.. இவர்கள் எல்லோரும் துகாராம் கணபதியுடன் சேர்ந்துகொண்டு அந்த விட்டலனை நமது மனத்தில் ஸ்திரமாக நிறுத்தி விடுகிறார்களே, அது போதும்!

- ஜான்னவி

...மோனோ ஆக்டிங்!

கல்கி

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்
ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623, 2225 1324

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

கமலின் ‘வேட்டையாடு விளையாடு’ படம் தொடங்கியது முதலே ஏகப்பட்ட பிரச்னைகள். படத் தயாரிப்பாளர் தற்கொலைக்கு முயன்றது தனிக்கதை. மிகுந்த போராட்டத்தைச் சந்தித்திருக்கும் டைரக்டர் கௌதம் எப்படியிருக்கிறார்? சந்தித்தோம்...

எப்படி இருக்கிறீர்கள் கௌதம்?

"ஆரம்பம் முதலே அடுத்தடுத்து ஏதாவது பிரச்னை, சர்ச்சை, சிக்கல்... இதெல்லாம் ஏன் என்கிற மனவருத்தம். அப்பாடா! எல்லாச் சிக்கல்களும் ஒரு வழியாகத் தீர்ந்து, இப்போதுதான் நிம்மதிப் பெருமூச்சு; இனிமேல் எந்தப் புதிய பிரச்னையும் வரக் கூடாதே என்கிற டென்ஷன்; தேவையில்லாத ப்ரஷர்... இப்படிக் கலவையான உணர்வுகளில் நான் மூழ்கி இருக்கிறேன்."

இத்தனை பிரச்னைகளுக்கும் மூல காரணம் என்ன? யார்?

"எல்லாம் நல்லபடியாக முடிந்திருக்கும் இந்தக் கட்டத்தில், பிரச்னைக்கு இன்னார்தான் காரணம் என்று நான் யாரையும் சுட்டிக்காட்ட விரும்பவில்லை. அப்படிக் காட்டுவது சரியில்லை என்பது மட்டுமல்ல, அப்படி யாரையும் காட்ட முடியாது என்பதுதான் உண்மை. முதலில் தயாரிப்பாளர் காஜா மொய்தீன் கமலை வைத்து ஒரு படம் எடுக்க முடிவு செய்தார். அந்தப் படத்தை இயக்கும் வாய்ப்பு எனக்கு வந்தது. நான் கமலின் ரசிகன். ஒரு டைரக்டர் என்ற முறையில் கமலுடன் ஒரு படம் பண்ண வேண்டும் என்ற ஆசை யாருக்குத்தான் இருக்காது?

கமலிடம் நான் ஒரு கதையைச் சொன்னேன். ஒரு வரியில் சொன்ன கதை அவருக்குப் பிடித்தது. இரண்டு மாதங்கள் உட்கார்ந்து முழு ஸ்கிரிப்ட் எழுதினேன். ஆனால் கமலுக்குப் பிடிக்கவில்லை. புதிய கதை தயார் பண்ணச் சொன்னார். மீண்டும் உட்கார்ந்து ஒரு கதை எழுதினேன். அந்தக் கதை கமலுக்குப் பிடித்தது. அதன் பின், புதிய கதைக்கு ஒரு ஸ்கிரிப்ட் தயார் செய்தேன். இதற்குள் ஏழெட்டு மாதங்கள் ஓடிவிட்டன. தயாரிப்பாளருக்கு, படம் இன்னும் ஆரம்பிக்கவில்லையே என்று கவலை வந்துவிட்டது. தயாரிப்பாளர் இந்தப் படத்தின் வியாபாரத்தைப் பெரிதும் நம்பி இருந்தார் என்பது உண்மை என்றாலும், அவரது தற்கொலை முயற்சிக்கு நாங்கள் தான் காரணம் என்று பலரும் பேச ஆரம்பித்து விட்டார்கள். கமலும் நானும் கலந்து பேசி உடனடியாக இந்தப் படத்தை ஆரம்பிக்க முடிவு செய்தோம்.

காஜா சாருக்கு மேற்கொண்டு தயாரிப்



னைத் தொடர முடியாத நிலைமை. அப்போது ஆஸ்கார் ஃபிலிம்ஸ் ரவிச் சந்திரன் படத்தைத் தயாரிக்க முன்வந் தார். அதன் பின்னரும் சில சிக்கல்கள். அடுத்து, செவன்த் சேனல் நாராயணன் தயாரிப்பாளர் ஆனார். மொத்தத்தில் மூன்று வருடங்கள் ஓடிவிட்டன."

இந்தப் படத்தை இயக்க ஒப்புக் கொண்டபோது இதுபோன்ற பிரச் னைகள் வரும் என்று கொஞ்சமாவது எதிர்பார்த்தீர்களா?

"கமல் படம் இயக்குவதற்குக் கிடைத்த வாய்ப்பை நான் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டேன். இதுபோன்றெல்லாம் சிக்கல்கள் வரும் என்று நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. ஒரு பக்கம் எனக்கு ஏகப்பட்ட வருத்தம் என்றாலும், நான் தன்னம்பிக்கையை இழக்காமல், கடுமை யாக உழைத்தேன்!"

கமல் இந்தப் படத்துக்கு முழுமை யான ஒத்துழைப்புத் தரவில்லை என்றொரு பேச்சு அடிபட்டதே?

"ஆரம்பத்தில் கமல் என்னைப் பற்றிக் கொஞ்சம் தவறான எண்ணம் கொண்டிருந்தார் என்பது என் கருத்து. பொதுவாக கமல் ஒரு படத்தில் நடிக்கிறார் என்றால், அதில் அவர் முழுமையாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டு விடுவார். தன் கதாபாத்திரம், நடிப்பு ஆகிய வற்றில் மட்டுமின்றி படத்தின் பல்வேறு அம்சங்களிலும் ஆர்வம் காட்டுவார்; ஆலோசனைகள் சொல்வார் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், கமல் ஆரம்பக் கட்டத்தில் அதுபோல இல்லை. நான் காட்சியைச் சொன்னால், அதை என் எதிர்பார்ப்புக்கு ஏற்ப நடித்துக் கொடுப்பார். மற்றபடி வேறு எதிலும் இன்வால்வ் ஆக மாட்டார். ஆனால், முக்கால் படத்துக்குப் பிறகு, நான் படம் குறித்து சரியாகத்தான் திட்டமிட்டிருக் கிறேன் என்று புரிந்து கொண்டார். அதன்பின் அவருடைய இன்வால்வ் மெண்ட் அதிகமானது."

'வேட்டையாடு விளையாடு' படத்தை எடுத்து முடிப்பதற்குள் சரத்தை வைத்து 'சிலந்தி'யை முடித்து விட்டீர்களாமே?

"ஆமாம். கமலிடம் முதலில் ஒரு கதை சொன்னேன். ஆனால் அது அவரைக் கவரவில்லை என்று நான் சொன்னேன் இல்லையா... அந்தக் கதைக்கு சரத்குமார் பொருத்தமாக இருப்பார் என்பதால் அவரிடமும் அந்தக் கதையைச் சொன் னேன். அவருக்குக் கதை பிடித்துவிட்டது. 'உடனே ஷூட்டிங்கை ஆரம்பித்து விடலாம்' என்றார். 'வேட்டையாடு விளையாடு' படம் தாமதமாகிக் கொண்டே இருந்தது. இடையில் 'சிலந்தி' படத்தை எடுத்து முடித்து விட்டேன். படம் ரெடி. இன்னும் சில மாதங்



வேட்டையாடு விளையாடு... கனவிலும் காணாத சிக்கல்கள்!



• கௌதம்

“அது என் சுதந்திரத்துக்கு நான் கொடுக்கும் விலை!”

களில் அதுவும் வெளிவரும்.”

சூர்யாவுடன் ‘சென்னையில் ஒரு மழைக் காலம்’ என்றொரு படம் பண்ணுவதாக இருந்ததே! அது என்னவாயிற்று?

“அது தாமதமானதற்கும் ‘வேட்டையாடு விளையாடு’ படம்தான் ஒரு விதத்தில் காரணம். சூர்யா எனக்காகக் காத்துக் கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில், ‘நீங்கள் மற்ற படங்களை முடியுங்கள். இந்தப் படத்தை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்’ என்று சொல்லி விட்டேன். அந்தக் காலகட்டத்தில்தான் அவர் ‘மாயாவி’, ‘பேரழகன்’ எல்லாம் நடித்தார். ‘சிலந்தி’ படம் ரிலீஸ் ஆனவுடன் சூர்யாவுடன் சேர்ந்து ‘சென்னையில் ஒரு மழைக்காலம்’ படத்தை ஆரம்பிக்கப் போகிறேன்.”

ஒரு டைரக்டர் என்ற முறையில் உங்களுக்கு என்ன சம்பளமோ அதை வாங்கிக்கொள்ளாமல், படத்தின் முதல் பிரதியை முடித்துக் கொடுக்க இவ்வளவு என்று பேசிக்கொண்டு படங்களை இயக்குகிறீர்களே... அதற்கு என்ன காரணம்?

“எனக்கு என்னுடைய சுதந்திரம் ரொம்ப முக்கியம். என்னிடம் படம் இயக்கும் பொறுப்பை ஒப்படைத்து விட்டால், என்னை அடிக்கடி கேள்வி கேட்பது எனக்குப் பிடிக்காது. அதற்காகவே நான் மொத்த படத்தையும் முடித்து, முதல் பிரதியைக் கொடுத்து விடுகிறேன். அதுவரை என்னை ஒன்றும் கேட்காதீர்கள் என்று சொல்கிறேன்.”

பொதுவாக எல்லாப் படங்களுக்கும், போட்ட பட்ஜெட்டைவிட அதிகமாகவே செலவாகிறது. அப்படி இருக்கும் போது, முதல் பிரதி அடிப்படையில் படம் பண்ணும் நீங்கள், உங்கள் கையைச் சுட்டுக் கொள்ள நேரிட்டால் என்ன செய்வீர்கள்?

“நான் கேட்கும் தொகையில், என்னுடைய சம்பளமும் அடக்கம். எனவே பட்ஜெட் வெய்ட் அதிகமானால் என் சம்பளத்தில் அட்ஜெஸ்ட் ஆகிவிடும். என் முந்தைய படத்தின்போதும் சரி, இந்தப் படத்துக்கும் சரி, தேவையானபோது பணம் வராத சமயத்தில் ஃபைனான்சியரிடம் நானே கடன் வாங்கி, கைக் காசைப் போட்டு ஷூட்டிங்கை நடத்தி இருக்கிறேன். ஒரு விதத்தில் பார்த்தால், அது என் சுதந்திரத்துக்கு நான் கொடுக்கும் விலை என்றுகூட சொல்லலாம்.”

- **எஸ். சந்திரமௌலி**

படங்கள் : **ஸ்டில்ஸ் சரவணன்**

முகம் சுளிக்க 72 தசைகள் – சிரிக்கவோ 14 தசைகள்
சிரிப்பு ஒரு டானிக்; கவலையைத் தணிக்கும் வலி நிவாரணி

தேவன்

துப்பறியும் சாம்பு	I & II	155.00
மிஸ்டர் வேதாந்தம்	I & II	170.00
ராஜத்தின் மனோரதம்		50.00
மிஸ் ஜானகி		75.00
சீனுப்பயல்		55.00
விச்சுவுக்குக் கடிதங்கள்		42.00
ஏன் இந்த அசட்டுத்தனம்		55.00
போக்கிரி மாமா		65.00
ஐந்து நாடுகளில் அறுபது நாள் (3 பாகங்கள்)		260.00

எஸ்.வி.வி.

உல்லாச வேளை	65.00
சௌந்தரம்மாள்	65.00
கோபாலன் ICS	55.00
ரமணியின் தாயார்	40.00
ஹாஸ்யக் கதைகள்	40.00
செல்லாத ரூபாய்	32.00
சம்பத்து	63.00
வசந்தன்	40.00
புது மாட்டுப் பெண்	21.00
பொம்மி	23.00
சபாஷ்! பார்வதி!	25.00
வாழ்க்கையே வாழ்க்கை	45.00

சோ

கூவம் நதிக்கரையினிலே	II	45.00
கூவம் நதிக்கரையினிலே	III	27.00
எங்கே பிராமணன்?		100.00
முகமது பின் துக்ளக்		25.00
இந்தியா எங்கே போகிறது?		12.00
துக்ளக் கேள்வி – பதில்	II	45.00
உண்மையே உன் விலை என்ன?		42.00
சம்பவாமி யுகே! யுகே!		30.00
வெறுக்கத்தக்கதா பிராமணீயம்		30.00

ஜி.எஸ். பாலகிருஷ்ணன்

சிரிங்க சார்	40.00
வசந்த சொப்பனங்கள்	32.00
பல்சுவைக் கதைகள்	60.00
சபாஷ்! சந்துரு!	30.00
சிரிப்பு – ஏன்? எதற்கு? எப்படி?	30.00
புடலங்காய் புரொபஸர்	60.00

ஜே.எஸ். ராகவன்

தமாஷா வரிகள்	I	50.00
தமாஷா வரிகள்	II	50.00
திருமதி திருப்பதி க்ரோர்பதி		62.00

எஸ்.வி.கே.

பலே! பலே! கதைகள்	90.00
சபாஷ்! கதைகள்	90.00
பேஷ்! பேஷ்! கதைகள்	90.00

'துக்ளக்' சத்யா

நையாண்டிக் கட்டுரைகள்	40.00
அரசியலில் நகைச்சுவை	32.00
மாடசாமியின் மனசாட்சி	100.00
அரசியல் கலையை அறிந்து கொள்வோம்	45.00
நாடு தழுவிய நகைச்சுவை	50.00

எஸ்.வி. சேகர் in

கண்ணாமூச்சி
திரும்பி வந்த மனைவி
கிரேஸி தீவ்ஸ் இன் பாலவாக்கம்
ஒரு சொந்த வீடு வாடகை வீடாகிறது
ஒன் மோர் எக்ஸார்சிஸ்ட்
மகாபாரதத்தில் மங்காத்தா
காதுல பூ. அல்வா
காட்டுல மழை
யாமிருக்க பயமேன்
ஆயிரம் உதை வாங்கிய அபூர்வ சிகாமணி
வால் பையன்
எல்லாமே தமாஷ்தான்
எல்லோரும் வாங்க
அதிர்ஷ்டக்காரன்
சின்ன மாப்ளே பெரிய மாப்ளே
பெரிய தம்பி, எப்பவும் நீ ராஜா
தத்துப் பிள்ளை, பெரியப்பா
குழந்தசாமி
மனைவிகள் ஜாக்கிரதை
சிரிப்பு உங்கள் சாய்ஸ்
இனிமே நாங்கதான்
எஸ்.வி. சேகர் பதில்கள் I & II
ஜுட்ஸ் ஜாலி I & II
நாட்டு நடப்பு I & II
7 மாதங்கள் 7 நாடுகள்

தனிப்பிரதி ரூ.45/-

Dr. V. சொக்கலிங்கம்

நகைச்சுவையும் உடல் நலமும்	25.00

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

ஒரு நாள் விஜயமாக நாகைக்கு வருகை தந்திருந்தார் பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவி சங்கர். இதற்கு முன்னர் அவர், நாகை பகுதிக்கு வந்திருந்தது சுனாமியின்போது. பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதி மக்களில் ஒரு பகுதியினருக்குக் குடியிருப்புகள் கட்டித் தரப்படுமென 'வாழும் கலை அமைப்பு' வாயிலாகச் சொல்லப்பட்டிருந்தது. அதன்படி தரங்கம்பாடி தாலுகாவில், உள்ள 'பெரிய மாணிக்கப் பங்கு' எனும் கடலோரக் கிராமத்தில் தொண்ணூற்று நான்கு வீடுகள் டைம்ஸ் ஃபவுன்டேஷன் நிதி உதவியுடன் கான்கிரீட் கட்டடங்களாகக் கட்டப்பட்டு வருகின்றன. அவற்றுள் அறுபத்துமூன்று வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள வீடுகளுக்கான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. வாழும் கலை அமைப்பும், சர்வதேச மனித நேயக் கழகமும் இணைந்து இதனைச் செய்கின்றன. ஒவ்வொரு வீட்டின் மதிப்பும் 1.65 லட்ச ரூபாய். கட்டி முடிக்கப்பட்ட வீடுகளைப் பயனாளிகளிடம் ஒப்படைத்து ஆசி வழங்க ரவிசங்கர்ஜி பெரிய மாணிக்கப் பங்குவுக்கு விஜயம் செய்திருந்தார். கூடவே அங்கு கட்டப்பட்டு வரும் பள்ளிக் கூடம், தொழிற்பயிற்சிக் கூடம் ஆகியவற்றையும் பார்வையிட வந்திருந்தார்.

அன்றே நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக மாநாட்டுக் கூட்ட அரங்கில் ரவிசங்கர்ஜி அவர்களின் ஆன்மிக உரை. பொதுவாக மிகக் குறைந்த நேரமே பேசுகின்ற வழக்கம் கொண்ட குருஜி, அரசு அலுவலர்கள் மத்தியில் அதிக நேரம் எடுத்து அருளுரை வழங்கினார். "ஒரு சக்தி இருக்கிறது. நீங்கள் அதனைக் கடவுள் என்று சொன்னாலும் சரி, அல்லது வேறு ஏதாவது ஒன்றாகக் கூறினாலும் சரி அதுதான் நம்மை வழி நடத்திச் செல்கின்ற சக்தியாக இருக்கிறது. உங்களுக்குள்ளேயே உங்களை நீங்கள் முதலில் உணர்ந்து கொள்ளுங்கள். காற்றோடு காற்றாகக் கலக்கப் போகிறது நம்முடைய உயிர். 'நான் யார்?' என்று நம்மில் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். யாராவது நம்மை விமர்சனம் செய்தால் அதனை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் நம் எல்லோரிடத்தும் இருந்திடல் வேண்டும். நாமும் மற்றவர்களைச் சரியாக விமர்சனம் செய்தல் வேண்டும். ஆன்மிகம் என்பது நாம் ஒவ்வொருவரும் நம்மை யார் என்று தெளிவாக அறிந்து கொள்வதுதான்!'' என்ற குருஜி, "நீங்கள் ஒவ்வொருவரும் தினசரி நூற்றுக்கணக்கான பொது மக்களைச் சந்தித்து வருகிற அரசு அதிகாரிகள், அலுவலர்கள். மதியம் பன்னிரண்டு மணிக்கு மேல், உங்கள் கண்களில் எரிச்சல் இருக்கிறதா?" என வினவினார். மாவட்ட ஆட்சித் தலைவர் உட்பட அரங்கில் அனேகம் பேர் கரங்களை உயர்த்தினர். "தொடர் வேலைப் பளுவின் காரணமாக, புருவத்துக்குக் கீழே நரம்புகளில் இரத்த ஓட்டம் சற்று தடைபட்டுப் போயிருக்கும். அந்தச் சமயங்களில் கண்களில் எரிச்சல் ஏற்படும். உங்கள் கட்டை விரல்களைக் கொண்டு, புருவங்களுக்குக் கீழே வைத்து நான்கைந்து முறை நீவி விடுங்கள்!'' என்ற ரவிசங்கர்ஜி, அரங்கில் அமர்ந்திருந்த பார்வையாளர்களைச் "செய்து பாருங்கள்" என்றார். அவர்களில் ஒரு சிலர் உடனே அந்தப் பயிற்சிகளைச் செய்தனர். திடீரென குருஜியின் குரல் ஒலித்தது. "உங்களில்

• சத்சங்கில் குருஜி...



நம்மை



● திருமறைச்செல்வி, புவனேஸ்வரி...

ஒரு சிலர்தான் பயிற்சி செய்கின்றீர். பெரும்பாலோர் செய்யவில்லை. ஏன்? உங்களிடையே வெட்கம், தயக்கம் இருக்கிறது. முதலில் அந்தத் தடைகளைத் தாண்டி வாருங்கள். வெட்கம், தயக்கத்தினால் உலகில் நாம் பலவிதமான ஆனந்தங்களை இழந்து விடுகிறோம்!'' என்றவர், "ஆனந்தமே வாழ்க்கை! அன்பே வாழ்க்கை!'' போன்ற எளிய பதங்களுடன் அரங்கில் அமர்ந்திருந்தோரின் மனத்தினைப் பதப்படுத்தினார்.

மத, இன, சாதி வேறுபாடுகளைக் கடந்து மக்களிடையே ஆன்மிகத்தை ஒளிர வைத்துக் கொண்டிருப்பது வாழும் கலை அமைப்பு. உலகின் நூற்று முப்பத்திரண்டு நாடுகளில் இந்த அமைப்பு வாயிலாக 'சுதர்சன க்ரியா' எனப்படும் மூச்சுப் பயிற்சி, 'பிராணாயாமம்' மற்றும் 'தியானம்' போன்றவை பல்லாயிரக் கணக்கானவர்கள் மத்தியில் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. வன்முறை இல்லாத சமூகம், வியாதி இல்லாத உடம்பு, குழப்பம் இல்லாத மனம், அதிர்ச்சி இல்லாத உணர்வு, இனிதான வாழ்வு ஆகியவற்றைத் தந்து கொண்டேயிருக்கின்ற வல்லமை கொண்டது சுதர்சன க்ரியா மூச்சுப் பயிற்சி!

நாகை, வெளிப்பாளையம் ஜெயா மெட்ரிகுலேஷன் பள்ளி விளையாட்டுத் திடலில், திரளாகக் கூடியிருந்தவர்கள் மத்தியில் அன்றிரவு சத்சங்கம் நிகழ்த்தினார் ரவிசங்கர். சுதர்சன க்ரியாவின் சில நிலைகளை மேடையில் அமர்ந்தபடியே நிகழ்த்திக் காட்டினார்.

அத்தனை பேர் குழுமியிருந்த மைதானத்தில் தனியாக ஓரிடத்தில் தியானத்தில் அமர்ந்திருந்தனர் திருமறைச்செல்வி, புவனேஸ்வரி என்னும் இரு பெண்கள். இருவரும் சகோதரிகள். தியானம் கலைந்த பின்னர் நம்மிடம் பேசியவர்கள் "நாங்கள் இந்தப் பயிற்சியில் இணைந்து இரண்டு மாதங்கள் ஆகின்றன. முதலில், இது மனச் சோர்வை நீக்குகிறது. அதனால் உடல் சுறுசுறுப்பைத் தருகிறது. நல்லவற்றை நினைக்கத் தூண்டுகிறது!'' என்றனர்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

அறிவதுதான் ஆன்மிகம்!


இலங்கை விவகாரம்...

அ.தி.மு.க.வுடன் கைகோப்போமா?

விடுதலைப்புலிகள் பிரச்னையால் சட்டமன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்து, பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறார் தமிழக காங்கிரஸ் சட்டமன்றத் தலைவர் சுதர்சனம். இலங்கை விவகாரத்தின் தாக்கம் தமிழகத்தின் மீது அழுத்தமாகப் பதிந்திருக்கும் நிலையில் சுதர்சனத்தின் மனநிலையை அறிய விரும்பினோம்.

இலங்கை விவகாரத்தில் சட்ட சபையிலிருந்து வெளியேறி பரபரப்பை ஏற்படுத்தியது ஏன்?

“ஒரு பொதுக் கூட்டத்தில் வைகோ பேசும்போது பிரபாகரனை ஏகமாகப் புகழ்ந்தும், தமிழகத்தைக் காஷ்மீருடன் ஒப்பிட்டும் பேசியிருக்கிறார். இது அமைதியைக் குலைக்கும் பேச்சு. எனவே தான் சட்டமன்றத்தின் கவனத்தைக் கவரும் வகையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்தார் பீட்டர் அல்போன்ஸ். ஆனால் முதல்வர் ‘வைகோ பேச்சுக்குத் தீவிரமான அர்த்தம் கற்பித்துக் கொள்ளக் கூடாது’ என்கிற வகையில் பதில் சொன்னது எங்களுக்குத் திருப்தியளிக்கவில்லை. விடுதலைப் புலிகளுக்கு தமிழகத்தில் யாரும் எந்த வகையிலும் ஆதரவு தரக் கூடாது. வைகோ சென்னையைத் தொடர்ந்து, தமிழகத்தின் மற்ற பகுதிகளுக்கும் பிரசாரம் செய்யப் புறப்பட்டிருக்கிறார். எனவே தமிழகம் முழுவதும் அமைதி கெட வாய்ப்பிருக்கிறது. இது அனுமதிக்கப்பட்டால், நான்கே மாதங்களில் மீண்டும் புலிகள் தமிழகத்தில் தளம் அமைத்துவிடுவர். எனவே தான் முதல்வர் பதிலில் திருப்தியடையாத எங்கள் எம்.எல்.ஏ.க்கள் சபையிலிருந்து வெளியேறி எங்கள் அறையில் கலந்தாலோசித்துவிட்டுத் திரும்பினோம். அதன்பிறகு கலைஞர் ‘சட்டம் தன் கடமையைச் செய்யும்’ என்றும், ‘மத்திய அரசின் கொள்கைதான் இந்த விஷயத்தில் தமிழக அரசின் கொள்கை’ என்றும் சொன்னதில் எங்களுக்கு மகிழ்ச்சியே.”



வைகோவை இதுபோன்ற பேச்சுக்களுக்காக கைது செய்ய வேண்டும் என்று சொல்கிறீர்களா?

“தீவிரவாதத்தை ஆதரிக்கிற பேச்சுக்கள் தமிழகத்தில் மீண்டும் வன்முறை கலாசாரத்துக்குதான் வித்திடும். எனவே வைகோவின் இதுபோன்ற பேச்சுக்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். ‘பொடா’வில் ஏற்கெனவே உள்ளே இருந்தவர்தான் வைகோ. தன்னை அவர் கட்டுப்படுத்திக் கொண்டு பேசினால் தமிழகத்துக்கு நல்லது.”

ஈழப் பிரச்னையில் மத்திய அரசின் நிலைதான் என்ன?

“இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வுக்

காகத்தான் ராஜீவ், இந்தியா - இலங்கை ஒப்பந்தம் போட்டார். தமிழர்களுக்குத் தனி மாநிலம் அமைக்கப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக சிங்களர்களுக்கும் ராஜீவ்மீது வெறுப்பு ஏற்பட்டது. ராஜீவ் படுகொலைக்கு முன்பு விடுதலைப் புலிகளை தமிழகம் - ஏன் ஒட்டுமொத்த இந்தியாவும் ஆதரித்தது. ஆனால் ராஜீவ் கொலைக்குப் பிறகு இந்திய மக்களின் ஆதரவை அவர்கள் இழந்துவிட்டனர். ஆனால் அங்குள்ள தமிழர்களின் நலன்களைப் பாதுகாக்கும் பொறுப்பு நமக்கு இருக்கிறது. இது இரண்டு நாடுகள் நல்லுறவு தொடர்பான விஷயமாதலால் மிக எச்சரிக்கையாக அணுகுகிறது மத்திய அரசு. கூடிய விரைவில் இலங்கையில் அமைதி நிலைநாட்டப்படும். அதற்கான நடவடிக்கைகள் மத்திய அரசால் எடுக்கப்பட்டு வருகின்றன.''

இலங்கையில் விடுதலைப்புலிகள் தான் அங்கு தமிழர்களின் காப்பாளர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லப்படும் நிலையில், தமிழர்களையும் புலிகளையும் இருவேறு கூறுகளாகப் பிரித்து நீங்கள் அணுகுவது சரிதானா?

''விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவில் தடைசெய்யப்பட்ட இயக்கம். ராஜீவ் கொலையில் பிரபாகரன் முதல் குற்றவாளி. எனவே எங்கள் அணுகுமுறை சரியே. அதே வேளையில் இலங்கையில் அப்பாவித் தமிழர்களின் பாதுகாப்பும் அமைதியும் முக்கியமானதே.''

புலிகள் ஆதரவு விவகாரத்தில் கலைஞர் தீவிர நடவடிக்கை எடுப்பார் என்று நம்புகிறீர்களா?

"முழுமையாக நம்புகிறோம். வைகோ பேசுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்புகூட அவரது கட்சிச் செயலாளர் ஒருவர் தீவிரவாதத்தை ஆதரித்துப் பேசியதனால் கைது செய்யப்பட்டிருக்கிறார். இது மற்றவர்களுக்கு ஓர் எச்சரிக்கையாக அமையட்டும்.''

புலிகள் விவகாரத்தில் அ.தி.மு.க.வும் நீங்களும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான கருத்துகளைக் கொண்டவர்கள். எனவே இந்த விவகாரத்தில் நீங்களும் அ.தி.மு.க.வும் சட்டசபையில் இணைந்து செயல்படும் வாய்ப்பு உண்டா?

"எதற்காக அவர்களோடு இணைந்து செயல்பட வேண்டும்? மத்திய அரசு கொள்கையே எங்கள் கொள்கை என்று சொல்லியிருக்கும் கலைஞர், மத்திய அரசின் கொள்கைகளை வகுக்கும் வாய்ப்பும் பெற்றிருக்கிறார். நாங்கள் எங்கள் கருத்துகளைச் சொல்வோம், அவ்வளவுதான். எனவே, அ.தி.மு.க.வுடன் இணைந்து செயல்பட வேண்டிய அவசியம் இல்லை.''



• சுதர்சனம்

– காங்கிரஸ் பதில்

- ப்ரியன்

படங்கள் : **ராஜன், ஸ்ரீஹரி**

ஆசிய, பசிபிக் பகுதியிலேயே மல்ட்டி ஃபோகல் லென்ஸ் அதிகளவு பொருத்திய கண் மருத்துவமனை என்கிற பெருமையைப் பெற்றிருக்கிறது கோவை ஆர்.எஸ்.புரத்திலுள்ள த ஐ ஃபவுண்டேஷன் கண் மருத்துவமனை.

''கடந்த எட்டு ஆண்டுகளில், 13000-க்கு மேற்பட்ட லாசிக் சிகிச்சைகள் முடித்துவிட்ட நாங்கள் பயன்படுத்தும் அதி நவீன மருத்துவக் கருவி Z-100. இது 217-C மற்றும் 217-Z போன்ற முந்தைய லாசிக் கருவிகளைவிட மிக உயர்வானது!'' என்கின்றனர் டாக்டர் ராமமூர்த்தி, டாக்டர் சித்ரா தம்பதி.

எப்படிச் சொல்கிறீர்கள் டாக்டர்?

''இந்த நவீன Z-100 கருவியில் கொரோனா ஹெட் லேசர் பொருத்தப்பட்டிருப்பதால், சிகிச்சை துல்லியமானது; நிரந்தரப் பலன் தருவது. 100-H, வேகத்தில் லேசர் கதிர்களை வெளியேற்றுவதால், சிகிச்சை நேரம் குறைகிறது. 240-H, வேகத்தில் இன்ஃப்ரா ரெட் ஐ ட்ராக்கிங் செய்வதால், சிகிச்சை மிகச் சரியாக மையப்படுத்தப்படுகிறது. பளிவ்-Z ட்ராக்கிங், கூடுதலான சிறப்பு அம்சம். ஐரிஸ் தோற்ற அமைப்பை அறியும் வசதி இருப்பதால் 'பாப்பா'வின் சரியான அமைப்பை அறிந்து லேசர் சிகிச்சை அளிக்க முடிகிறது. எந்த ஒரு கண் அசைவுக்கும் ஏற்றாற்போல் லேசர் கருவி செயல்பட எடுத்துக்கொள்ளும் நேரம் மிக மிகக் குறைவு என்பதால், சிகிச்சை தரப்பட வேண்டிய இடம் மிகச் சரியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறது. இதில் பொருத்தப்பட்டிருக்கும் Zeiss மைக்ரோஸ்கோப்பின் மூலம், அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர், கண்ணை மிகத் தெளிவாகப் பார்க்க முடியும். கிட்டப் பார்வை, தூரப்பார்வை மற்றும் சிலிண்டரிக[illegible] பவர் மிக அதிகமாக இருந்தாலும் சரி[illegible]ய முடியும்.


[illegible]னை வசதிகள் நவீன Z-100 கரு[illegible]ல் இருப்பதால், சிகிச்சைக்குப் பின் கி[illegible]க்கும் பார்வைத் திறனை, மிக உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்ல முடிகிறது.

இக்கருவியின் தனிச் சிறப்பு என்னவென்றால், கார்னியா எனப்படும் கருவிழியின் தோற்றத்தை நன்கு ஆராய்ந்து, அதன் முன்புற - பின்புற அமைப்பையும், தடிமனையும் தனிப்பட்ட வகையில் ஒரு நபரின் கைரேகையைப் போல் மிகத் துல்லியமாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.''

லாசிக் சிகிச்சை எடுத்துக்கொள்ள என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும்?

''பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். குழந்தைப் பருவத்திலிருந்தே கண்ணாடி அணிபவராக இருத்தல் வேண்டும். தூரப் பார்வை, கிட்டப்பார்வை, சிலிண்டரிகல் குறைபாடுகள் உள்ளவர்கள் லாசிக் சிகிச்சை பெறலாம். கண் பார்வையின் பவர், ஒரு வருடத்துக்கு மாறாமல் அப்படியே இருந்திருக்க வேண்டும். காண்டாக்ட் லென்ஸ் அணிபவர்கள், ஒரு வாரத்துக்கு முன்பாக அவற்றைக் கழற்றிவிட்டே அறுவை சிகிச்சைக்கு வரவேண்டும்.''

பிளெயினோஸ்கேன் லாசிக் என்றால்





• மல்ட்டி ஃபோகல் லென்ஸ் சாதனை விருது பெறும் டாக்டர் ராமமூர்த்தி, சித்ரா தம்பதி...

என்ன?

"ஒவ்வொருவர் கண்ணிலும் லோயர் ஆர்டர் அப்ரஷன்ஸ், ஹையர் ஆர்டர் அப்ரஷன்ஸ் இருக்கிறது. இதில் லோயர் ஆர்டர் வகையில், கிட்ட / தூர / சிலிண்டரிகல் பார்வைக் குறைபாடுகள் எல்லோருக்கும் ஒரே மாதிரியாகவே இருக்கும். ஆனால் ஹையர் ஆர்டர் வகையில் காணப்படுவது தனித்தன்மையானது. கைரேகைபோல ஒருவருக்கொருவர் மாறுபடும். இதையெல்லாம் கண்டறியத்தான் நவீன வகை ஆப்ஸ்கேர் மற்றும் அப்ரோ மீட்டர் கருவிகள் உதவுகின்றன. கருவிழியின் மீது இருக்கும் 9000 புள்ளிகளை 2 – 3 செகண்டுகளில் பார்த்துவிட்டு, பிரின்ட் செய்து கொடுத்துவிடும். கருவிழி வளைவு, அதன் தடிமன் (திக்னஸ்) இவை முக்கியமாகக் கிடைத்துவிடும். கருவிழியின் முன்புறம் பின்புறம் என எல்லா பாகங்களையும் விவரமாகக் கொடுத்துவிடும்.


இது, ரெடிமேட் சட்டை வாங்குவது போல் அல்லாமல், நம் குறைபாட்டுக்கு ஏற்ற சிகிச்சை பெற உதவுகிறது. நாங்கள் தேர்ந்தெடுத்த ஒரு சாஃப்ட்வேரை லோயர் ஆர்டர் / ஹையர் ஆர்டர் குறைபாட்டுக்கு ஏற்ப, அப்போதே தயாரித்து, கருவியுடன் இணைத்துவிடுவோம்.

கண்ணாடி போட வேண்டுமா, கான்டாக்ட் லென்ஸ் அணிய வேண்டுமா, லாசிக் சிகிச்சையை மேற்கொள்வதா, எல்லாமே ஸ்டேட் - ஆஃப் - தி - ஆர்ட் என்பார்களே, அப்படிப்பட்ட அதிநவீன வசதியோடு செய்துகொள்ள முடியும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, இவை எதுவுமே செய்து கொள்ள இயலாத நிலையில் விழிகள் இருந்தால், பயப்பட வேண்டாம்... அதற்கும் மாற்று முறையாக - ஃபேக்கிக் இன்ட்ரா ஆக்யுலர் லென்ஸ் இருக்கிறது. பார்வைக் கோளாறுகளை லாசிக் மூலம் சரிசெய்ய முடியாமல் அல்லது கருவிழியின் அமைப்பு லாசிக் சிகிச்சைக்கு ஏற்றதாக இல்லாமல் போகும்போது, ஃபேக்கிக் ஐஓஎல் சிகிச்சை மேற்கொள்ளலாம். மைனஸ் 25 அல்லது ப்ளஸ் 12 வரை துல்லியமாகச் சிகிச்சை அளிக்க முடியும். சில மணி நேரமே மருத்துவமனையில் தங்கியிருக்க வேண்டும். மறுநாளே எல்லா வேலைகளையும் பார்க்கலாம்!

தொழில்நுட்பத் துறையின் முன்னேற்றம் காரணமாக, காடராக்ட் சிகிச்சை பெற்றவர்கள் இன்ட்ரா ஆக்யுலர் லென்ஸ் பொருத்திக்கொண்டு, முழுமையான பார்வையைக் கண்ணாடி அணியாமலே பெறலாம். இவை மல்ட்டி ஃபோகல் ஐஓஎல் எனப்படும். தவிர, டெக்னிஸ் மல்ட்டி ஃபோகல் ஐஓஎல் இன்று பார்வைப் பரப்பை அதிகரித்திருப்பதுடன், ஓர் இருபது வயதுக்காரரின் பார்வைத் தரத்தையும் அளித்து விடுகிறது!" என்கின்றனர் டாக்டர் ராமமூர்த்தி, சித்ரா தம்பதி.

- சாருகேசி

ஒளியை நோக்கி...





கல்கி



2006 செப்டெம்பர் 3
விய ஆவணி 18
மலர் : 65
இதழ் : 5

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்.*

புலிகளின் பாய்ச்சல்; அனுதாபிகளின் கர்ஜனை!


“தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு குரலில் பேசிக் கொண்டிருந்தால் ஆகாது. ஒருமித்துக் குரல் கொடுத்தால்தானே இலங்கையில் பிளவுபட்டுக் கிடக்கும் தமிழ் இயக்கங்களுக்கு ஒற்றுமையை வலியுறுத்த நமக்குத் தார்மிக உரிமை இருக்கும்?'' என்று பேசியுள்ளார் கருணாநிதி.


இலங்கைப் பிரச்னை குறித்த ஒருமித்த கருத்து நம் தலைவர்களுக்குத் தேவை என்பது மிகச் சரியே! ஆனால் அந்தக் கருத்தின் வலிமையால் இலங்கைப் பிரச்னைக்கு அமைதித் தீர்வு காண்பதே நோக்கமாக இருக்க வேண்டுமேயொழிய, போரையோ, போராட்டத்தையோ மேலும் தூண்டுவது நோக்கமாகிவிடக்கூடாது.

துரதிர்ஷ்டவசமாக இன்று முதல்வரின் பேச்சிலும் சரி, இதர தமிழக அரசியல் தலைவர்களின் பேச்சிலும் சரி, அமைதித் தீர்வு என்னும் இறுதி நோக்குத் தொனியே இல்லை.

"தமிழகமே காஷ்மீராகிவிடும்'' என்று வைகோ மிரட்டினால், அதை முற்றிலும் கண்டனம் செய்வதற்குப் பதிலாக, வைகோவின் அறிக்கைக்கு வியாக்கியான விளக்கங்களைத் தருவதற்கு முற்படுகிறார் முதல்வர்!

இது ஆபத்தான போக்கு. இலங்கையில் இன்று யுத்தம் நடக்கிறது. கொத்துக் கொத்தாக மக்கள் (குழந்தைகள் உள்பட) செத்து மடிகிறார்கள். சாரி சாரியாக மக்கள் வீடும் வாழிடமும் இழந்து இடம்பெயர்ந்து அல்லாடுகிறார்கள். இலங்கையிலேயே வேறு புகலிடம் தேடுவோர் ஒருபுறமிருக்க, கூட்டம் கூட்டமாக அகதிகள் தமிழகத்துக்கு வந்தவண்ணமிருக்கிறார்கள். அவர்களுடைய கைரேகைகளைப் பதிவு செய்யும் அவகாசம்கூட





காவல்துறைக்கு இல்லை; அத்தனைக் கூட்டம்! இந்த அகதிக் கூட்டத்தினிடையே தீவிரவாதிகளின் ஊடுருவலுக்கும் நிச்சயம் இடமுண்டு.

இலங்கைக்கு மட்டுமின்றி தமிழ்நாட்டுக்கும் அபாயமானதொரு சூழ்நிலை இது. முதல்வரும் சரி, வைகோ முதலான இதர அரசியல் தலைவர்களும் சரி, இந்த அடிப்படை உண்மையை உணர்ந்து, இச்சூழலைத் தங்கள் அரசியல் இலாபங்களுக்காகப் பயன் படுத்திக்கொள்வதை நிறுத்த வேண்டும். தமிழீழ ஆதரவு முழக்கங்களும் அவ்வியக் கத்துக்கு மறைமுகமான அனுதாபம் தெரிவிக்கும் சொற்பொழிவுகளும் 'ஈழத்தமிழர் நலன்' என்ற போர்வையில் அரசியல் ஆதாயம் கருதியே இங்கு நடைபெறுகின்றன. அங்கே விடுதலைப்புலிகளின் பாய்ச்சல் என்றால், இங்கே புலி அனுதாபிகளின் கர்ஜனை!

இத்தருணத்தில் முதல்வர், மத்திய அரசின் கரங்களை பலப்படுத்த தமிழகத் தலை வர்களை ஒருங்கிணைப்பது அத்தியாவசியமாகிறது. சர்க்காரியா கமிஷனின் சிபாரிசுகள் அடிப்படையில் மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் தரும் ஆட்சி முறைத் திட்டம் இலங்கை அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய ஆட்சி முறையை அமல்படுத் தவும் ஏற்கவும் முறையே இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் நம்பிக்கையூட்டி யாக வேண்டும். இப்பணியை மட்டும் தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் ஒன்றுபட்டு மேற்கொள்வார்களேயானால், இலங்கைப் பிரச்னை மேலும் இரத்தமும் கண்ணீரும் பெருக் கெடுத்து ஓடாமல் ஒரு முடிவுக்கு வர வாய்ப்பிருக்கிறது.

நார்வே அமைதித் தூதர்கள் சாதிக்காததை தமிழ்நாட்டு அமைதிக் குழுவால் சாதித்து விட முடியுமா என்கிற கேள்வி எழும். நார்வே தூதர்களுக்கு இல்லாத உணர்வு ரீதியான பந்தம் தமிழ்நாட்டுத் தலைவர்களுக்கு இலங்கைச் சகோதரர்களுடன் உண்டு. இந்தப் பந்தத்தை அவர்கள் மெய்யாகவே மதித்துப் போற்றுவார்களேயானால், இனி ஒரு கணம் கூடத் தாமதியாமல் கருத்தொருமித்து ஒன்று சேரட்டும். தனி நாடு என்கிற அநியாயமான பிடிவாத கோரிக்கையைக் கைவிடும்படி விடுதலைப் புலிகளை வற்புறுத்தட்டும்; அமைதிப் பேச்சுவார்த்தைக்கு வழிவகுக்கட்டும்; தமிழர்களின் உரிமைகளை மதித்து, கூடுதல் அதிகாரங்களை வழங்க இலங்கை அரசை நிர்ப்பந்திக்கட்டும். அனைவரது குரல்களும் சேர்ந்து மத்திய அரசு மூலமாக ஒலிபெருக்கப்படும்போது, அதற்குத் தனியான ஆக்க சக்தி இருக்கும்; அதன் தார்மிக பலத்தில் அமைதித் தீர்வு மலரும். ○

ப்ளூட்டோவுக்கு

ஜூன் மாதத்தில் ஏழு வானியல் மேதைகள் சந்தித்து விவாதித்தார்கள். பிறகு ஹார்வர்டில் இரண்டு நாட்கள் விவாதம் தொடர்ந்தது. பின் சமீபத்தில் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அது, ப்ளூட்டோவை ஒரு கிரகமாக ஏற்றுக் கொள்ளலாம் என்பது. ஏன், என்னாச்சு?

ப்ளூட்டோவை ஒரு கிரகமாகக் கருதலாமா என்கிற பட்டிமன்றம் கடந்த ஒரு வருடமாகவே காரசாரமாக நடந்து வந்தது. கூடவே கூடாது என்பவர்கள் வைத்த வாதங்கள் : அது மற்ற கிரகங்களைவிட ரொம்பவும் சின்னது. அதோடு, அது செல்லும் பாதை மற்ற கிரகங்களிலிருந்து அதிகம் வளைந்திருக்கிறது.

வேடிக்கை என்னவென்றால், அறிமுகமானபோதே கிரக அந்தஸ்து பெற்றது ப்ளூட்டோ. 1905-ல் பெர்சிவன் லோவெல் என்ற விஞ்ஞானிக்கு ஒரு நெருடல் உண்டானது. "புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருந்த நெப்ட்யூன், வழக்கமான புவியீர்ப்பு விதிகளின்படி ஏன் நடந்துகொள்ளவில்லை?" யோசிக்க யோசிக்க அவருக்கு விடை புலப்பட்டது. 'நெப்ட்யூனுக்கு அருகே இன்னமும் கண்டுபிடிக்கப்படாத வேறொரு கிரகம் இருக்க வேண்டும்.' அந்த வேறொரு கிரகத்தை 1930, பிப்ரவரி 18 அன்று கண்டுபிடித்தார் க்ளைட் டோம்பாக் என்பவர்.

பிரிட்டனில் உள்ள ஒரு சிறுமிக்கு கிரேக்க, ரோம புராணக் கதைகளில் ரொம்ப ஆர்வம். புதிய கிரகத்துக்கு 'ப்ளூட்டோ' என்று பெயர் வைக்கலாமே என்று ஆசைப்பட்டாள். அவளது தாத்தா உடனே இந்த ஆசையை லோவெல் பரிசோதனைச்சாலைக்குத் தெரிவிக்க, அவர்களும் ஒப்புக் கொண்டனர். காரணம், ப்ளூட்டோ என்பது பாதாள உலகத்தின் அதிபதி. மிகவும் தள்ளியிருக்கும் ஒரு கிரகத்துக்கு அது பொருத்தமான பெயர் என்று விஞ்ஞானிகள் கருதினார்கள். தவிர, ப்ளூட்டோவின் சாத்தியக்கூற்றை முதலில் அறிவித்த விஞ்ஞானியான பெர்சிவன் லோவெல் என்ற பெயரின் இரு வார்த்தைகளின் முதலெழுத்துக்கள் (P.L.), ப்ளூடோவின் ஆங்கிலப் பெயரின் முதல் இரு எழுத்துகளாக வந்ததுதான்.

அப்போது ப்ளூட்டோ ஒரு கிரகம் என்பதில் எல்லாருமே ஒத்துப் போனார்கள். பூமியைப்போல ஐந்து மடங்கு அதிக அளவு கொண்டது ப்ளூட்டோ என்று அப்போது கருதப்பட்டது. நாளாக ஆக அப்படியில்லை என்பது நிரூபிக்கப்பட்டது. கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனதுபோல பூமியைச் சுற்றும் சந்திரனைவிட இது சின்னது என்றான பிறகு ப்ளூட்டோவுக்குக் கிரக அந்தஸ்து மறுக்கப்பட்டது.

சில மாதங்களுக்கு முன் UB313 என்ற வஸ்து கண்டுபிடிக்கப்பட்டது. இதுவும், ப்ளூட்டோவைப் போலவே 'குய்பர் பெல்ட்' என்ற பகுதியில் (சூரியப் பாதையின் வெளிமுனையில் உள்ள பகுதி இது)

• ப்ளூட்டோ கிரகம்



கண்டுபிடிக்கப் பட்டது. ப்ளூட்டோவை விடப் பெரியது இது.

இதைக் கிரகம் என்று ஒப்புக்கொள்ளலாம் என்று தீர்மானித்தபோது, அப்படியானால் ப்ளூடோவை ஏன் கிரகம் என ஒப்புக்கொள்ளக் கூடாது என்ற எதிர்க் கேள்வி எழுந்தது. எனவே 'கிரகம்' குறித்து வரையறுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது சர்வதேச வானியல்



என்னாச்சு?

குழுவுக்கு. சமீபத்தில் இப்படிச் செய்யப் பட்ட வரையறையின்படி 'கிரகம்' என்று ஒரு பொருள் அழைக்கப்பட வேண்டுமானால் அதற்குக் கீழே உள்ள தகுதிகள் இருக்க வேண்டும்.

'சுற்றுப்புறத்திலுள்ள பிறவற்றின் ஈர்ப்புகளைத் தவிர்க்க முடியுமளவுக்கு அதற்குள் போதிய பொருள் இருக்க வேண்டும். கிட்டத்தட்ட உருண்டை வடிவத்தில் இருக்க வேண்டும். ஒரு நட்சத்திரத்தைச் சுற்றிவர வேண்டும். அது ஒரு நட்சத்திரமாகவோ, ஒரு கிரகத்தின் கோளாகவோ இருக்கக் கூடாது.'

இந்தத் தகுதிகள் ப்ளூட்டோவுக்கு இருப்பதால் அதற்குக் கிரக அந்தஸ்து கிடைத்துவிட்டது. இனி அறிவியல் உலகத்தின்படி கிரகங்களின் எண்ணிக்கை 12 (கடைசியாகச் சேர்ந்தவை ப்ளூட்டோ, UB 313, சரான்). 'சரான் என்பது ப்ளூட்டோவின் ஒரு கோள். அப்படியிருக்க, அதை எப்படி கிரகங்களின் பட்டியலில் சேர்க்க முடியும்?" என்ற கேள்வி இப்போது எழுந்திருக்கிறது.

கிரகங்களை இரண்டாகப் பிரித்துப் பார்த்ததுண்டு. அவை : 'பூமியைப் போன்ற கிரகங்கள்' (புதன், வெள்ளி, பூமி, செவ்வாய்), பிரம்மாண்ட கிரகங்கள் (வியாழன், சனி, யுரேனஸ், நெப்ட்யூன்). இப்போது மூன்றாவதாக 'குட்டி கிரகங்கள்' என்னும் ஒரு பிரிவை உண்டாக்கி அதில் ப்ளூட்டோவைச் சேர்க்க இருக்கிறார்கள்.

ஜி.எஸ்.எஸ்.



உறவு தூங்கும் நேரம்!

கடிதம் - 1

சென்னை, 2004

ஸ்ரீராமஜெயம். எனது சகல மரியாதைக்கும் வணக்கத்துக்குமுரிய அன்னையாருக்கும், தந்தையாருக்கும் அநேக கோடி நமஸ்காரங்களுடன் உங்கள் புத்திரன் இராமஸ்வாமி எழுதிக்கொள்வது என்னவென்றால்,

நான் இங்கு நலமுடன் உள்ளேன். அங்கு நீங்கள் யாவரும் ஈஸ்வர கிருபையால் நலமாக இருப்பீர்கள் என எண்ணுகிறேன். தங்கை கோமுவும் தம்பி சுந்தாவும் சௌக்கியம்தானே? தவறாமல் பள்ளிக்கூடம் செல்கிறார்கள் அல்லவா?

என்னுடைய பட்டப்படிப்பில் நான் நன்கு கவனம் செலுத்தி வருகிறேன். வருகின்ற மே மாதத்தில் இறுதித் தேர்வு நடப்பதாக உள்ளது. முதல் மாணாக்கனாகத் தேர்ச்சியடைய நான் கடினமான முயற்சியை மேற்கொண்டுள்ளேன். எல்லாம்வல்ல அந்த ஈஸ்வரன் அருளாலும் உங்கள் எல்லோரது அனுக்கிரக ஆசீர்வாதத்தாலும் சிறப்பாகத் தேர்ச்சி பெறுவேன் என்று உறுதியுடன் நம்புகிறேன்.

பக்கத்து வீட்டுப் பாட்டியின் தேக சௌக்கியம் எப்படியுள்ளது? நமது பால்காரியின் வீட்டில் பசு இரண்டாவது கன்றை ஈன்றுவிட்டதா? ரங்கு மாமா அடிக்கடி வந்து போகிறாரல்லவா? கோயிலில் இந்த வருஷம் திருவிழா சிறப்பாக நடைபெற்றிருக்குமல்லவா? வேறு விசேஷங்கள் யாவை?

அனைவருக்கும் எனது வணக்கத்தையும் க்ஷேம லாபத்தையும் தயவுசெய்து தெரியப்படுத்தவும்.

முதல் வருட இறுதித் தேர்வுக்கான பரீட்சைக் கட்டணத்தை இம்மாத இறுதிக்குள் செலுத்த வேண்டியுள்ளது. எனவே, தங்களது ஆசீர்வாதத்துடன் விரைவில் அனுப்பித் தருமாறு வேண்டியும், அனந்தகோடி நமஸ்காரங்களை உங்கள் பாதாரவிந்தங்களில் சமர்ப்பித்தபடியும், என்றும் உங்கள் நலனையே நாடி பிரார்த்திக்கும்.

சுபம்.

உங்கள் அன்பு குமாரன்,
இராமஸ்வாமி

கடிதம் - 2

சென்னை, 2005

அன்புள்ள அப்பா,

நீங்களும் அம்மாவும் சௌக்கியம்தானே? இங்கே நானும் சௌக்கியம்தான்.

என்னுடைய செகண்ட் இயர் ஃபைனல் எக்ஸாம் மே மாதத்தில் வருகிறது. நான் நன்றாகவே படிக்கிறேன். நிச்சயமாக பாஸ் செய்து விடுவேன்.

பரீட்சை ஃபீஸை கடிதம் கிடைத்தவுடன் அனுப்பவும். வேறு விசேஷம் ஒன்றும் இல்லை. தம்பி தங்கையைக் கேட்டதாகச் சொல்லவும்.

நன்றி வணக்கம்.

இப்படிக்கு,
ராஜு

ஈமெயில் :

சென்னை, 2006

டியர் டாடி,

எப்படியிருக்கீங்க? ஃபைனல் எக்ஸாமுக்கு எக்ஸாம் ஃபீஸை உடனடியாக அனுப்பவும்.

எல்லோரையும் நான் கேட்டதாகச் சொல்லவும்.

தேங்க்ஸ்.


- ராஜ்


எஸ்.எம்.எஸ். :

டாட்,

நம் ஜாயின்ட் அக்கவுண்ட்டிலிருந்து ரூ.2000/- எடுத்துக்கொண்டு விட்டேன். அட்ஜஸ்ட் யுவர்செல்ஃப்.

- ஆர்.





கே.பி. பத்மநாபன்

பிரேமலதா விஜயகாந்த்! தே.மு.தி.கழகத்தின் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான விஜயகாந்தின் மனைவி. கணவரது எந்தவொரு செயலிலும் பின்னணியில் இருப்பது இவர்தான் என்று சொல்லப்படுகிறது. பிரேமலதா என்ன சொல்கிறார்? சந்தித்தோம்...

உங்கள் கணவரது விருத்தாசலம் தொகுதிக்கு நன்றி சொல்லப் போனீர்களே, மக்களிடம் வரவேற்பு எப்படி இருந்தது?

"நான் நன்றி சொல்வதற்காக முதன் முதலில் விருத்தாசலத்துக்குச் செல்லவில்லை. தேர்தலின்போது ஒரு மாதம் அங்கேயே தங்கியிருந்து ஒவ்வொரு வீதியாக, வீடாகப் போயிருக்கிறேன். என்னை தொகுதி மக்கள் தங்கள் வீட்டுப் பெண்போல அன்போடும், ஆசையோடும் உபசரித்தார்கள். அதேமாதிரிதான் நான் நன்றி சொல்லப் போனபோதும்."

மக்கள் தங்களுடைய எதிர்பார்ப்புகளைச் சொன்னார்களா?

"விருத்தாசலம் மிகவும் பின்தங்கிய தொகுதி. இதுவரை அங்கு மக்கள் பிரதிநிதியாக இருந்தவர்கள் அங்கு குறிப்பிடத்தக்க பயனுள்ள பணிகளை மக்களுக்குச் செய்யவில்லை. நாங்கள் செய்வோம் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அதையெல்லாம் சொன்னார்கள். கண்டிப்பாக எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம்."



"நானும் அரசியலுக்கு

உங்கள் கணவரின் அரசியல் பிரவேசத்துக்கு நீங்கள்தான் தூண்டுகோலா? இதை மனதில் வைத்துத்தான் நிறைய நற்பணிகள் செய்தீர்களா?

"ஒரு கணவரின் வளர்ச்சிக்கு உதவியாக இருப்பதில் என்ன தவறு? 1990-ல் எங்கள் திருமணம் நடந்த அன்றே நான் உணர்ந்து கொண்டேன், இவர் ஒரு 'மக்கள் தலைவர்' என்று. மூன்று நாட்கள் எங்கள் திருமண விழா நடந்தது. இலட்சக் கணக்கான ரசிகர்கள் வந்திருந்தனர். தொடர்ந்து மூன்று நாட்களும் கூட்டம்



குறையவேயில்லை. அப்போது நான் நினைத்தேன், 'எதற்காக இத்தனை மக்கள் இவரைச் சுற்றி? இவர்கள் இவரிடம் என்ன எதிர்பார்க்கிறார்கள்' என்று. அதனுடைய பிரதிபலிப்புதான் இன்று அவர் மக்களின் தலைவராக இருக்கிறார்.

ஆனால் இதையெல்லாம் கணக்கிட்டு நாங்கள் நற்பணிகள் செய்யவில்லை. என் கணவர் நடிகராக இல்லாமல் வெறும் விஜயராஜாக இருந்த காலத்திலும் அவருடைய வருமானத்திற்குட்பட்டு நிறைய உதவிகளைச் செய்திருக்கிறார். அவர் எப்போதுமே மக்களுக்கு, கஷ்டப்படுகிறவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டே இருப்பார்; செய்வார்."

எதிர்காலத்தில் அரசியலுக்கு வருவீர்களா?

"நாளை என்ன நடக்கும் என்று யாராலும் சொல்ல முடியாது. இப்போது அப்படியொரு எண்ணம் இல்லை. நாளை வரலாம், வராமலும் போகலாம்."

முதலமைச்சர் நாற்காலிதான் உங்கள் கணவரது கனவா?

"நிச்சயமாக இல்லை. அப்படி நினைத்திருந்தால் இந்தத் தேர்தலிலேயே தே.மு.தி.க. யாருடனாவது கூட்டணி வைத்திருக்கலாம். ஆனால் தன்னந்தனியாகத் தேர்தலைச் சந்தித்தோம். மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்பதே அவரு

வருவேன்!"

– விஜயகாந்த் மனைவி அதிரடி

டைய எண்ணம். அதைச் செயல்படுத்த ஒரு நடிகராக மட்டும் இருப்பது போதவில்லை. அதனால்தான் அரசியலுக்கு அவர் வந்தார். மக்களுக்கு நல்லது பண்ணுவதே நோக்கம், முதல்வர் நாற்காலி அல்ல."

தொழிற்கல்லூரியின் நிர்வாகி, நடிகர் மற்றும் அரசியல்வாதியின் மனைவி, குடும்பத் தலைவி... எப்படிச் சமாளிக்கிறீர்கள்?

இது புதுசு!



• 'மண்ணில் மக்கும் பிளாஸ்டிக்' அறிமுக விழாவில் ரவி... (நடுவில்)

மழை நீரை உட்புகவிடாமல் தடுத்து விடுவதோடு, மண் வளத்துக்கும் கேடு விளைவித்து வந்தன பிளாஸ்டிக்குகள். இனி இந்தத் தொல்லை இல்லை. 60லிருந்து 80 நாட்களுக்குள் மக்கி அழிவதோடு, சிறந்த உரமாகக் கூடிய மண்ணில் மக்கும் பிளாஸ்டிக் வகைகளை இந்தியாவிலேயே முதன் முறையாகக் கண்டுபிடித்திருக்கிறது மகாராஷ்டிரா மாநிலம், நாக்பூரிலுள்ள பயோடெக் நிறுவனம். கண்டுபிடிப்பாளர் ரவி ஒரு தமிழர். சென்னையில் இந்தப் பிரத்யேக பிளாஸ்டிக் தொழிற்சாலையை அமைக்கவும் திட்டமிட்டு வருகிறார்கள். தமிழகத்தில் இந்தப் பிளாஸ்டிக் விற்பனை உரிமையை க்ரீன் இந்தியா பயோடெக் நிறுவனத்தின் இயக்குநர் ஏ.ராஜ்பென்னி மற்றும் எஸ்.மணிகண்டன் இருவரும் பெற்றுள்ளார்கள்.

- மஞ்சுளா

"எனக்குக் கஷ்டமாக இருப்பதாகத் தோன்றவில்லை. திட்டமிட்டுச் செயல்படுவதால் நிறைய நேரம் கிடைக்கிறது. வெறும் நான்கு மணி நேரம் மட்டுமே தூங்கி, நாட்டுக்காக உழைத்த பெரிய தலைவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அப்படிப் பார்க்கும்போது இது ஒன்றும் பெரிய விஷயமில்லை."

உங்கள் கணவருடைய அரசியல் பிரவேசம் குறித்துப் பெருமைப்படுகிறீர்களா? கவலைப்படுகிறீர்களா?

"இதில் கவலைப்படவோ, பயப்படவோ எதுவுமில்லை. மக்கள் சேவையைத்தானே அவர் விரும்புகிறார். குறைந்த விலைக்கு ரேஷன் அரிசி பற்றி முதன்முதலில் தே.மு.தி.க.தான் பேசியது. ஆனால் அது எப்படியோ இன்று சாத்தியமாகிவிட்டது. ரேஷன் பொருட்களை பாக்கெட் போட்டுக் கொடுக்க வேண்டும் என்று சட்டசபையில் பேசியதும் ஏழை மக்கள் பயனடைய வேண்டும் என்ற நோக்கத்தில்தான். சட்டசபைக்கு எந்த வித பந்தாவும் இல்லாமல் தனியாகச் செல்கிறார். தன் கருத்துகளைத் தைரியமாக முன் வைக்கிறார்... கண்டிப்பாக பெருமைப்படுகிறேன்."

ஒரு அரசியல்வாதியாக உங்கள் கணவரை எப்படிப் பார்க்கிறீர்கள்?

"மிகவும் தைரியமானவர். ஏழை மக்களின் தேவையறிந்து, அவர்கள் கஷ்டம் புரிந்து அவர்களுக்கான கோரிக்கைகளைச் சட்டசபையில் பேசுகிறார். எளிதில் செயல்படுத்தக்கூடிய திட்டங்களைப் பேசுகிறார்... நாட்டில் வறுமையே இருக்கக் கூடாது என்று உண்மையிலேயே நினைக்கிறவர். அதனால்தான் ஆகஸ்ட் 25 – அவர் பிறந்த நாளை வறுமை ஒழிப்பு நாளாக அறிவித்துக் கொண்டாட இருக்கிறார். உண்மையாகச் செயல்படுகிறார்."

இன்றுள்ள கட்சிகளுக்கு தே.மு.தி.க. எவ்வாறு மாற்றாக இருக்கும்?

"மக்களுக்காக, மக்களில் ஒருவராக இருந்து அவர்களின் தேவைகளைச் செய்ய வேண்டும். அதன் முதல்படிதான் 'வறுமை ஒழிப்பு தினம்'. முதலில் எல்லோருக்கும் நல்ல உணவு, உடை, வீடு, கல்வி, மருத்துவம் இந்த ஐந்தும் கிடைக்க தே.மு.தி.க. எல்லா வழிகளிலும் உழைக்கும். இதை முறைப்படி செய்தாலே மற்றவர்களைவிட தே.மு.தி.க. மாற்றாக இருக்கும்."

இப்படியொரு வாழ்க்கை அமையும் என என்றாவது நினைத்தது உண்டா?

கடவுள் எனக்குக் கொடுத்த மிகப் பெரிய வரம் (கண் கலங்குகிறார் சந்தோஷத்தில்). எல்லாரையும் போல நானும் அவரோட ஒரு ரசிகை, அவ்வளோதான். ஆம்பூர் சர்க்கரை மில்லில் வாழ்ந்த காலத்தில் ஒரு போதும் நான் நினைத்துப் பார்த்தது இல்லை, இவ்வளவு பெரிய நடிகரை என்பதைவிட, இவ்வளவு அருமையான மனிதரை நாம் திருமணம் செய்து கொள்வோம் என்று. இது என் கடவுள் நம்பிக்கைக்குக் கிடைத்த வரம். வேறென்ன சொல்ல..."

- சுகந்தி ஜி.பாரதி

படம் : பொள்ளாச்சி சுந்தரம்

ஸ்வாமியே சரணம் ஐயப்பா

சஷ்டியப்த பூர்த்தி

கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களின் தமையனார் பேரன் டி.ஆர். ரங்கநாதன் (Retd. Chief Manager, Indian Bank) & திருமதி ஆர். சியாமளா தம்பதியின் சஷ்டியப்த பூர்த்தி வைபவம் 9.8.2006 அன்று சென்னையில் மகன் ஆர். முத்துக்குமார், மருமகள் கே. காவேரி முன்னின்று நடத்த, வெகு விமரிசையாக நடைபெற்றது. சுற்றமும், நட்பும் சூழ வந்திருந்து வாழ்த்தி மகிழ்ந்தனர். வாழ்க தம்பதி.



உலகப் புகழ் பெற்ற மேஜிக் நிபுணரான பி.சி. சர்க்காரின் மகனும், பி.சி.சர்க்கார்- ஜூனியரின் தம்பியுமான பி.சி.சர்க்கார்-யங், முப்பது நாட்கள் சென்னை கலைவாணர் அரங்கில் தமது மேஜிக் ஷோவை நடத்துகிறார். கூடவே அவரது மகன் பௌருஷ் என்கிற பி.சி.சர்க்கார்-மாஸ்டரும் வந்திருக்கிறார். இவரது குழுவில் மொத்தம் இருபது பேர் உள்ளனர்.

'உங்கள் அண்ணன் பி.சி.சர்க்கார் - ஜூனியர் அளவுக்கு நீங்கள் பிரபலமாகவில்லையே, ஏன்?" என்றால் சிரிக்கிறார் யங்.

"உண்மையில் என் தந்தை சர்க்கார் - சீனியர் என்னைத்தான் தம்முடைய மேஜிக் வாரிசாக முடிவு செய்து, ஏழு வயதில் என்னை மேடையில் அறிமுகப்படுத்தினார். அவரிடமிருந்து நானும் நேரிடையாக மேஜிக் கற்றுக்கொண்டேன். ஆனால் நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது, என்.சி.சி. விமானப் படையில் இலவசமாக விமானம் ஓட்டும் பயிற்சி பெறும் வாய்ப்புக் கிடைத்தது. எனவே விமான ஓட்டியாவதிலேயே என் முழு கவனமும் சென்றது. கொல்கத்தாவைச் சேர்ந்த சரக்கு விமானப் போக்குவரத்து நிறுவனத்தில் கோ-பைலட்டாகப் பணிபுரிந்தேன். வானில் பறப்பது என் அம்மாவுக்குப் பிடிக்கவில்லை. அந்த வேலையை விட்டு விலகி, எனக்கு நடனத்தில் இருந்த ஆர்வம் காரணமாக, பிரபல நடனக் கலைஞர் உதயசங்கரின் குழுவில் சில ஆண்டுகள் இருந்தேன். அதன்பிறகே நான் முழுநேர மேஜிக் நிபுணரானேன். சர்க்கார் பரம்பரையில், எட்டாவது தலைமுறையைச் சார்ந்த என் மகன், இப்போது என்னுடன் மேடையில் இடம்பெறுகிறான். எனக்கும் உலகம் முழுக்க ரசிகர்கள் இருக்கிறார்கள். நானும் பல்வேறு நாடுகளுக்கும் சென்று மேஜிக் காட்சிகள் நடத்துகிறேன்.

ஒருமுறை ஜப்பானில் ஒரு பெண்ணை, மின் ரம்பம் கொண்டு இரண்டு துண்டுகளாக அறுக்கும் மேஜிக்கை செய்து கொண்டிருந்தேன். எதிர்பாராத விதமாக, ரம்பத்தை இயக்கும் மின்சார மோட்டாரில் ஏதோ கோளாறு ஏற்பட்டு நின்று போய்விட்டது. ஒரு கணமும் தாமதிக்காமல், அடுத்த வினாடியே மேடையின் பின்புறம் வைத்திருந்த ஒரு நீளமான கைரம்பத்தைக் கொண்டு வரச் செய்து, அதனைப் பயன்படுத்தி, பெண்ணை இரு துண்டுகளாக்கும் மேஜிக்கை எந்தவிதமான தடையும் இல்லாமல் செய்து முடித்தேன். இது எவ்வளவு பெரிய ரிஸ்க் என்பது எனக்குத்தான் தெரியும். அதை இப்போது நினைத்தாலும், என் இதயம் ஒரு கணம் நின்று துடிக்கும்'' என்று சிலிர்க்கிறார் யங்.



• கோபிநாத் முதுகாடு

யங் போலவே பி.சி.சர்க்காரின் சிஷ்யரான கோபிநாத் முதுகாடும் பிரபல மேஜிஷியன்தான். அண்மையில் இவர் புரிந்த ஒரு மேஜிக், எல்லோரையும் ஆச்சர்யத்தில் மூழ்க வைத்துவிட்டது.

முதல் நாள் கோபிநாத், மறுநாளைய நாகர்கோவில் பதிப்பு முக்கிய தினசரிகளின் தலைப்புச் செய்திகளை முன்னமே எழுதி, பார்வையாளர்



• பி.சி. சர்க்கார் யங் (இடது)

கள் முன்னிலையில் பேங்க் லாக்கரில் வைத்துவிட்டார். அடுத்த நாள் மாவட்ட ஆட்சித் தலைவர் கனில்பாலி வால் முன்னிலையில் லாக்கர் திறக்கப்பட்டுப் பார்க்க, அன்றைய தினசரிகளின் தலைப்புச் செய்திகள் அத்தனையும் கோபிநாத் முந்தைய நாள் எழுதியவை! 'எப்படி இது சாத்தியம்?' என்றால் "அதுதான் மேஜிக்" என்றவர், தம்மைப் பற்றிக் கூறினார்.


"மிகச் சின்ன வயதில் என் தந்தையார் அவர் மடியில் என்னை வைத்துக் கொண்டு சொன்ன பல கதைகளில் மேஜிக்கும் ஒன்று. எனக்குக் கிடைக்கும் இந்தப் புகழுக்கு என் குருநாதர் எனக்குக் கற்றுத் தந்த பாடம்தான் அடிப்படை.

எனக்குக் கிடைத்த முதல் வாய்ப்பு, நீண்ட கயிற்றைத் துண்டாக்கும் நிகழ்ச்சி. பார்வையாளர்கள் வரிசையில் இருந்த ஒரு பையனை (என் வயது) மேடைக்கு அழைத்துக் கயிற்றை இழுக்கச் சொன்ன போது, அவன் நான் கையில் மறைத்து வைத்திருந்த மற்றொரு கயிற்றைப் பார்த்து விட்டு, அந்தக் கயிற்றையும் இழுத்து விட்டு, பொதுமக்கள் முன்னிலையில் நான் கையில் மறைந்து வைத்திருந்த கயிற்றைக் காட்டி, 'எல்லாம் ஏமாற்று வேலை' என்று சொல்ல, 'என் மேஜிக் வாழ்க்கையே முடிந்துவிட்டது. இதுதான் முதல் மேடையும், கடைசி மேடையும்' என்று கண்ணீருடன் மேடையின் பின்பக்கம் ஓடினேன். எனது நிலையைப் பார்த்த என் குருநாதர், 'உன்னால் முடியும்!' என்று கூறி, பந்துகளை என்னிடம் தந்து மீண்டும் மக்கள் முன் நிறுத்தி மேஜிக்கைத் தொடர செய்தார்.

சர்க்காரிடம் நான் பல விஷயங்களைக் கற்றுக் கொண்டேன். 1998-ல் எனது அகடமியை நிறுவி, சமூகத்தில் துன்பப்படும் மக்களுக்கு உதவ வேண்டும் என்ற உணர்வில் ஒரு மேஜிக் குழுவை ஏற்படுத்தினேன். 1998-ல் என்னுடைய குழுவுக்காக சக்தி நிதிநிறுவனத்திடமிருந்து கடன் வாங்கி பஸ் வாங்கினேன். அப்போது அதிக நிகழ்ச்சியும் இல்லை. குழு உறுப்பினர்களைக் காப்பாற்ற வேண்டும். பஸ்ஸுக்கான தவணைப் பணத்தைக் கட்ட முடியவில்லை. என்ன செய்வதென்று அறியாது தற்கொலைக்குக் கூட முயற்சி செய்தேன்" என்று கூறும் கோபிநாத், "மேஜிக் என்பது ஒரு விஞ்ஞானம், கணக்கு. இதில் முக்கியம் நேரத்தைக் கவனமாகக் கைகொள்வது. உதவியாளரின் பணியும் மிக முக்கியமானது. இது மிகக் குறைந்த நேர இடைவெளியில் செய்யும் தந்திரம். அப்போதுதான் பார்வையாளர்களை நம் பக்கம் கட்டிப்போட முடியும்" என்கிறார்.

– எஸ். சந்திரமௌலி, தாகூர்

நின்று துடித்த இதயம்!



பொதுவாக இலக்கிய உலகில் நடக்கும் சண்டைச் சச்சரவுகளை இரண்டுவிதமான கோணங்களில் பார்க்கலாம். ஒன்று, நவீன இலக்கியத்துக்கு வெளியே இருப்பவர்களின் பார்வை. இவர்கள் நவீன இலக்கியவாதிகள் என்றாலே சச்சரவுகளில் ஈடுபடுகிறவர்கள் என்றொரு பிம்பத்தை ஆழமாக உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

நவீன இலக்கியத்தின் அழகியல் மற்றும் வாழ்வியல் சார்ந்த கேள்விகளுக்கும், சிந்தனைத் தளத்துக்கும் ஈடுகொடுக்க முடியாதவர்கள், அதைப் புறந்தள்ளுவதற்காக இந்தச் சச்சரவுகளை ஒரு கேளிக்கைப் பொருளாக்குகிறார்கள்.

பெரும்பாலான வெகுஜனப் பத்திரிகைகளும், ஊடகங்களும் இலக்கியவாதிகள் அல்லது சிறு பத்திரிகைக்காரர்கள் என்றாலே கோமாளிகள், பொறுப்பற்றவர்கள் என்கிற சித்திரத்தைத் தொடர்ந்து ஏற்படுத்தி வருகின்றன. இந்தச் சித்திர உருவாக்கம் என்பது நூற்றாண்டுகால நவீன தமிழ் இலக்கியவாதிகளைச் சிறுமைப்படுத்திக் கொச்சைப்படுத்துகிற செயலாகும்.

இரண்டாவதாக, நவீன இலக்கிய உலகுக்குள் இருந்து பார்ப்பது. நவீன தமிழ் இலக்கிய வரலாற்றை அல்லது சிறுபத்திரிகை வரலாற்றை எடுத்துப் பார்த்தால், அங்கே மேற்கொள்ளப்பட்டிருக்கும் சாதனைகளும், தியாகங்களும் கணக்கற்றவை.

தமிழ் மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கு இந்தப் படைப்பாளிகளும் பத்திரிகைகளும் ஆற்றியிருக்கும் பங்கு மகத்தானது. தமிழில் புதிய இலக்கிய வடிவங்களிலும், தத்துவக் கோட்பாடுகளிலும் மொழிரீதியாக நடந்த மாற்றங்கள் அனைத்தும் சிறு பத்திரிகை இயக்கத்தின் வழியாகவே நடந்திருக்கின்றன.

இந்த இயக்கத்துக்குள் சில தனிமனிதர்களிடையே ஏற்படும் மோதல்களும், சச்சரவுகளும் புறக்கணிக்கப்பட வேண்டிய தாற்காலிகமான, அற்ப விவகாரங்களே. எல்லாத் துறைகளிலும்

“இங்கே நடப்பது தன்னைத்தானே முன்னிறுத்திக் கொள்ளும் அற்பத்தனம்!”

சிற்றிதழ்களின் தேடல்
இலக்கியமா... சண்டையா?

இவர்களைப்போன்ற 'தன்முனைப்பு' கொண்ட நபர்கள் இருந்து கொண்டுதான் உள்ளார்கள்.

இதெல்லாம் ஒரு நோய்கூறான செயல் பாட்டின் விளைவாகும். இவ்வாறான சச்சரவுகளை உருவாக்குபவர்கள் ஊடகங்களில் பரபரப்பைத் தேடிக் கொள்பவர்கள். இவர்கள் வெகு சிலரே. தமிழ் இலக்கிய இயக்கத்தில் இந்த அற்ப சச்சரவுகளை உருவாக்குபவர்களுக்கு முக்கிய இடமெதுவுமில்லை.

இந்தச் சச்சரவுகள் கருத்தியல் சார்ந்த அல்லது நம்பிக்கை சார்ந்த முரண்பாடுகளாக இருப்பின், அவற்றுக்கிடையே ஓர் உரையாடலையும், முரண்பாடுகளுக்கு இடையே ஓர் இணக்கத்தையும் கண்டறிவது சாத்தியம். ஆனால் இங்கே நடப்பது தன்னைத்தானே முன்னிறுத்திக்கொள்ளும் அற்பத்தனம். எதிரிகளை அழிக்கும் மூர்க்கம். இதற்குப் பின்னால் இருப்பது இலக்கிய நோக்கமோ, சமூக நோக்கமோ இல்லை. 'நீ எனக்கொரு சிம்மாசனம் கொடு' என்கிற ஆவேசம். இந்த மனோபாவம் கொண்டவர்களோடு உரையாடல் சாத்தியமில்லை.

சிற்றிதழ் உலகில் பெண் உடல்மொழி, பெண்மொழி எழுத்துகளும் சர்ச்சைக்குள்ளாக்கப்படுகின்றன. பெண்கள் தங்கள் உடலை ஒடுக்கப்பட்ட வெளியை, உடைந்த மனோரதங்களை எழுதுவதற்கு முழுக்க முழுக்க உரிமை உண்டு. ஆனால் இதை ஆபாசம் என்பவர்கள் மொழி மற்றும் இலக்கியம் குறித்துத் தெளிவான பார்வை இல்லாதவர்கள். தமிழில் இதனை ஏராளமான பெண்கள் எழுத ஆசைப்படுகிறேன். ஆனால் இன்று எழுதக்கூடிய பெண்களின் மனோபாவம் மிகவும் சங்கடம் தரக்கூடியதாக உள்ளது. அவர்களுக்கு நவீன இலக்கியத்தில் ஆழமான புரிதல் இல்லை. வெறும் அதிர்ச்சி எழுப்புவதற்காக மட்டுமே பாலியல் சார்ந்த புனைவுகளையும், சொற்களையும் தங்கள் எழுத்துகளில் பயன்படுத்துகிறார்கள். இதுவும்கூட ஒரு சச்சரவாகத்தான் பார்க்கப்படுகிறது.

வெகுஜன ஊடகங்கள், சர்ச்சைகளை உருவாக்கி, புனைவுகளைக் கேளிக்கைப் பொருளாக்குகின்றனர். இவர்களுக்கு இலக்கியத்தில் நம்பிக்கை இல்லை என்பதற்கு இவர்கள் மூர்க்கத்தனமாக ஆற்றும் எதிர்வினையே உதாரணம். இம்மாதிரியான விமர்சனங்களில் தன்மை 'மையப்படுத்த' வேண்டும் என்கிற ஆவலே அதிகம். அவர்களின் பெண்மொழி எழுத்துகள் எவ்வித இலக்கியப் பார்வையோ, வாழ்வியல் நோக்கமோ அற்ற தளத்திலேயே எழுதப்படுகின்றன.

இப்படியெல்லாம் இல்லாமல் ஒரு படைப்பை, படைப்பாக மட்டுமே பார்க்கும் மனோபாவம் நம்மிடையே மலர வேண்டும். அப்போதுதான் சிற்றிதழ்களின் இலக்கிய விசாலம் கண்களுக்குப் புலப்படும். சண்டைகள் எழுந்தாலும் அவற்றைப் புறந்தள்ளிவிட்டு ஆழ்ந்திருக்கும் இலக்கியத்தைப் பார்த்தல் யாவருக்கும் நல்லது.

சந்திப்பு : **சுகந்தி ஜி.பாரதி**
படம் : **ஸ்ரீஹரி**

"சாயந்தரம் சீக்கிரம் வந்துருவீங்க இல்லியா?" என்றாள் சௌம்யா.

"அதிகபட்சம் ஆறே கால். வெயிட் பண்ணு... வந்துருவேன்" என்றான் அரவிந்த்.

"ஆங்... மறந்தே போச்சு... அப்பாவுக்கு ரூபா அனுப்பிட்டீங்களா? லெட்டர் வந்து ஒரு வாரம் ஆயிடுச்சு" என்று சௌம்யா தொடங்கும்போதே, அரவிந்தின் முகம் மெதுவாகச் சிவக்கத் தொடங்கியது.

"அப்பாவா! அவர்தானே நம்ம காதலுக்குக் குறுக்கே நின்னார்..."

"அய்யோ, பழையதை ஏன் கிளறுறீங்க?"

"ஆளை வைச்சு நம்மைப் பிரிக்கப் பார்த்தார்..."

"போதும், நிறுத்துங்க. அதெல்லாம் முடிஞ்சுதான் நம்ம கல்யாணம் பண்ணிக்கிட்டு, அமர் பொறந்து மூணு வருஷம் கூட ஓடிட்டுதே..."

"என்னால மறக்க முடியலே!"

"நான் அதெல்லாம் நினைவு வச்சுக் கலே."

"சொத்துல நயா பைசா கிடையாதுன்னார்!"

"நமக்கு இப்ப அவரோட சொத்தா தேவை? பெரியவங்க ஆசிதான் வேணும்... நீங்க செக்கை எழுதி வைங்க... எனக்கு ஒரு சந்தேகம்!"

"ஜஸ்வந்த்சிங் சொல்ற மாதிரி உண்மையாவே அமெரிக்க உளவாளி இருந்தாரான்னா?"

"கடவுளே, கிண்டல் பண்ண இதுவா நேரம்?"

"பிரதமர் மன்மோகன்சிங்கா, சோனியாவான்னா?"


"அய்யோ! என்னோட சந்தேகம், நீங்க ஏற்கெனவே உங்க அப்பாவுக்கு யார் கிட்டேயாவது பணம் கொடுத்து அனுப்பிச்சிருப்பீங்களோன்னுதான்!"

"நெவர். உனக்குத்தான் அவர் மேல இரக்கம், பச்சாதாபம் எல்லாம். எனக்குத் துளிகூடக் கிடையாது."

"ஓ.கே. செக் எழுதி வையுங்க. நான் பணம் அனுப்பற வழியைப் பார்க்கறேன்!"

"உன்கிட்டே சொல்லிப் பிரயோசனம் இல்லே. கொடு செக் புக்கை!"

சௌம்யா காரை வீட்டு வாசலில் நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்தபோது, வேலைக்காரர்தான் "வாங்கம்மா" என்று கூப்பிட்டார்.



உள்ளே இருந்து வந்த அரவிந்தின் அப்பா, "யாரு, சௌம்யாவா?" என்றார்.

"நல்லா இருக்கியா?"

"நல்லா இருக்கேன் மாமா. நீங்க எப்படி இருக்கீங்க?"

அரவிந்தின் அப்பா அவளை ஏறிட்டுப் பார்த்தார். அவள் குரலில் அன்பு வெளிப்பட்ட மாதிரி தெரிந்தது.

சித்தார்த்

"செக் கொண்டு வந்திருக்கேன். பணம் வேணும்னு கேட்டீங்களே? அரவிந்த் கொடுத்துட்டு வரச் சொன்னார்..."

"அவன் கொடுத்திருக்க மாட்டானே?"

"இல்லே மாமா, அவர்தான் கொடுத்தார்!"



வேண்டியதுதானே?"

"அப்படி இல்லே. நீ கொடுக்க வேணாம்னு சொல்லியிருந்தா அவன் சரின்னுருப்பானே!"

சௌம்யாவுக்குக் குழப்பமாயிருந்தது. "நான் எதற்குத் தடுக்கணும்?"

"அரவிந்தோட பணம் அனாவசியமா போகுதேன்னு தோணியிருக்குமே உனக்கு?"

"எனக்கு அப்படி எதுவுமே தோணலே. அப்பா - மகன் இரண்டு பேருக்கு நடுவுலே நான் ஏன் குறுக்கே தலையை நீட்டணும்?"

"ஒரு லட்ச ரூபாம்மா!"

"இருக்கட்டுமே?"

"சரி, கொடுத்துட்டுப் போ. தேங்க்ஸ்னு சொன்னதா அரவிந்த்கிட்ட சொல்லு!"

"சரி மாமா!"

சௌம்யா அங்கிருந்து வெளியே வந்தாள். எதற்கு இவர் இத்தனை கேள்விகள் கேட்டார் என்று கொஞ்சம் குழப்பமாக இருந்தது.

அரவிந்த் - சௌம்யா திருமணம் நடப்பதற்குக் குறுக்கே நின்றார். அவர்கள் காதலை முறிப்பதற்கு எத்தனையோ பாடுபட்டார்... பணத்துக்கு ஆசைப்பட்டுத்தான் அரவிந்தை அப்படி விழுந்து விழுந்து காதலித்தாள் என்று அரவிந்திடமே எத்தனை வாக்குவாதம் நடத்தினார்...

"பணத்துக்கு மட்டுமே ஆசைப்பட்டிருந்தால், நான் கேட்ட உடனே

அரவிந்தின் அப்பா!

"ஒரு லட்சம் கேட்டிருந்தேனே?"

"ஆமா. ஒரு லட்சத்துக்குத்தான் செக் கொடுத்திருக்கிறார்."

"அவனா கொடுத்தான்?"

"ஆமா... அவர்தான் கொடுத்தார்."

"சரி, நீ தடுத்திருப்பியே?"

"நான் ஏன் தடுக்கணும்? அவர் உங்க பிள்ளை. நீங்க கேட்டா அவர் கொடுக்க

கணவனிடமிருந்து செக்கை வாங்கிக் கொண்டு வந்து கொடுத்திருக்க மாட்டாள்!" என்று அரவிந்தின் அப்பா வாய் விட்டுச் சொன்னதை வேலைக்காரன் சற்று வியப்போடு பார்த்தான்.

ஆனால் அந்த செக்கை அவர் நாலாக - எட்டாகக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டதை வேலைக்காரன் கவனிக்கவில்லை.

திருக்குறள் எங்கே?

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளில் திருக்குறள் எழுதி வைக்கப்பட்டு வந்தது. இதனைப் படிக்கும் அனைவருக்கும் திருக்குறள் மனத்தில் பதிந்து, அதன் மகத்துவம் புரிந்தது; வாழ்வு சிறந்தது. ஆனால் சமீபகாலமாக, குறள் பலகை இருந்த இடங்களில், வணிக விளம்பரப் பலகைகள் இடம்பெற்று வருகின்றன. மறுபடியும் திருக்குறளைப் பேருந்துகளில் இடம்பெறச் செய்து, அதன் பொருளைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதி வைக்க வேண்டும். இதனால் தமிழர்தம் வாழ்வு சிறப்பது உறுதி. கவனிக்குமா, போக்குவரத்துத் துறை?

- நீல.கணபதி, சென்னை - 116

உயிர் கொடுங்கள்!

நமது கலாசாரத்தை, பண்பாட்டைக் கட்டிக்காப்பதில் கிராமியக் கலையின் பங்கு மிக, மிக முக்கியமானது. இன்று சிதைந்து, சின்னா பின்னமாகி வரும் இந்தக் கிராமியக் கலையைக் காப்பாற்ற மத்திய அரசு, கிராமியக் கலைஞர்கள் கலைநிகழ்ச்சி நடத்தச் செல்லும்போது, நிகழ்ச்சியை நடத்துபவர்களின் ஒப்புதலைப் பெற்று அவர்கள் புகைவண்டியில் இலவசமாகச் சென்றுவர (300 கி.மீ. தூரத்துக்கு மேல் இருந்தால்) அனுமதி கொடுக்கிறது. ஆனால் கிராமியக் கலைகள் பெருகி உள்ள தமிழ்நாட்டில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இவர்களுக்கு இலவச அனுமதி கிடையாது. எனவே நசிந்து வரும் இந்தக் கிராமியக் கலைக்கு உயிரூட்ட, கிராமியக் கலைஞர்கள் நிகழ்ச்சிக்குப் போகும்போது அரசுப் பேருந்துகளில் இலவச அனுமதி கொடுத்தால் நன்றாக இருக்கும். கவனிப்பார்களா?


- டி.எல்.ரெட்டி, வேலிடுபட்டி


தமிழிலும் தேவை!


நான் அண்மையில் வாஷிங் மெஷின் ஒன்று வாங்கினேன். கூடவே Owners Instruction என்று சில விவரங்களைக் கொடுத்து இருந்தார்கள். அதில் ஆங்கிலம், ஹிந்தியில் மட்டுமே விவரங்கள் இருந்தன. ஆங்கிலமும் ஹிந்தியும் எல்லோருக்கும் தெரியும் என்று கூறிவிட முடியாது. அந்தந்த மாநிலத்தின் மொழியிலும் உபயோகிக்கும் முறையைச் சொன்னால்தான் எல்லோரும் புரிந்து கொள்ள சௌகர்யமாக இருக்கும். வீட்டு உபயோகப் பொருள்கள் தயாரிக்கும் கம்பெனிகள் இதை உணருமா?

- ஜெயந்தி சிவகுமார், ஏற்காடு









ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ ஸமேத ஸ்ரீ ஸற்குணேச்வர ஸ்வாமி திருக்கோயில்
ஸ்ரீ ஸற்குணேச்வரபுரம், கருவேலி - 609 501.

ஆவணி கடை ஞாயிறு தீர்த்தவாரி உற்சவம்

நாள்: வ்யய வருடம் ஆவணி மாதம் 25-ஆம் நாள் ஞாயிறு 10.09.2006

அன்புடையீர்,

முக்தித் தலமாம் கருவிலியில் நிகழும் வ்யய ஆண்டு ஆவணித் திங்கள் 25ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (10.9.2006) அன்று ஆவணிக் கடைஞாயிறு தீர்த்தவாரி உற்சவம் கீழ்க்கண்ட நிரலின்படி நடைபெற இருக்கின்றது. அன்பர்கள் அனைவரும் பங்கு கொண்டு இறையருள் பெற வேண்டுகிறோம்.

நிகழ்ச்சி நிரல்

காலை	மணி	7 : 00	திருக்குளத்தில் தீர்த்தவாரி
"	"	8 : 00	கோ பூஜை, மஹா கணபதி ஹோமம்
"	"	9 : 00	கடஸ்தாபனம், மஹா ஸங்கல்பம்
"	"	9 : 30	மஹாந்யாஸத்துடன் ஸ்ரீ ருத்ர பாராயணம் ஆரம்பம்
பகல்	மணி	11 : 30	ஸ்ரீ ருத்ர ஹோமம் ஆரம்பம்
"	"	12 : 30	வஸோர்தாரா, தீபாராதனை
"	"	1 : 00	ஸ்வாமி அம்பாளுக்கு மஹாபிஷேகம்
"	"	1 : 30	மஹா தீபாராதனை

பொருளாகவோ, பணமாகவோ நன்கொடை அனுப்ப வேண்டிய, மேற்கொண்டு விவரங்கள் அறிய அணுகவேண்டிய முகவரிகள்:

G. குஞ்சிதபாதம், FCA.,
G. நடேசன் & Co.,
டபீர் மேலத்தெரு,
கும்பகோணம்-612 001
போன்: 0435 2420047

G. கண்ணன்,
D/127-A, ராஜமன்னார் சாலை,
கே.கே.நகர்,
சென்னை -78.
போன்: 044-24836495

V.L. நாராயண சாஸ்திரிகள்,
25/1 சுப்பாரெட்டித் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033.
போன்: 044-24897125

என்றும் இறைபணியில்

Dr. V. கிருஷ்ணமூர்த்தி
பரம்பரை அறங்காவலர்

ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா (Regd).
மற்றும் கிராமவாசிகள்

பொன். சிவசங்கரன் M.A. நிர்வாக அதிகாரி

இன்றைய உலகம் இயந்திர கதியில் இயங்கிக் கொண்டிருக்கிறது. எல்லோருக்கும் அவரவர் சுகமே முக்கியமாகி விட்டது. தன்னலமில்லாத அன்பு என்பது மிகவும் அரிய விஷயமாகி விட்டது.

அம்மாவுக்கு உலகின் பல்வேறு நாடுகளிலும் பக்தர்கள் உண்டு. அவர்களுடைய வேண்டுகோளின்படி அம்மா அவ்வப்போது அயல்நாட்டுப் பயணங்கள் மேற்கொள்வதுண்டு. அப்படி ஒரு முறை அமெரிக்காவுக்குப் போயிருந்த போது, ஒரு மனிதர் அம்மாவிடம் வந்தார். அவர் உயிருக்குயிராக நேசித்த அவரது மனைவி இறந்து சில நாட்களே ஆகியிருந்த நிலையில், அவர் மிகவும் சோகத்தில் ஆழ்ந்திருந்தார்.

அவருக்குத் தம்முடைய மனைவி என்றால், அவ்வளவு அன்பு. மனைவி சாப்பிடவில்லை என்றால், தாமும் சாப்பிட மாட்டார். மனைவிக்கு உடம்பு சரியில்லை என்றால், அவருடன் கூடவே இருந்து கவனிப்பார். மனைவி உடன் இல்லை என்றால், அவருக்கு இரவில் தூக்கம் வராது. மனைவி தனியாக வெளியில் எங்காவது சென்றால், அவர் வீட்டுக்குத் திரும்பும் வரை அவருக்கு வீட்டில் இருப்புக் கொள்ளாது. மனைவிக்கு திடீரென்று உடம்பு சரியில்லை. ஆஸ்பத்திரியில் சேர்த்து சிகிச்சை அளித்தார். ஆனாலும் மனைவி இறந்து விட்டார்.

மனைவியின் உடலை அடக்கம் செய்ய எடுத்துச் சென்றார்கள். இருவரது உறவினர்களும், நண்பர்களும் திரண்டு வந்திருந்து அந்த மனிதரது சோகத்தில் பங்கு கொண்டனர். கடைசியாக எல்லோரும் ஒரு தடவை இறந்தவரது முகத்தைப் பார்த்த பிறகுதான் சவப் பெட்டியினை மூடுவது என்பது அங்கே மரபு. அந்தப் பெண்மணியின் கடைசி முகதரிசனத்துக்காகப் பலரும் வரிசையில் காத்துக் கொண்டிருந்தனர்.

இறந்த பெண்மணியின் கணவருக்கோ பசி எடுத்தது. ஆனாலும் தமது அன்புக்குரிய மனைவியின் உடல் அடக்கம் செய்யப்படும் சடங்குகள் முடிவடையாமல் சாப்பிடுவது நன்றாக இருக்காது என்று நினைத்துப் பசியினைப் பொறுத்துக் கொண்டார். நேரம் நகர்ந்து கொண்டிருந்ததே தவிர, எல்லோரும் பார்த்து முடிக்கவில்லை. 'சீக்கிரமாக எல்லோரும் பார்த்து முடித்தால், பசிக்கு ஏதாவது சாப்பிடலாமே' என்று நினைத்தார். நேரம் ஊர்ந்து கொண்டிருந்தது. அந்த மனிதருடைய பசி, அவருடைய பொறுமையைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தது.

மனைவியின் உடல் அடக்கம் செய்யப்படுவதற்கான அறிகுறிகளே தென்படவில்லை. ஒரு கட்டத்துக்கு மேல்,

சொர்க்கத்தின் வாசற்படி!

இனியும் பசி தாங்க முடியாது என்ற நிலை ஏற்பட்டது. அவர் மெதுவாக அந்த இடத்திலிருந்து விலகி, அருகிலிருந்த ஒரு கடைக்குச் சென்றார். தற்காலிகமாக பசியினை அடக்க ஏதாவது கிடைக்குமா என்று பார்த்தார். கொஞ்சம் ரொட்டியை வாங்கிச் சாப்பிட்டார். பசி கொஞ்சம் குறைந்தது. திரும்பி வந்து, தம் மனைவி அடக்கம் செய்யப்பட்டு முடிக்கும்வரை அங்கேயே இருந்துவிட்டு வீடு திரும்பினார்.

மனைவி இறந்தபோது நடந்த இந்தச் சம்பவத்தை அம்மாவிடம் கூறினார். அதனையடுத்து, தன்னுடைய மனதுக்குள் புதைத்து வைத்திருந்த ஒரு கேள்வியினைக் கேட்டார். "அம்மா! நான் உயிருக்குயிராக நேசித்த என்னுடைய மனைவிக்காக நான் எதை வேண்டுமானாலும் இழப்பதற்குத் தயாராக இருந்தேன். ஆனால் அவளது இறுதிச் சடங்குகள் நடைபெற்ற அன்று, எனது பசி எல்லாவற்றையும் மறக்கச் செய்துவிட்டதே! என் பாசத்துக்குரிய மனைவியை விட என்னுடைய பசி அந்த தருணத்தில் முக்கியமாகப் போய்விட்டதே! இதற்குக் காரணமென்ன?" என்று கேட்டார். இது அமெரிக்காவில் ஏற்பட்ட அனுபவம்.

நமது நாட்டில் நடந்த ஒரு விஷயத்தைச் சொல்லட்டுமா? முதல் மனைவி இறந்த பிறகு, ஒருவர் இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். முதல் மனைவிக்கு இரண்டு பிள்ளைகள். ஒருநாள் சைக்கிளில் செல்லும்போது,



ஒரு கார் மோதி அந்த மனிதர் இறந்து விட்டார். கணவர் இறந்த தகவல் வந்ததும் மனைவி பதறியடித்துக் கொண்டு விபத்து நடந்த இடத்துக்கோ, ஆஸ்பத்திரிக்கோ ஓடவில்லை. மாறாக, கணவரது பீரோவின் சாவியை வழக்கமாக வைக்கிற இடத்திலிருந்து எடுத்து வேறு இடத்தில் ஒளித்து வைத்தார். சிறிது நேரத்தில் கணவரின் உடல் வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டது. அடுத்த சில நிமிடங்களில் மூத்த மனைவியின் மூத்த மகன் வீட்டுக்குள் நுழைந்தான். அவன், தம் அப்பாவின் இறந்த உடலைப் பார்க்காமல், கிடுகிடு வென்று அப்பா பீரோ சாவி வைக்கும் இடத்துக்குச் சென்றான். சித்திக்கு முன் பீரோ சாவியைத் தாம் எடுத்து வைத்துக் கொண்டுவிட வேண்டும் என்பதில்தான் அவன் கவனமாக இருந்தான். ஆனால், சாமர்த்தியமாக சித்தி முந்திக் கொண்டு சாவியைப் பத்திரப்படுத்தி விட்டாள்.

இறந்த மனிதரது உடல் வீட்டில் இருக்கும்போதே, அவரைக் கட்டிய மனைவி, அவர் பெற்ற பிள்ளை இருவரது கவனமும் இறந்தவரது சொத்தின் மீதுதான் இருந்தது. அன்பு என்பது அங்கே மருந்துக்கும் காணப்படவில்லை.

சமூகத்தில் நாம் பார்க்கிறோம்... தந்தை இறந்த சோகத்தைவிட பெரும்பாலான மகன்களுக்குச் சொத்தைச் சரியானபடி பங்கு பிரிக்கப்பட வேண்டும் என்பதில்தான் குறி. சொத்தைப் பங்கு பிரித்துக் கொடுத்தாலும், நமக்கு வரவேண்டிய சொத்து வரவில்லை என்னும் குறைதான் மிஞ்சுகிறது. சொத்துத் தகராறு காரணமாகத் தந்தையை மகன் கொலை செய்வதும், மகன்கள் தங்களுக்குள் சண்டையில் இறங்கிக் கொலைவரை செல்வதும் இன்றைக்கு அன்றாடச் செய்திகளாகி விட்டன.

பலனை எதிர்பார்த்துக் கர்மம் செய்தால் துன்பமே மிஞ்சும். சொத்து, சுகம், பதவி, பொறுப்பு போன்றவற்றை எதிர்பார்த்து நாம் அன்பு செலுத்தக் கூடாது. உறவு என்பது அன்பின் அடிப்படையில் இருக்க வேண்டும். அதில் தான் ஆனந்தம் உள்ளது. அதுதான் சொர்க்கத்தின் வாசற்படி. இந்தத் தத்துவத்தைப் புரிந்து கொண்டு வாழ்ந்தால் பூமியில் வாழும்போதும் சொர்க்கம்; இறந்தாலும் சொர்க்கம். உலகுக்கும் நன்மை; நமக்கும் நன்மை.

(அன்பு பெருகும்)



அம்மா!

ஒருமுறை ஆசிரமத்தில் இருந்த ஒரு குடிசையின் கூரையில் துவாரம் ஏற்பட்டு, மழைநீர் குடிசைக்குள் ஒழுகியது. இதனால் ஆசிரமவாசிகள் சிரமப்பட்டனர். இது, குறைகளை நிவர்த்திக்கும் பொறுப்பிலிருந்த பிரம்மச்சாரிகள் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும், அவர்கள் அந்தக் குறையினைச் சரி செய்யாமல் காலம் கடத்தி வந்தனர். இது அம்மாவுக்குத் தெரிய வந்தது.

அம்மா நேரே அந்தக் குடிசைக்குச் சென்றார். ஏணி ஒன்றைக் கொண்டுவரச் சொல்லி, அதன் உதவியுடன் கூரைமீது ஏறிவிட்டார். விஷயம் கேள்விப்பட்ட பிரம்மச்சாரிகள் பதறியடித்துக் கொண்டு ஓடி வந்தனர். உடனே தாங்கள் அந்தக் குறையினை நிவர்த்திப்பதாக உறுதியளித்தும் அம்மா விடவில்லை. தாமே கூரையினைச் சரி செய்து விட்டுத்தான் கீழே இறங்கினார். அப்போது அம்மா சொன்ன ஒரு வாக்கியம்: 'நாளை என்பது சோம்பேறிகளின் வார்த்தை.'


- மௌலி

ஃபேக்ஸ் ஃப்ரம் டெல்லி!

கன்னாபின்னா திருட்டு!

சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் இந்த முறையும் தலைநகரத்துல ரொம்பவே சிறப்பா கொண்டாடப்பட்டிருப்பது சந்தோஷமான சமாசாரம்தான். ஆனால், ஆகஸ்ட் 14, 1947 நடு ராத்திரியன்னிக்கு, முதன்முதலா அன்றைய இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு ஏற்றி வைத்த இந்தியக் கொடியும் அதற்கு அடுத்த இரண்டு நாட்கள் டெல்லியின் இந்தியா கேட் பகுதியிலும் செங்கோட்டையிலும் பட்டொளி வீசிப் பறந்த பாரதக் கொடிகளும் நிஜமாவே எங்கே பறந்து போச்சுன்னு தெரியாம தலைவர்கள் தேடிக்கிட்டிருக்காங்க. அடுத்த சுதந்திர விழாவுக்குள்ள நிச்சயம் வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த மூன்று கொடிகளையும் எப்படியாவது தேடிக் கண்டுபிடிச்சுடணும்னு மும்முரமா இருக்குறாங்க பல முக்கிய தலைவர்கள்.

பள்ளிக்கூடக் குழந்தைகள் பயணம் செய்யும் டெல்லிப் போக்குவரத்துக் கழகத்துக்குச் சொந்தமான பஸ்களில் இனிமேல் பெண்கள்தான் நடத்துநர். அது மட்டுமில்ல, இனி டெல்லிப் போக்குவரத்துக் கழக பஸ்களில் எல்லாம் ஓட்டுநர்களுக்குப் பக்கத்தில் மட்டும் குளிர்சாதனப் பெட்டியை வெச்சு, அவங்கள ரொம்பவே குளிர்விக்கப் போறாங்க. கடும் வெயிலில் டிரைவர் ஸீட் கிட்டத்தட்ட 50 டிகிரி வெப்பத்துல தவிக்கக்கூடும் இல்லையா... அவங்க படுற எரிச்சலைத் தடுக்கத்தான் இந்த 'ஏஸி' ஐடியாவாம். ஒவ்வொரு பஸ்ஸுக்கும் ஏஸி பொருத்த 25,000 ரூபாய் ஆகுமாம்.



டெல்லியில கன்னாபின்னான்னு கார்கள் திருட்டுப் போகுது. ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம் 5 கார்களாவது அபேஸாகுது. சமீபத்துல நம்ம குடியரசுத் தலைவர் அலுவலகத்தைச் சேர்ந்த ஒரு முக்கியமான அதிகாரியின் காரே பாராளுமன்ற பார்க்கிங் ஏரியாவிலிருந்து திருட்டுப் போயிருக்காம்! திருப்பதிக்கே லட்டா!

இந்தியாவிலிருந்து பருப்புகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடாதுன்னு சட்டம் வந்ததுலேர்ந்து அமெரிக்கா வாழ் இந்தியர்கள் தவியா தவிக்கிறாங்க. குறிப்பா, இந்தியர்கள் அதிகம் வாழுற நியூயார்க், நியூஜெர்ஸியில பருப்புகளின் விலை எக்கச்சக்கமா ஏறிப் போயிருக்கு. ஒரு பவுண்டு பருப்போட விலை 50 சென்ட் வித்த இடங்கள்ல எல்லாம் இப்போ ஒரு டாலர் இருபது சென்ட்.

- நளினி சம்பத்குமார்

"உழைப்புக்கு... ...வயசில்லை!"

நூறு வயதைத் தொட்டுவிட்டால் என்ன செய்வோம்? ரூமிலிருந்து வெளியே வராமல், சதா படுத்துக்கொண்டு, அரை குறை ஞாபகங்களை அசைபோட்டபடி இருக்கிற காலத்தை ஓட்டுவோம். ஆனால் இது எதுவுமின்றி நாள் தவறாமல் விவசாய வேலை செய்து வருகிறார் ரெங்கசாமி. வயது நூற்றியொன்று. திருச்சி ராம்ஜி நகர் அருகேயுள்ள வடக்குப் பாகனூரைச் சேர்ந்தவர். பூங்குடி கிராமத்தில் இவருக்கு ஆறு ஏக்கர் வயல் இருக்கிறது. இது தான் இவரது சொர்க்க பூமி.



''நமக்குக் கழனிக்காடு தாங்க குடியிருப்பு. கோழி கூட்டுக்குள்ள அடையற மாதிரி, ராத்திரி படுக்கறதுக்குத்தான் வீட்டுக்குப் போறது. மத்தியானச் சோற்றை கையோடு கொண்டு வந்திடுவேன். பழைய சோறுல மோரு ஊத்திப் பிசைஞ்சு, பச்சை மிளகாயைக் கடிச்சுட்டு சாப்பிட்டா அமிர்தமா இருக்கும். திருச்சி - திண்டுக்கல் மெயின் ரோட்டுல வண்ணாங்கோயில்ன்ற எடத்து லேர்ந்து இந்த பூங்குடி கிராமத்துக்கு ஒரு தபா மகாத்மா காந்தி நடந்தே வந்தாரு. வேட்டியைத் தார்ப்பாய்ச்சக் கட்டிக்கிட்டு ஒரு துண்டு மட்டும் போர்த்தி இருந்தாரு. அவரைப் பார்க்க அப்போ ஏகப்பட்ட கூட்டம். அப்போ எனக்கு வயசு நாற்பதைஞ்சு!'' என்று பழைய நினைவுகளை அசை போடும் ரெங்கசாமிக்கு இரண்டு மகள்கள், ஒரு பையன்.

"எனக்கு எப்பவுமே சும்மா இருக்கப் பிடிக்காது. அதனாலதான் இந்த வயசுலயும் வயல் பக்கமா வந்து விழுந்து கிடக்குறேன். வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சறது, களை எடுக்கறது, வேலியோரச் செடிகளை வெட்டி ஒழுங்குபடுத்துறதுன்னு ஏதாவது ஒண்ணு செஞ்சுக்கிட்டுதான் இருப்பேன். ரெண்டு வருஷம் முன்னாடி வரைக்கும் வயலுக்கு சைக்கிள்லதான் வந்துட்டுப் போவேன். இப்ப சைக்கிள் மிதிக்க முடியல. அதனால பஸ்ல வர்றேன். நான் நூத்தியொரு வயசுலயும் உழைக்கிறதா பெருமையா பேசிக்கிறாங்க. வயசு எத்தனை ஆனா என்னங்க, உடம்புல தெம்பு இருக்கற வரைக்கும் உழைக்கணும்; அப்பத்தான் சோறு உடம்புல ஒட்டும்'' என்கிறார் ரெங்கசாமி.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு





ஆதாம் ஆப்பிள்!

கதிர்பாரதி

உயிர்ப் பிடித்தெழும்
நாட்களின்
பிடரி பற்றி
உலுக்கியெடுக்கின்றன
நீ ஊற்றி வளர்த்தனுப்பும்
ஞாபகங்கள்

சிறகு முளைத்துப்
பறக்க
எத்தனிக்கும்பொழுதுகளைச்
செரித்துத் தீர்க்க
பசி விரித்து
விடைத் தலைகிறதுன்
பருவம்

செழிக்கத் துவங்கும்
என் வெள்ளாமையின்
கழுத்தறுக்க
கருக்கேந்தி நகர்கிறது
அகிம்சை புணைந்த
பார்வைகள்

ஏறி இறங்கும்
ஏக்கப் பெருமூச்சுகளில்
தீய்ந்தழிகின்றன
நினைவுகள்
உமிழ்ந்துபோன
கனவு பிம்பங்கள்

நீ நிகழ்ந்து முடிக்கிற
கணங்களின்
கடைசிப் புள்ளியில்
அதிரத் தொடங்கும் மனது
காரணங்களை வெறித்தபடி
ஊசலாட்டம் போடுகிறது
கேள்விக்குறியில்

நீயொழிந்த நீயும்
நானொழிந்த நானும்
முட்டிக்கொள்ளும்
வெளிபரப்பில்
வேர்க்கொழித்து
கனிந்தாடுகிற
ஆதாம் ஆப்பிளை
எப்போது ருசித்து
ருசிக்கும்
ருசிக்கேங்கும்
மனசின் நாவுகள்

சமீபத்திய உச்சநீதிமன்ற ஆணைப்படி இனி அரசியல் கட்சிகள் போஸ்டர்கள், பேனர்கள், கட்அவுட்கள், அலங்கார வளைவுகள் இவற்றின் மூலம் தங்களுக்கு விளம்பரம் தேடிக்கொள்ளக் கூடாது. இதையொட்டி கர்நாடக மாநில அரசு விடுத்துள்ள ஓர் அறிவிப்பு : இனி கர்நாடக அரசியல்வாதிகள் விளம்பர போஸ்டர்களை ஒட்டிச் சுவர்களை அசிங்கப்படுத்தக் கூடாது. அரசியல்வாதிக்குப் பிறந்தநாள் என்றால், போஸ்டர்கள், சுவரொட்டிகள் மூலம் தொண்டர்கள் தங்களுக்கும் விளம்பரம் தேடிக்கொள்கிறார்கள். இனி இது தடுக்கப்பட வேண்டும்."

கர்நாடக கிராமம் அடநட்டியில் இருக்கிறார் சங்கப்பா. 11 வருடங்களுக்கு முன்பு நடந்த ஒரு விபத்தில் அவருடைய கைகள், கால்கள் எல்லாமே செயலிழந்துவிட்டன. என்றாலும் சங்கப்பாவின் உள்ளத்தில் உற்சாகம் குன்றவில்லை. அவர் பால் வியாபாரிகளின் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைத்தார். அவருடைய உற்சாகம், அறிவு இவற்றைப் பார்த்த பால் வியாபாரிகள் அவருடன் ஒத்துழைக்க முன்வந்தனர். கடந்த பத்து வருடங்களாக இயங்கி வரும் இந்தச் சங்கத்தில் 200 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். நேரம் தவறாமைக்குப் பெயர் போன இந்தச் சங்கம் இந்தப் பகுதியில் வெற்றிகரமாக இயங்கி வருகிறது. நடக்க முடியாத சங்கப்பாவை தினமும் அவருடைய தோழர் ஒருவர், தம் தோளில் சுமந்து கொண்டு அலுவலகத்துக்கு வருகிறார்.



லாலுவுக்கு ஒரு கடிதம்!

மறைந்த பிரபல ஆங்கில எழுத்தாளர் ஆர்.கே.நாராயண் எழுதிய 'மால்குடி டேஸ்' நாவல் உலகம் பூராவையும் அவரைத் திரும்பிப் பார்க்க வைத்தது. ஆர்.கே.நாராயணுக்கு இது நூற்றாண்டு வருஷம். அவர் மைசூர்க்காரர். ஆனால் சில காலம் தமிழ்நாட்டிலும் வாழ்ந்தார். கர்நாடக கவர்னர் சதுர்வேதி ஒரு புத்தகப் பிரியர். ஆர்.கே.நாராயணின் ரசிகரும்கூட. அவர் ரயில்வே அமைச்சர் லாலுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். 'மறைந்த எழுத்தாளர் ஆர்.கே.நாராயணின் நினைவாக மைசூருக்கும் சென்னைக்கும் இடையே ஓடிக்கொண்டிருக்கும் 'காவேரி எக்ஸ்பிரஸ்' ரயிலின் பெயரை 'மால்குடி எக்ஸ்பிரஸ்' என்று மாற்ற வேண்டும். இப்படிச் செய்தால் கர்நாடக - தமிழ்நாடு நட்பு இன்னும் பலப்படும்" என்று குறிப்பிட்டுள்ள சதுர்வேதி, ரயில்வே அமைச்சரை இந்த விஷயத்தில் குஷிப்படுத்துவதற்காக 'கைட்' என்ற இந்திப் படத்தின் கதையை எழுதியவரும் ஆர்.கே.என்.தான்' என்றும் கடிதத்தில் எழுதியிருக்கிறார்.

- அனிதா ராமச்சந்திரன்

கவர்னர் விஜயம்

பாகம் – 2

அமரர் கல்கி



கடைசியில் குறிப்பிட்ட தினம் வந்தது. சிவகுருநாதஞ் செட்டியார் அதிகாலையிலேயே எழுந்திருந்து, ஸ்நான பானாதிகளை முடித்துக் கொண்டார். பின்னர், நிலைக் கண்ணாடியின் முன்பு நின்று அரைமணி நேரம் உடைதரித்துக் கொண்டார். அவருடைய அருமை மனையாள், அருகிலிருந்து துணிகளைத் தட்டிக் கொடுத்தும், நகைகளைத் துடைத்துக் கொடுத்தும் உதவி புரிந்தாள். அலங்காரம் செய்துகொண்டு முடித்ததும், காரியஸ்தரை விட்டு மோட்டாரைக் கொட்டகையிலிருந்து கொண்டுவரச் சொன்னார். செட்டியாரின் மனைவி வாசலில் போய்ச் சகுனம் பார்த்தாள். நல்ல சகுனமான தருணத்தில் நல்ல நேரத்தில் செட்டியார் வீட்டிலிருந்து வெளியே புறப்பட்டு மோட்டாரில் அமர்ந்தார். மோட்டார் வண்டியின் முனையில் பெரியதொரு யூனியன் ஜாக் கொடி அழகாக ஆடிக் கொண்டிருந்தது. அடுத்த ஐயங்கார் வீட்டைப் பார்த்ததும், செட்டியாருக்குக் கொஞ்சம் 'சொரேல்' என்றது. தம்மைப் போலவே ஐயங்காரும், முதல் நாள் மாலைவரை பேசாமலிருந்துவிட்டு, இரவுக்கிரவே வீட்டு வாசலைத் தோரணங்களாலும் கொடிகளாலும் அலங்கரித்திருப்பதைக் கண்டார். இதற்குள் மோட்டார் வண்டி புறப்பட்டுவிட்டபடியால், அதிகமாகச் சிந்திப்பதற்கு நேரம் இல்லை. ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம் வண்டி ரயில்வே ஸ்டேஷனை அடைந்தது. தமக்கு முன்னால் ஐயங்கார் அங்கு வந்து தயாராகக் காத்துக்கொண்டிருப்பதைப் பார்த்தார். உள்ளுக்குள் அவர்களிடையே இவ்வளவு போட்டி நடந்து கொண்டு வந்ததாயினும் வெளிக்கு அவர்கள் அத்தியந்த நண்பர்கள். எனவே செட்டியார் "என்ன ஐயங்கார்வாள்! ஏது இவ்வளவு அதிகாலையில் விஜயம் செய்தது?" என்று கேட்டார். "இங்கு ஒரு சிறு காரியமாக வந்தேன். தாங்கள் சென்னைப் பட்டணம் போவதாகக் கேள்விப்பட்டேன். அதற்காகத்தான் ஸ்டேஷனுக்கு வந்தீர்களோ?" என்று கேலி செய்யும் பாவனையாக ஐயங்கார் வினவினார். "அிருக்கட்டும். தாங்கள் வீட்டு வாசலை இரவுக்கிரவே அலங்காரம் செய்திருப்பதாகக் காண்கிறதே! என்ன விசேஷம்?" என்றார் செட்டியார். "தங்கள் வீட்டு வாசலிலும் இன்று காலையில் தோரணங்களைப்



பார்த்தேன். தங்களுக்கு இன்று சஷ்டியப்த பூர்த்தி விவாகம் என்று சொன்னார்கள். அப்படித்தானோ?" என்று கிருதக்காய்க் கேட்டார் ஐயங்கார். செட்டியார் இதற்குக் கடுமையாகப் பதில் சொல்ல எண்ணினார். ஆனால் அதற்குள் ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் கூட்டம் வந்து நின்றுவிட்டது. நகரசபை அங்கத்தினர்களும், பட்டதாரிகளும் இனிப் பட்டம் பெற இருந்தவர்களும், சில வக்கீல்மார்களும், உத்தியோகஸ்தர்களும், பந்தோபஸ்துக்காக வந்த போலீஸ்காரர்களும், பகிஷ்காரப் பிரசாரம் செய்ய வந்து ஏதோ இந்தத் தமாஷையும் கொஞ்சம் பார்க்கலாமே என்று உள் நுழைந்த தொண்டர்களும், அவர்களைத் தொடர்ந்து வந்த இரகசிய போலீசாரும் புகைவண்டி நிலைய மேடையில் எள்ளுப் போட்டால் கீழே விழாத வண்ணம் நெருங்கிக் கூடினார்கள். எல்லாரும் கண்பூத்துப் போகும்படி ரயில்பாதையை நோக்கிய வண்ணமாய் நின்றார்கள்.



கடைசியாக, கவர்னர் துரையின் ஸ்பெஷல் வண்டி வந்து சேர்ந்தது. போலீஸ் அதிகாரிகள் அங்கும் இங்கும் அலைந்து அமைதியை நிலைநாட்டினார்கள். கவர்னர் பிரபு வண்டியைவிட்டுக் கீழிறங்கினார். அவர் போவதற்கு வழி ஏற்படுத்தப்பட்டது. என்னென்னவோ மனோராஜ்யம் செய்துகொண்டு அங்கு வந்திருந்தவர் அனைவரும், அந்த வினாடியில் கெட்டியாக மூச்சுக்கூட விடாமல், மார்பு படபடவென்று அடித்துக் கொள்ளக் மிக்க ஆவலுடன் அவரை நோக்கி நின்றனர். எங்கே துரை முகமெடுத்துக் கூடப் பாராமல் போய்விடுவாரோ என்று எண்ணி அவர்கள் நடுநடுங்கினார்கள். அப்போது அங்கிருந்தவர்களுள் ஒருவர் உணர்ச்சி மேலீட்டினால் மூர்ச்சையாகி விட்டாரென்றும், ஆயினும் மூர்ச்சை நிலையிலும் அவருடைய தீவிர இராஜ

பக்தியின் காரணமாக, கீழே விழுந்து குழப் பம் விளைவியாமல் தூணைப் பிடித்துக் கொண்டு மறைவில் நின்று கொண்டிருந்தாரென்றும், பின்னால் தெரியவந்தன.



பிறகு, துரை கீழிறங்கியதும், தொப்பியை மரியாதைக் குறியாகக் கையில் எடுத்துக் கொண்டு, ஒரு மூலையிலிருந்து வரிசையாக எல்லாரையும் ஒரு பார்வை பார்த்துக் கொண்டு வந்தார். அங்கிருந்தோர் அனைவரும், தங்கள் வாழ்வின் இலட்சியம் நிறைவேறிவிட்டதென்னும் எண்ணங்கொண்டனர். அவருடைய பார்வை தம்மீது விழக்கூடிய கணத்திலும் குறைந்த நேரத்தில் தாம் சலாம் செய்யத் தவறிவிட்டால் என்ன செய்வதென்று எல்லாருக்கும் பயம்.

எனவே, முதலில் அவர் பார்கக ஆரம்பித்ததிலிருந்து, அவர் கண்கள் கடைசிவரை சென்று முடிந்துப் பிறகு அவர் நடக்கத் தொடங்கியவரையில், அங்கிருந்தோர் அனைவரும் சலாம் செய்து கொண்டேயிருந்தனர். மேலக் காற்று வீசி அடிக்கும்போது மரங்கள் நிறைந்த தோப்பில் எவ்வாறு கிளைகள் இடையிடின்றி ஆடி அசைந்து கொண்டிருக்குமோ அவ்வாறு ஐந்து நிமிஷ நேரத்துக்கு அங்கிருந்தோர் அனைவருடைய கரங்களும் நெற்றிக்குச் சென்று கீழே வந்த வண்ணமாயிருந்தன.

இவ்விதம் ஒருமுறை இராஜபார்வை பார்த்துவிட்டு கவர்னர் துரை வேகமாக நடந்துபோய் வெளியில் தயாராய் நின்ற மோட்டாரில் ஏறிச் சென்றார். அவரைத் தரிசிக்க வந்து கூடியிருந்தோர் எல்லாரும் தங்கள் தங்கள் இல்லங்களுக்கு ஏகினர்.

ஸ்ரீமான் சிவகுருநாதஞ் செட்டியாரும்



முதன்முறை...

ஆசியாவிலேயே மிகப்பெரிய சிறைச்சாலையான திஹார் சிறைச்சாலையில், இந்தியாவிலேயே முதன் முறையாக தொலைக்காட்சி பொருத்தி இருக்கிறார்கள். தொலைக்காட்சியில் வரும் சீரியல்களைப் பார்த்து சிறைவாசிகள் 'என்ஜாய்' பண்ண இல்லையாம் இந்த நடவடிக்கை. 13,000 குற்றவாளிகளைக் கொண்ட திஹார் சிறைச்சாலையில், குற்றவாளிகளின் நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனிக்க கொண்டு வரப்பட்டிருக்கிற உள்அறை தொலைக்காட்சிப் பெட்டிகள்... அதாவது க்ளோஸ் ஸர்க்யூட் டெலிவிஷன்ஸ் தாங்க அது.

சௌக்கியமாக வீடு போய்ச் சேர்ந்தார். உடனே அவருடைய மனைவி, குழந்தைகள், காரியஸ்தர், வேலைக்காரர்கள் எல்லாரும் சூழ்ந்துகொண்டு, "என்ன நடந்தது?" என்று ஆவலுடன் கேட்டார்கள். செட்டியார் சற்று இளகிய மனம் கொண்டவர். இவ்வளவு பேருடைய உள்ளங்களையும் அவர் வீணில் புண்படுத்த விரும்பவில்லை. எனவே அவர், "இன்றைய விசேஷம் இவ்வளவு நன்றாக நடந்தேறியதற்காகக் குருக்களைக் கூப்பிட்டு அம்பிகைக்கு அர்ச்சனை செய்ய ஏற்பாடு பண்ண வேண்டும்" என்றார். செட்டியாரின் மனைவி முதலியோர், இன்னும் மிகுந்த ஆவலுடன், "கவர்னர் தங்களுடன் பேசினாரா? தாங்கள் என்ன பதில் சொன்னீர்கள்? விசேஷம் என்ன நடந்தது?" என்று ஒரே மூச்சாகக் கேட்டனர். செட்டியார் சொன்னதாவது... "கவர்னர் வண்டியை விட்டுக் கீழே இறங்கியதும், ஜில்லா கலெக்டர் முதலிய ஒருவர் இருவருடன் சற்றுப் பேசிவிட்டு, நேரே என்னிடம் வந்தார். நான் கொஞ்சமாவது பயப்பட்டேன் என்கிறீர்களோ? இல்லவே இல்லை. என்னருகில் வந்ததும் துரை என் கையைப் பிடித்துக் குலுக்கிவிட்டு 'செட்டியார்வாள்! தங்களைப் பற்றி நிரம்பவும் கேள்விப்பட்டிருக்கிறேன். தாங்களும் தங்கள் பந்துமித்திரர்களும் சுகந்தானே?' என்று கேட்டார். உங்களுக்குத்தான் தெரியுமே? நான் பேச ஆரம்பித்தால் இலேசில் விடுகிற பேர் வழியா? 'துரையவர்களே! தங்கள் ஆட்சியிலே எவ்விதக் குறைவுமின்றி வாழ்ந்து வருகிறோம். ஆனால் ஒரு விஷயத்தில்தான் தங்கள் அரசாங்கத்தின்மீது குறைசொல்ல வேண்டியதாயிருக்கிறது. பட்டங்கள் வழங்கும் விஷயத்தில் மட்டும் தாங்கள் தராதரங்களைக் கவனித்து வழங்குவதில்லை' என்று நான்..."

"ஐயையோ! இவ்வளவு கடுமையாய்ப் பேசிவிட்டீர்களே? துரை கோபித்துக் கொள்ளவில்லையா?" என்று காரியஸ்தஸ்தர் பரிந்து வினவினார்.

"ஹும் கோபித்துக் கொள்ளவா? உனக்கு என்ன தெரியும்? நான் இவ்வாறு சொன்னவுடன் கவர்னர் துரை என் கையை மீண்டும் பிடித்துக் கொண்டு 'செட்டியார்வாள், இந்த விஷயத்தை எனது கவனத்துக்குக் கொண்டு வந்ததற்காக நிரம்ப வந்தனம். உடனே கவனித்துத் தக்கது செய்கிறேன்' என்று சொன்னார். அப்போது அங்கிருந்தவர்கள் எல்லோரும் கரகோஷம் செய்தார்கள். ஆனால் நமது ராவ்பகதூர் ஐயங்காரைப் பார்க்க வேண்டுமே? அவர் முகத்தில் ஈயாடவில்லை. அவரை ஒருவரும் கவனிக்கவில்லை. ஒரு மூலையில் பேசாமல் நின்று கொண்டிருந்தார்" என்று செட்டியார் சரமாரியாகப் பொழிந்தார்.


அதே சமயத்தில் ராவ்பகதூர் கூர்மாவதாரம் ஐயங்கார் வீட்டு அந்தப்புரத்துக்கு யாராவது சென்று ஒட்டுக் கேட்டிருந்தால், ஸ்ரீமான் ஐயங்கார் தமது அருமைக் காதலியிடம், "ஆனால் சிவகுருநாதஞ் செட்டியாரை கவர்னர் முகமெடுத்துக்கூடப் பார்க்கவில்லை. பாவம்! சிவனே என்று இவர் மூலையில் நின்று கொண்டிருந்துவிட்டுப் போய்ச் சேர்ந்தார்" என்று கூறி முடித்தது காதில் விழுந்திருக்கும்.

(அடுத்த இதழில்... புலி ராஜா!)

பரம சாந்தம்!

எதிலும் மிகையாகப் போகாமல் நடுநிலைமையில் இருப்பதுதான் மிதம். 'மிதம்' என்றால் 'அளக்கப்பட்ட', 'அளவறிந்த' என்று அர்த்தம். Measured behaviour என்று சொல்லும்போதும் எதிலும் தீவிரமாகப் பறக்காமல், நிதானமாக, கவனமாகச் செய்வதைத்தானே Measured என்பது குறிக்கிறது? Measured-தான் மிதம். 'ஜ்யாமெட்ரி' என்கிறோமே அது 'ஜ்யா-மிதி' என்ற ஸம்ஸ்க்ருத வார்த்தைதான். 'ஜ்யா' என்றால் பூமி. 'மிதி' என்பது 'மிதம்'தான்- அதாவது அளக்கிற விதிமுறை. யக்ஞத்தில் வேதிகை நிர்மாணம் முதலானதுகளுக்கு பூமியை அளப்பதிலிருந்தே 'ஜ்யாமெட்ரி' உண்டாயிற்று. 'க்ஷேத்ரம்' என்றாலும் பூமிதான். அதனால்தான் இதற்கு 'க்ஷேத்ர கணிதம்' என்றும் பெயர் இருக்கிறது.

செய்கிற காரியம், பேசுகிற பேச்சு, ஸம்பாதிப்பது, செலவழிப்பது, புத்தியை ஓடவிட்டு நினைப்பது, அலைவது, சாப்பிடுவது, ட்ரெஸ் பண்ணிக் கொள்வது, பொழுது போக்கு எல்லாவற்றிலுமே, 'ஓவராக'ப் போய்விடாமல், மனஸ் எதற்கும் வசப்பட்டு விடாதபடி, அளவறிந்து Measured-ஆக வைத்துக் கொள்வது தான் மிதம். எல்லாவற்றிலும் இப்படிப் பண்ணுகிற பழக்கம் வந்துவிட்டால் சித்தம் ஸம நிலையில் பரம சாந்தமாக ஆவதற்கு உதவும்.



பழக்கம் எப்படி வரும்? ஈச்வர க்ருபையில்தான் வரும். 'அந்த க்ருபை எப்படி வரும்?' என்றால், அதற்காகத்தான், அதை வருவித்துக் கொள்வதற்காகத்தான், இரண்டு 'எக்ஸ்ட்ரீம்'களாக அனுஷ்டானங்களை சாஸ்த்ரங்கள் ஏற்படுத்திக் கொடுப்பது. நமக்குத் தெரிந்த நிலையில் ஒரு எக்ஸ்ட்ரீமாக பண்டிகை போஜனம், பாட்டு, கூத்து ஆகியவற்றையும், தினுஸு தினுஸுகளில் அபிருசி கண்ட நம் மனஸுக்கு ஏற்றபடி அநேக தெய்வங்கள் ஆகியவற்றையும் ஒரு பக்கம் சொல்லிக்கொண்டே, அதே ஸமயத்தில் இன்னொரு எக்ஸ்ட்ரீமான, உண்ணாத, உறங்காத பேசா நிலையையும், நிர்குண ஏக பரமாத்மாவையும் ஞாபகப் படுத்திக் கொண்டேயிருப்பது. இப்படி இரண்டு எக்ஸ்ட்ரீம்களையும் மாறி மாறி அப்யாஸம் செய்கிறதாலேயே, தராசின் இரண்டு தட்டுகளிலும் 'வெயிட்'களைப் போடுவதால் அது ஸம நிலைக்கு வருகிற மாதிரி மனஸு ஸமத்துக்கு வந்து, அதோடு வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் மாடரேஷன் வந்துவிடும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

திரைப்பாடலைத் தெரிவு செய்யும் பொறுப்பிலிருக்கும் இயக்குனர், இசையமைப்பாளர், தயாரிப்பாளர் மூவரில் ஒருவரேனும் கவித்துவ ரசனையுடையவராக வாய்த்துவிட்டால், பாடலின் தரமும் பாடலாசிரியர்களின் பணியும் சோபிக்கும் என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

வியக்க வைக்கும் கற்பனைகளை, யதார்த்தச் சரடுகளை எழுதிக்கொண்டு போக, அவர்களில் ஒருவருமே அதை ரசிக்காதபோது மனமுடையும் ஆதங்கம் இருக்கிறதே, அந்தத் துயரை எழுதிப் புரிய வைக்க இயலாது. வெறுமனே வாங்கிப் படித்துவிட்டு அருமை என்பதைக் காட்டிலும் கூடுதலாக அதன் சிறப்புகளைப் பாராட்டி இரண்டொரு வார்த்தை பேச மாட்டார்களா எனத் தோன்றும் ஏக்கம் எனக்கேகூட நேர்ந்ததுண்டு.

இலக்கியம் படிக்கிறவர்களாக அல்லது இலக்கிய நுகர்வை விரும்புகிறவர்களாக சில இயக்குநர்கள் கிடைத்ததால் என்பாடு பரவாயில்லை. தயாராகிக் கொண்டிருக்கும் 'பீமா' திரைப்படத்துக்காக ஒரு பாடல். கதாநாயகி தன் காதலனை நினைத்துக் கனாக் காண்கிற காட்சி.

நொடியில் நுழைந்து இதயத்தைப் பொடிப் பொடியாக்கிவிட்டுப் போய்விட்டானே என்பது மாதிரி



யுகபாரதி

எழுத வேண்டும். 'மரகதக் கனவுகள்' என்ற பல்லவி இயக்குனர் லிங்குசாமிக்கு ரொம்பவே பிடித்துப் போனது. ஹாரிஸ் ஜெயராஜின் மெல்லெனக் கவ்வியிருக்கும் மெல்லின மெட்டு.

'ரகசிய நீர்வீழ்ச்சி
நரம்போடு
வழிவதைப் பார்த்தேனே
குறும்போடு

வெள்ளைத் தீ போலென்னை
விழியாலே ஏன் சுட்டாய்?
வெட்கத்தைப் பாலென்று
விரலாலே சாப்பிட்டாய்

திசை முழுவதும்
அவனது முகமெனத்
தோன்ற - சுகம்
ஊன்ற

வழிப்பறிப் போல
விழிபறி போகும்
நிலைமையும் வருமோ?

இருவிழி நாளும்
கொலை வெறியோடு
இரவினைச் சுடுமோ?'

சின்னச் சின்ன வார்த்தைகளுக்கு இடையே தொக்கி நிற்கும் கவித்துவ அழகுகளை லிங்குசாமி எப்போதுமே ரசிக்கக் கூடியவர். அவரே ஒரு கவிஞர் என்பதால் பாடலின் சூழலைச் சொல்லும்போதே நம்மை வெகுவாக ஈர்த்துவிடுவார். ஈர்த்ததை மறுபடி மொழிபெயர்க்கையில், மெட்டுக்குள் வார்க்கையில் மேலும் அதிக அழகோடு பாடலின் உயரம் கூடிவிடும். அவருடைய படங்களுக்கு என்னால் எழுதப்பட்ட பாடல்கள் அனைத்தும் பெரிய வெற்றி பெற்றிருக்கின்றன.

வெற்றி, தோல்வி படைப்புகளுக்கு இல்லையாயினும் ஒரு மதிப்பீட்டுக்காக அவ்வாறு சொல்வதில் தப்பில்லை எனக் கருதுகிறேன். கவிஞர்களே இயக்குநர்களாக, தயாரிப்பாளர்களாக இருக்கும் பட்சத்தில், காலத்தால் அழியாத பாடல்களைத் தருவிக்க முடியும் என்பது உண்மை. அதற்கு சாட்சிகளாக அக்காலத்துப் பாடல்கள் பல இருக்கின்றன.



• 'பீமா' படத்தில்...



• லிங்குசாமி

பட்டிமன்ற ஆத்மாக்களே...

நாடகத் துறையில் தன் சகாவாகப் பணிபுரிந்த மருதகாசியைத் தன் படங்கள் முழுவதுக்கும் பாடல் எழுதப் பணித்தவர் புலவர் ஏ.கே.வேலன். பணி நெருக்கடியில் மருதகாசி சிக்கியிருந்தபோது, அதற்காக தம் படத்தின் படப்பிடிப்பையே தள்ளி வைத்த அவருடைய அன்பையும் நட்பையும் ஒரு பாடலாசிரியராக என்னால் உணர முடிகிறது. காத்திருந்து வாங்க நட்பு மாத்திரமே காரணமில்லை. மருதகாசியின் எழுத்துக்கான மரியாதை என்றும் அர்த்தப்படுத்திக் கொள்ளலாம்.

திரைக்கவித் திலகம் 'மருதகாசியின் திரையுலகச் சாதனைகள்' எனும் நூலை வாசிக்கும்போது கிடைத்த செய்தியே மேலே குறித்தது. மருதகாசியின் சகோதரர் பேரா.முத்தையன் எழுதியிருக்கிறார். பதிவுகளாகவும் பாராட்டப்பட வேண்டிய திரையுலகச் செய்திப் பெட்டகமாகவும் விரித்திருக்கிறார்.

உடனிருந்த அனுபவங்களையும் மருதகாசியுடன் பழகிய முக்கிய பிரமுகர்களையும் தெரிந்துகொள்ளும் வாய்ப்பை அப்புத்தகம் நல்குகிறது. நேர்த்தியான சொல்முறை.

மருதகாசியின் பாடலை ஒருவர் வியக்கவில்லை என்று சொல்வாரேயானால், உண்மையில் அவர் மனநிலை பாதிக்கப்பட்டவராக இருக்க வேண்டும். இல்லையெனில், அவர் ரசித்த பாடல் இவருடையதென்று தெரியாமல் இருக்க வேண்டும். அந்த அளவுக்கு அர்த்த புஷ்டியான ஆக்கம், மருதகாசியின் பங்களிப்பு.

எண்ணிக்கைக்காக எழுதாமல் பிறர் எண்ணும்படி எழுத வேண்டும் என்பதே யாதொரு படைப்பாளிக்கும் லட்சியமாக இருக்கும். எழுதுகிற அத்தனை பாடலுக்கும் உழைப்பைச் சதவிகிதத்தில் இட்டாலொழிய இது சாத்தியமில்லை. மருதகாசிக்குச் சாத்தியப்பட்டிருப்பது மற்றவர்க்குச் சாத்தியப்படுமா? தெரியவில்லை.

'தேன்சுவை மேவும்
செந்தமிழ்க் கீதம்

பொழிவதும் குரலாலே
சிந்தையைக் கிளறும்
மதுரச நாதம்'

எழுதுவதும் விரலாலே என்றொரு பாடல். 1955-இல் 'டாக்டர் சாவித்திரி' எனும் படத்துக்காக மருதகாசி எழுதிய வரிகள் இவை. தேன்சுவை மேவும் செந்தமிழ்க் கீதம், அவருக்கே அவர் எழுதிக் கொண்டதுபோல எனக்குப் படுகிறது. மெட்டின் அரவணைப்பைக் கொஞ்சமும் விலக்கிவிடாத கவிதைக் குழந்தையாக அவருடைய பாடல்கள் அமைந்திருக்கின்றன.

'முல்லைமலர் மேலே
மொய்க்கும் வண்டு போலே
உள்ளம் உறவாடுதுங்கள்
அன்பாலே

வெள்ளியலை மேலே
துள்ளும்கயல் போலே
அல்லிவிழி தாவக்
கண்டேன் என்மேலே'

• மருதகாசி



மருதகாசி போன்ற தன்னிகரில்லா ஆளுமைகளை விவரிக்கும்போது நேரும் சிக்கல், அவர்களுக்கு உள்ள

'அந்த இன்பத்தை எந்தக் குடுவையில் நிரப்பிக் கொள்வது?'

அநேகச் சிறப்புகள். சிறப்பைப் பட்டியலிட்டாலே போதும் என்கிற அளவுக்குத் தன் பணியைச் செய்துவிட்டுப் போய்விடுவதால், மேற்கொண்டு நம்மால் அவற்றின் நுட்பங்களைப் பிரஸ்தாபிக்க இயலாமல் போய்விடுகின்றன.

ஓரிரு பாடல்களை மட்டும் கணக்கிலெடுத்துக் கொண்டு அதிலுள்ள ரசக் குறைவான செய்திகளைக் கிண்டலடிக்கும் பட்டிமன்ற ஆத்மாக்களுக்கு மருதகாசி போன்றோரின் நூலைப் பரிசளிக்க வேண்டும். பாட்டுத் திறனையும் பாடல்கள் தமிழ்ப்பெரு நிலத்தில் ஏற்படுத்தியிருக்கும் மகசூலையும் அவர்கள் புரிந்து கொள்ள உதவும்.

ஆழமான கருத்துகளும் அளவிட முடியாத சுவையும் நிரம்பி வழியும் மருதகாசியின் பாடல்கள் ஒவ்வொன்றின் பின்னாலும் நீக்க முடியாத இலக்கியச் செழுமையைக் காணலாம். இன்பமென்னும் சொல்லுக்கு என்னிடமுள்ள தமிழகராதியில் எத்தனையோ அர்த்தங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் அவை யாவும் கவிஞரின் ஒரு பாட்டுக்குள் அடைய, அதன் மூலம் கிடைக்கும் இன்பம் இருக்கிறதே... அந்த இன்பத்தை எந்தக் குடுவையில் நிரப்பிக் கொள்வது? 'மாமனமுள்ள மறுதாரம்' திரைப்படத்தில்,

'மாடிமனை கோடிபணம்
வாகனம் வீண் ஜம்பம்
வாழ்விலிலே
ஒருவனுக்குத்
தருவதல்ல இன்பம்
மழலைமொழி வாய்
அமுதம்
வழங்கும் பிள்ளைச்
செல்வம் - உன்
மார்மீது உதைப்பதிலே
கிடைப்பதுதான் இன்பம்.'

இவ்வரிகளைச் சொன்னதும் சட்டென என்னைத் துள் முளைக்கும் ஒன்று யாழின்றி எனும் குறட்பொருளில், மருதகாசியின் தனித்திறத்தால் மேலும் அழகு கூடுகிறதல்லவா? இதற்காகவே குழந்தைகளின் காலால் உதை வாங்க வேண்டும்; வேறொருவருடைய குழந்தையிடமாவது. குழந்தைகளுக்கு எந்த மார்பும் ஒன்றுதான். உதைவாங்குகிற நமக்குத்தான் வித்யாசங்கள்.

'பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா, பேசும் பொற் சித்திரமே' என்று உருகும் கவிதைத் தகப்பனும், 'உன்னைத் தழுவிடிலோ உன்மத்த மாகுதடி' என்று மருகும் சராசரித் தகப்பனும் குழந்தைகளிடம் சிறையிருக்கவே விரும்புவார்கள். குறும்புக் கண்களுக்குள் குடியிருக்கும் மேட்டிமைக்கு முன்னால் மண்டியிடவே துணிவார்கள்.

37க்கு 400!

ஜவுளி உலகில் தமக்கெனத் தனியிடம் பிடித்திருக்கும் நல்லி குழுமம், இப்போது இல்லத்தரசிகளின் இதயத்திலும் இடம்பிடிக்கத் துணிந்துவிட்டது. ஆம்... நல்லி குப்புசாமி செட்டி அவர்களின் புதல்வர் நல்லி விஸ்வநாத், தமது பீனிக்ஸ் இந்தியா நிறுவனத்தின் மூலம் ஊறுகாய் உற்பத்தியில் இறங்கியிருக்கிறார். முதல் கட்டமாக இருபத்தொரு வகைகளில் தயாரிக்கப்படும் ஊறுகாய்களில், பேரீச்சம்பழ ஊறுகாயும் அடக்கம். 'தரம், உயர்ந்த தொழில்நுட்பம், குறைந்த விலை இவை மூன்றும்தான் எங்கள் தாரக மந்திரம்' என்கிறார் பீனிக்ஸ் இந்தியா நிறுவனத்தின் பொது மேலாளர் தேவராஜன். ஏனைய நிறுவனங்கள் 300 கிராம் ஊறுகாயை 37 ரூபாய்க்குக் கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையில், இவர்கள் 37 ரூபாய்க்கு 400 கிராம் தருவது குறிப்பிடத்தக்கது.



• பீனிக்ஸ் ஊறுகாய் அறிமுக விழாவில் தேவராஜன், நல்லி விஸ்வநாத்...

- நிரஞ்சனா

படம் : சுந்தரம்

விவசாயக் குடும்பப் பின்னணியிலிருந்து வந்ததால் உழவுத் தொழிலையும், உழவர்களின் பாடுகளையும் தெளிவாகத் திரைப்பாடலில் அவரால் வைக்க முடிந்திருக்கிறது. பின்னணி இல்லாவிட்டாலும் முடியும். என்றாலும், கூடுதல் நெகிழ்வும் கூடுதலான இயைபும் கைவர, கும்பகோணத்தை அடுத்த மேலக்குடிகாடு கிராமமும் காரணமென்றுதான் கருத வேண்டும்.

'கடவுளெனும் முதலாளி
கண்டெடுத்த தொழிலாளி'

என்பதைவிட ஒரு விவசாயிக்கு நேரடி பெருமைதரும் சொற்கள் வேறு உண்டா? சுதந்திரதினக் கொடியேற்று விழாவை முன்னிட்டு நாட்டின் பல பகுதிகளிலும் கண்காணிப்புகள் அதிகப்படுத்தப்பட்டன. தீவிரவாதிகளின் அச்சுறுத்தலும் உலகமெங்கும் பொங்கிப் பிரவகிக்கும் வன்முறை வெறியாட்டங்களும் செய்தித்தாளின் மூன்றாம் நான்காம் பக்கச் செய்திபோல ஆகிவிட்டன. ஒரு கொடி உயர்த்தப்பட்டால், கொடிக்கு உள்ளே பொதிந்து வைத்த மலர்கள் மண்ணை நோக்கி இறைகின்றன. இறைந்த மலர்களைத் தெரிந்தோ தெரியாமலோ மிதித்துவிட்டு இனிப்புகளோடு திரும்பிவிடுகிறோம்.

'இருந்திடலாம் நாட்டில் பல
வண்ணக்கொடி
எத்தனையோ கட்சிகளின்
எண்ணப்படி
பறக்கவேணும் எங்கும் ஒரே
சின்னக் கொடி - அது
பஞ்சம் இல்லையெனும்
அன்னக்கொடி'

உழவு வாழ்வொன்றே உலக வாழ்வுக்கு அச்சாணி. இந்தியா போன்ற ஜனநாயக நாடுகளுக்கு ஒற்றைக்கொடி என்பது சாத்தியமில்லை. ஆனால், பசியில்லை எனும் அன்னக்கொடி அவசியம். மேலே சொன்னதுபோல, கொடியிலிருந்து தெறித்த மலர்த்துளிகளை மிதிக்காமல், ஆட்சியின் கால்களும் அரசியலின் கால்களும் உழவை மேம்படுத்த வேண்டிய நிலை இன்று.

கான்க்ரீட் கட்டடங்களால் ஒரு நாடு வளர்ச்சியுற்றது என யாரும் சொல்ல மாட்டார்கள். தொழிலும் அபிவிருத்திகளும் சேராத நாட்டை சுபிட்சம் நெருங்கவே நெருங்காது. மருதகாசியின் சிந்தை போல முன்னேற்றப் பாதையில் நடக்க முயற்சி மட்டும் போதாது, உழைப்பும் தேவை!

(வீசும்)

படம் : ஸ்ரீஹரி

வில்லங்க பாமா... விபரீத கீதா!

கடந்த வாரம்...

ராதாவிடம் மைசூர் போவதாகப் பொய் சொல்லிவிட்டு பாமாவும், ஷ்யாமும் மாமல்லபுரம் பீச் ரிசார்ட்டுக்கு வந்திருந்தார்கள். அதே பீச் ரிசார்ட்டுக்கு கவிதாவும் தமது குடும்பத்தோடு ஒரு பார்ட்டிக்காக வந்திருக்கிறாள். கவிதாவின் கணவன் அருண் வேலை செய்யும் நிறுவனத்தின் எம்.டி. கவிதாவையும் அருணையும் பாராட்டி பார்ட்டி ஏற்பாடு செய்திருக்கிறார்.



ஷ்யாம், பாமா ஜோடியாக இருப்பதைப் பார்த்த கவிதா அதிர்ச்சியடைகிறாள். ராதாவுக்கு விஷயத்தைச் சொல்லி அவளையும் ரிசார்ட்டுக்கு வரவழைக்கிறாள்.

இப்படி நடக்கும் என்று உணர்ந்த பாமா, ஷ்யாம் புத்திசாலித்தனமாகத் தப்பிவிட, கவிதாவின் மேல் ராதா கோபம் கொள்கிறாள். 'அடுத்தவர் விவகாரம் உனக்கேன்' என்று வகையாக வாங்கிக் கட்டிக் கொள்கிறாள் கவிதா. கவிதாவுக்காகப் பரிந்து பேசும் எம்.டி.யும் அருணால் அவமானப்படுகிறார்.



மாமல்லபுரம் விசிட்டுக்குப் பிறகு ராதாவை டைவர்ஸ் செய்யும்படி ஷ்யாமை வற்புறுத்துகிறாள் பாமா. அது முடியாது எனில் ராதாவைக் கொன்று விடுவதாக மிரட்டுகிறாள் பாமா! எம்.டி.யை ரிசார்ட்டில் வைத்து அவமானப்படுத்தும் அருண், வேறு வேலை தேட முயற்சி செய்கிறான்.

இன்னொரு பெரிய நிறுவனத்தில் வேலையும் கிடைக்கிறது அருணுக்கு. புது வேலை கிடைத்தவுடன் பழைய நிறுவனத்துக்குச் சென்று முரட்டுத்தனமாக நடந்துகொள்கிறான். அதுவே அவனுக்கு வினையாக முடிகிறது. பழைய எம்.டி.யும், புது நிறுவனத்தின் எம்.டி.யும் நண்பர்கள் என்பதால் அருணுக்குப் புதிய வேலையும் பறிபோகிறது. இதற்கிடையில் கல்பனாவின் தங்கை தேஜா ஊரிலிருந்து வருகிறாள். அவளுக்கும் நாராயணனின் இளைய மகன் ஆனந்துக்கும் முதல் சந்திப்பிலேயே சண்டை மூள்கிறது.

கார்த்திக்கும் அவன் சொந்த அம்மா அஸ்வினியும் சந்திக்கவே கூடாதென்று கீதா பல விதங்களில் தடுக்கிறாள். அவளது எதிர்ப்பையும் மீறி கார்த்திக்கின் பிறந்த நாளன்று அஸ்வினி வீட்டுக்கே வந்துவிட, கீதா கடும் கோபமடைகிறாள். அஸ்வினியை விரட்டியடிக்கிறாள்.

இனி...

ராதாவின் மாமியார் ஆனந்தாயி ஊரிலிருந்து வருகிறாள். ராதாவைப் பல்வேறு வகைகளில் டார்ச்சர் செய்கிறாள். ராதா கிருஷ்ண ஜெயந்தி கொண்டாடிக்கொண்டிருக்க, 'கிருஷ்ணன் மாதிரி பிள்ளை பெற்றுக் கொள்ளத் தெரியாதவளுக்கு இது ஒரு கேடா?' என்று பண்டிகை கும்பிட



விடாமல் தடுத்து, மனதைக் காயப்படுத்துகிறாள். இதற்கிடையே தோழியின் மூலமாகவும், ஜானவி பாட்டியின் மூலமாகவும் ஷ்யாம் - பாமா நெருக்கம் பற்றி ராதாவுக்குத் தெரிய வருகிறது.

ஷ்யாமும், பாமாவும் நெருக்கமாகப் பழகுவதாகப் பலரும் புகார் சொன்னதைப் பற்றித் தீவிரமாக யோசிக்கும் ராதா, ஒரு முடிவுக்கு வருகிறாள். அந்த முடிவு என்ன?

வேலையின்றி இருக்கும் அருண் அடுத்து என்ன செய்வதென்று புரியாமல் தவிக்கிறான். மறுபடியும் பழைய எம்.டி.யையே பார்த்து வேலை கேட்கும்படி யோசனை சொல்கிறாள் கவிதா. அவளது யோசனைப்படி இருவரும் சேர்ந்து எம்.டி.யை அவரது வீட்டில் சந்திக்கிறார்கள்.

அருண் செய்த தவறுகளை எம்.டி. மன்னித்தாரா? அருணை மறுபடி வேலையில் சேர்த்துக் கொண்டாரா?

அஸ்வினியிடம் போகாமல் எப்படி கார்த்திக்கைக் காப்பாற்றுவது என்கிற மனப் போராட்டத்தில் இருக்கிறாள் கீதா. அவளது விருப்பத்தையும் மீறி அஸ்வினி, கார்த்திக்கைச் சந்தித்துக் கொண்டிருக்கிறாள். ஒரு கட்டத்தில் பொறுமை இழக்கும் கீதாவும், சந்திரசேகரும் அஸ்வினியை அழைத்துப் பேசுகிறார்கள். கார்த்திக்கை இனி அவள் சந்திக்கக்கூடாதென்றும், அவள் ஊரைவிட்டே போய்விட வேண்டும் என்றும், அதற்காகப் பணம் தருவதாகவும் சொல்கிறார்கள். அஸ்வினி அதற்கு உடன்பட மறுக்கிறாள்.

கார்த்திக்கிடம் விளையாட்டாக, தங்களது கதையைப் பற்றி கீதா சொல்லிக் கருத்து கேட்க, பெற்ற அம்மாவிடம்தான் பிள்ளை இருக்க வேண்டும் என்று அவன் கருத்து தெரிவிக்கிறான். இதனால் பெருத்த அதிர்ச்சிக்குள்ளாகும் கீதா, அஸ்வினியை விரட்டுவதற்கு ஒரு விபரீதமான வழியைத் தேர்ந்தெடுக்கிறாள். அந்த வழி என்ன? பதில்கள் இந்த வார எபிசோடுகளில்.

'கண்ணாடி கதவுகள்' தொடரை விஜய் டி.வியில் பார்த்துவிட்டுத் தகுந்த விமர்சனங்களை எழுதி அனுப்பவும். தேர்ந்தெடுக்கப்படும் ஓர் அதிர்ஷ்டசாலி நேயருக்குத் தங்க நாணயம் பரிசாகக் காத்திருக்கிறது! கல்கியில் வெளியாகும் கூப்பனை விமர்சனக் கடிதத்துடன் இணைத்து அனுப்புங்கள்.

கண்ணாடி கதவுகள்,
விஜய் டி.வி,
அஞ்சல் பெட்டி எண்: 8484,
சென்னை - 600 034





அழகா

''ராஜேஷ், நான் எப்ப அழகா இருக்கேன்... சுடிதார் போடும்போதா? ஜீன்ஸ் போடும் போதா?''


''நான் கண்ணாடி போடாதபோது!''

- தஞ்சை தாமு

''வாலமீனுக்கும் விலாங்கு மீனுக்கும் கல்யாணம் நடத்த நம்ம தலைவர்தான் பொருத்தமானவரா.. எப்படி?''

''அவரும் எப்பவும் 'தண்ணியிலே'தானே இருக்காரு!''

- தஞ்சை தாமு





''எனக்குச் சாகாவரம் வேண்டும் பிரபு...''

''அப்படியே ஆகட்டும்... ஆனால் இடையில் ஆபரேஷன் எதுவும் நடக்காதவாறு நீதான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்...''

- கே.ஆனந்தன்


"நீ செய்த இந்த உதவியை என் உயிர் உள்ளவரை நான் மறக்க மாட்டேன் பிரதர்!"


"நீ என்ன சொல்றே? புரியலையே?"

"நான் காதலிச்ச தீபாவைக் கல்யாணம் செய்துக்கிட்டியே."

- பெ.கலாசாமி

இருப்பது ப்போ?





"காதுல தொடர்ச்சியா ரயில் போற மாதிரி இரைச்சல் கேட்குதுன்னு மருந்து வாங்கிச் சாப்பிட்டீங்களே... இப்போ எப்படி இருக்கு?"

"ரயில் ஒவ்வொரு ஸ்டேஷன்லயும் நின்னு நின்னு போறமாதிரி கேட்குது டாக்டர்!"

- என். உஷாதேவி



"மன்னரின் முதுகில் என்ன போஸ்டர் ஒட்டியிருக்காங்க?"

"'சமீபத்தில் ஆபரேஷன் செய்யப்பட்டுள்ளதால், தயவுசெய்து யாரும் தாக்க வேண்டாம்'னு எழுதி ஒட்டியிருக்காங்க!"

- ஆர்.வி.பிரசாந்த்

நேர்த்திக் கடன்!

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு ரூ.2,500 பெறும் கதை

செ.செண்பகக்கண்ணு

"அய்யா ஊஞ்க்காட்டு கருப்பசாமி, நீ உருட்டி முழிக்கிற முழியும் ஓங்கிக் காட்டுற அருவாவும் நான் நேந்துக்கிட்டத தாண்டிப் போயிட்டேன்னு சொல்லாம சொல்லுது. ம் என்ன செய்ய...? பக்காவுக் குள்ள உழக்கு போவும்! ஒழக்குக்குள்ள பக்கா போவுமா? அந்தக் கதையா வர்றது எட்டணான்னா செலவு பத்தணாவா இருக்குது. ஒத்தக் கட்ட எப்படியோ உருண்டு புரண்டு பொட்ட மவளக் கெட்டிக் குடுத்துப்புட்டேன். வாங்குன கடனுக்கு வட்டி வரப்பு களையா வளர்ந்து கெடக்கு. கொஞ்ச கொஞ்சமா அடைச்சுக் கிட்டு வாறேன். இன்னிக்குக் கொண்டு போற தயிரும் நெய்யும் காசாவட்டும், உன் கோயிலு வாசலுல வெண்கல மணி வாங்கிக் கட்டிப்புடுறேன். வர்ற கடைசி வெள்ளி உங்கோயிலுல அடிக்கப் போறது எம் மணியாத்தான் இருக்கோணும்..." கை நிறைய அள்ளின விபூதியை நெற்றியில் பட்டையாய்ப் போட்டவள் மிச்சத்தை வாயில் போடுகிறாள். ஏழை கும்பிடும் கருப்பசாமியும் பாழாய்த்தான் நிற்கிறார். பங்குனிக் கொடைக்கு அடித்த வண்ணப்பூச்சு, பெய்த அடைமழைக்குத் தாக்குப் பிடிக்காமல் மண்ணோடு கரைந்து போய் வெறும் புடமாய்த்தான் காட்சி தருகிறது.

சேலை முந்தியை வட்டமாகச் சுற்றியவள், சும்மாடாய் தலையில் வைத்து அடுக்குப்பானை எடுத்து வைக்கிறாள். மேற்கு திசைக் காற்று முன்னோக்கித் தள்ள, நடக்கிறாள் என்பதைவிட பறக்கிறாள் என்பதுதான் உண்மை.

ஒற்றைப் பனைமரத்துக்கு அடியில் மாடத்தி நிறைமாதக் கர்ப்பிணியாய் நிற்கிறாள்.

"யாருடியாத்தா... அட மாடத்தி! எப்ப வந்த? எத்தன மாசம்? உம் மாமியாரு, அதான் அந்த பாவூர்க்காரி எப்பிடி இருக்கா?" எதிராளியைப் பேசவிடாமல் தன் போக்கில் பேசுவது வள்ளியின் வழக்கம்.

"வாழறவ தாழற வூட்டுக்குப் போவ மாட்டா. தாழறவா வாழற வூட்டுக்குப் போவ மாட்டாம்பாக. எம் பவுச எடுத்துச் சொன்னா நிக்கிற கல்லும் கரஞ்சு நெல கொலஞ்சு போயிடும். பகையாளிக்கு வாக்கப்பட்டாலும் பாம்புக்கு வாக்கப்படப் கூடாதுத்தா. கெட்டிக் கொடுத்த நாளுல இருந்து சிரிச்சு வாழ்ந்ததவிட சிவிப் பிக்கிட்டு ஆத்தா வூட்டுக்கு வந்த காலந்தான் அதிகம். ஆத்தா ஒரு நார வாயி. மவேன் ஒரு நச்சு வாயி. உரல்ல தலையக் கொடுத்துப்புட்டு உசுருக்குப் போராடுறேன்'' மாடத்தி துயரக் கதையைத் தொடர, வள்ளிக்கு மனசு மாங் கொலையா ஆடுகிறது.

'யய்யா ஊஞ்க்காட்டான், நல்ல வேள எம் புள்ளைக்கு நல்ல வாழ்க்க கொடுத் துப்புட்ட. எடுத்துக் கும்பிட்ட கைய உசத்தி விட்டுட்ட... ம்ம்... எம் மவெ உச்சி மானி கொடுத்து வைச்சவதான். அவெ புருஷன் பச்சாத்தான்... சும்மா சொல்லப் படாது, பொண்டாட்டிய உள்ளங்கையில வச்சுத்தான் தாங்குவான். அம்புட்டுப் பாசம். மாமியாரு வெள்ளத்தாயி

சக்கரக்கட்டியா இனிக்க இனிக்கப் பேசுவா. ஆனாலும் சுண்ணாம்பு வெள்ளையா இருக்குங்கிறதுக்காக வெத்தல முழுசும் தடவிப் போட்டா வாயி வெந்து தான் போவும். அந்தக் கதையா அப்பப்ப குத்திக் குடஞ்சு பேசுவா. உச்சிமாளிய கெட்டிக் குடுத்ததுலியோ வயிறு நிறைஞ்சு பத்து மாசத்துல வந்து நின்னதுலியோ குற இல்ல. ஆனா பாவி மவெ தலப்புள்ள பெற முடியாம தவிச்சு நின்னதத்தான் தாங்க முடியல. ஆயா வில்லி 'புள்ள குறுக்க கெடக்குடி வள்ளி. பேசாம டவுனு தர்மாஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போ'ன்னு கைய விரிச்சுப்புட்டா. இடுப்பு வலியோட எம்மவா நிக்க, துடுப்புக் கட்டையா நான் துடிச்சு நிக்க, மலையா எதுத்தால ஊய்க்காட்டு கருப்ப சாமி.. அப்பத்தான் வாய் விட்டு நேந்துக்கிட்டேன். 'அய்யா கருப்பு! எம்புள்ள பொழச்சு தாயும் புள்ளை யுமா உம் வாசலுக்கு வந்து நின்னா ஊருக்கே கேட்குற மாதிரி வெங்கல மணி வாங்கியாந்து கட்டுறே'ன்னு.

வேண்டினது வீண் போவல. உதிச்ச சூரியனா மாட்டு வண்டியில குதிச்சு வந்தான் தம்புரான். 'ஏஞ்சாமி! தங்கச்சி வவுத்துப் பாரத்த எறக்க முடியாம, தவுச்சுக் கெடக்கா! பாழப்பய ஊருல ஒரு





காரு பஸ்ஸு‌கூட கெடையாது. தர்மாஸ் பத்திரிக்குப் போவணும், வண்டியத் திருப்புன்னு சொன்னப்ப ஊகன்னுகூட ஒரு வார்த்த சொல்லாம சிட்டா வண்டிய ஓட்டி ஆஸ்பத்திரிக்குப் போயி, அங்கிட்டு இங்கிட்டுமா ஓடி மருந்து மாத்துர வாங்கியாந்து என்னமா ஒத்தாசை செய்தான். ம்... உச்சிமாளியும் அலுங்காம ஆம்பளப் புள்ளையும் பெத்துப் புருஷன் வீடு போயி சேந்துட்டா. ஆனா நேத்திக் கடன்... நிக்கிற ஒத்தப் பனைமரமா உறுத்திக்கிட்டு நிக்குது..' பெருமூச்சு விடுகிறாள் வள்ளி.

இதற்குள் தன் கதையை சொல்லி விட்டு வரப்போகும் மினி பஸ்ஸை எதிர்பார்க்கிறாள் மாடத்தி.

ஆட்களை மடித்துச் சுருட்டித் திணித்துக் கொண்டு வருகிறது மினி பஸ். அடுக்குப் பானையோடு நிற்கும் வள்ளியையும் வயிற்றுப் பாரத்தோடு நிற்கும் மாடத்தியையும் கண்டு மிரண்டுபோய் கொஞ்சம் தள்ளியே நிற்கிறது. பத்துப் பதினைந்து பேர் இறங்கிவிட, இரக்கப்பட்டு இருவரையும் ஏற்றிக்கொள்கிறது.

"வடக்கே இமயமலை, தெற்கே கன்னியாகுமரி, மேற்கே அரபிக்கடல், கிழக்கே வங்காள விரிகுடா வரைக்கும் நமது மகாராஜா..."

"ஜெயித்துவிட்டாரா..?"

"அதுவரைக்கும் ஓடி ஓடி மறைந்து கொள்கிறார்..!"

- இ.தங்கமணி



இதற்குள் ஒருத்தி காலால் தயிர்ப் பானையை உதைத்துத் தள்ள வள்ளிக்குக் கோபம் கொப்பளிக்கிறது.

"அட எடுபட்டுப் போறவளே... சோறு போடுற தயிருப் பானையப் பீச்சாங் காலுட்டு மிதிக்கிறயே நீ நல்லாயிருப் பியா? வெள்ளிக்கெழும வெளங்காம போயிருவ..."

"உனக்கு எடங்கெடச்சதே பெரிசு. இதுக்கு மேல சட்டி, பெட்டி... போத்தா போ... உன்ன தள்ளிப்போ... ம்... காலங் காத்தால உசுர எடுக்கிறாளுக..." நடத்துனர் நடத்தை கெட்டுப் பேசுகிறார்.

"கோயில் வாசல், போஸ்ட் ஆபீசு, பாம்பே ஸ்டோரு... எறங்குங்க... கொள்ளையா போவுது. ரெண்டு வழியிருக்குத்தா... பாத்து எறங்கு..." தொண்டை தண்ணி வர்ற கத்துகிறார்.

தலைச்சுமையும் மனச்சுமையும் சேர்ந்து கனக்கத் தெருத்தெருவாய், தயிரையும் நெய்யையும் கூவி விற்கிறாள்.

சம்பாத் தெரு, கூலக்கடை பஜார், அணைக்கரைத் தெரு எனத் தெருவோடு தேய்ந்து ஒரு வழியாக வெறும்பானையோடு ஒப்பனை பிள்ளையார் கோயிலில் உட்காருகிறாள் வள்ளி. சுருக்குப் பையை அவிழ்த்துத் தட்டிப் பணத்தை எண்ணுகிறாள். இரு நூற்றி எட்டு ரூபாய் ஐம்பது காசு. நேராக பாண்டியன் நாடார் பாத்திரக் கடைக்குப் போகிறாள்.

சிறுசும் பெருசுமாய் வெண்கல மணிகள் நாக்கைத் தொங்க விட்டுக்கொண்டு கிடக்கின்றன. இருப்பதில் எடுப்பாய் உள்ள மணியைத் தொட, அது கிள்ளுபட்ட பிள்ளையைப் போல் கூப்பாடு போடுகிறது.

"யாத்தா... தூரப்போ.. நீயெல்லாம் மணியத் தொட்டுப் பாக்கத்தான் வந்துருக்க. துட்டு கொடுத்து வாங்குற மாதிரி தெரியல. சொன்னா நானே எடுத்துத் தரமாட்டேனாக்கும். அவசரமா போவுது.." கோபமாய்ப் பேசுகிறான் கடைக்காரப் பையன்.

"அட ஆக்கங்கெட்ட பயலே. தொட்டுப் பாக்க துட்டு கேக்கிறியாக்கும். சரி சரி, இந்த மணி



"எதுக்காக ஜெயில்லருந்து தப்பிச்சே?"

"இடமாற்றம் அவசியம்னு ராசி பலன்ல போட்டிருந்துச்சுங்க, ஐயா!"

- அம்பை தேவா

எம்புட்டு ரூபா?" விலையைக் கேட்கிறாள் வள்ளி.

"மூன்னூத்தி இருபது ரூபா.." அடுத்த கிராக்கியைக் கவனிக்கப் போய் விடுகிறான் பையன்.

தப்பித்தால் போதும் என்று நடையைக் கட்டுகிறாள் வள்ளி. வீட்டில் இருக்கும் சிறுவாட்டுப் பணம் ஒரு நூறு தேறும். இருப்பதையும் அதையும் சேர்த்து நாளையே வாங்குவது என முடிவு செய்து ஊர் வந்து சேருகிறாள்.

ஊய்க்காட்டுக் கருப்பசாமியை ஏறெடுத்துப் பார்க்க வெட்கப்பட்டுத் திராணியற்று நடக்கிறாள். அதற்குள் கோயில் திண்ணையில் நாட்டாமை, அம்பலம், நாகராசு... ஏதோ பேசுவதும் எழுதுவதுமாய் இருக்கிறார்கள்.

'கோயிலு கொட விஷயமா இருக்குமோ... இல்ல வேற ஏதாவது ஏடாகூடமா. சரிசரி போயித்தான் கேட்டுடுவோமே..' மனசுக்குள் பேசியவாறே வருகிறாள்.

"ஏல... ஏ... செவனு என்னல... ஊரு பெரியவுக கூடிக் கெடக்காக... என்ன விஷயம்...?" வள்ளி கேட்கிறாள்.

"யாத்தோவ்.. பஸ்லே வராம அங்க ராயன்குளம் விளக்குல இருந்து மூணு மையிலு நடந்தே வந்தோம். இப்ப ஊருக்குள்ள மினி பஸ்ஸு வருது. ஒரு ஸ்டாப் கூட இல்ல. வெளியூரு போறவுக, ஒத்தப் பனைமரத்துக்கு அடியிலயும் உசந்து நிக்கிற கருப்பசாமி நிழலுலயும் நின்னு கருமாயப்படுறாக. அதான் நிழலுகொட கெட்டப்போறாக. அதுக்கு ஊர்ப் பெரியவுக அவுகளால முடிஞ்சத கொடுக்குறாக. நீ எம்புட்டுக் கொடுக்கப் போற..." எளக்காரமாகக் கேட்கிறான் செவனு.

காலையில் நடந்தது வள்ளிக்குக் கண் முன் வருகிறது.

'ஆத்தி.. வேகாத வெயிலுல ஒத்தப் பன மரத்து நிழலுல நிறமாச சூலி கால மாத்தி மாத்தி வைச்சுக்கிட்டு என்னமாக் கருமாயப்பட்டா. மாடத்தி வேற எம்மவா உச்சிமாளி வேற இல்லயே... அங்க ஒரு நிழலுகொட கட்டுறது எம்புட்டு அவசியம். அதுக்குக் காக கொடுக்குறது எம்புட்டுப் புண்ணியம். வர்ற தலமுறையாவது நிழலுல இளப்பாறட்டும்.'

"ஏல... செவனு, அங்கன நான் வர முடியாது. ஊரு பெரியவுக உத்திரமா நிக்காக. எம்பங்கு இந்தா இருநூத்தி எட்டு ரூபா அம்பது பைசா கொடுத்துப்புடு..." மலைத்துப் போய் நிற்கும் செவனுவின் கையில் சுருக்குப் பையைத் திணித்து விட்டு நிமிர்ந்து நடக்கிறாள் வள்ளி. ஏதோ நினைவு வந்தவளாய் ஊய்க்காட்டு கருப்பசாமியைப் பார்க்க, அவர் சிரிப்பதுபோல் தெரிகிறது. 'வாங்குன கடனத் தள்ளி வச்சாலும் நேத்திக்கடனத் தள்ளி வைக்கப்படாதும்பாக. இன்னும் ஒரு அஞ்சாறு நாளுக்குள்ள தயிர மோராக்கி மோருல நெய்யெடுத்து எத்தனை கருமாயப்பட்டும் வித்துப் பெறக்கிக் காசாக்கி வெண்கல மணி வாங்கிக் கட்டுப்புடுறேன் சாமி, இப்ப என்ன மன்னிச்சுப்புடு.' மனசுக்குள் பேசிக்கொண்டே நடக்கிறாள் வள்ளி. ●

"சீரியல்னா இளக்காரமா பாக்குறாங்க!"

– சீறுகிறார் திருச்செல்வம்



தமது நண்பர் 'மெட்டி ஒலி' திருமுருகனைப் போல திருச்செல்வமும் 'கோலங்கள்' தொடர் முடிந்த கையோடு சினிமாவுக்குச் செல்கிறார்.

"அதுதான் என்னோட டார்கெட். ஆனா சுலபமா சினிமால நுழைய முடியல. சீரியல் பக்கம் போனேன். ஒரு நல்ல ஹிட் கொடுத்திருக்கேன். அடுத்து பெரிய திரை டைரக்ஷன்தான். மூணு, நாலு ஸ்கிரிப்ட் இருக்கு. தயாரிப்பாளர்களும் அணுகியிருக்காங்க. விரைவில் என்கிட்டருந்து நல்ல சினிமாவை எதிர்பார்க்கலாம்" என்கிறார் திருச்செல்வம்.

அதென்ன நல்ல சினிமா?

"ஒரு நடிகருக்காகக் கதை பண்ணாமல், கதைக்காக நல்ல கேரக்டர்களைத் தேர்ந்தெடுத்து சினிமா பண்ணுவது. பாரதிராஜா, பாலா, சேரன் மாதிரி 'டைரக்டர்ஸ் சினிமா' கொடுப்பேன். நல்ல படங்கள் வராததாலதான் ஒரே மாதிரியான கதைகொண்ட மோசமான படங்களும் இன்னைக்கு ஓடுது. இங்க சீரியலில் இருந்து வந்தவங்கன்னா இளக்காரமாத்தான் பாக்குறாங்க. அவங்களுக்கான முக்கியத்துவத்தைக் கொடுக்கறது இல்ல. ஷாருக்கான், மாதவன் எல்லாம் சீரியலில் இருந்து வந்தவங்கதானே. இந்த மாதிரியான வித்தியாசங்களையெல்லாம் தாண்டி சீக்கிரம் நல்ல சினிமா கொடுப்பேன்."

சரி, 'கோலங்கள்' தொடரை ஏன் இந்த இழு இழுக்கிறீர்கள்?

"தொடரை நாங்க இழுக்கல. இரண்டு, மூன்று வருஷம் தாண்டி சீரியல் போய்க்கிட்டு இருப்பதனால அப்படித் தோணலாம். கதை வருஷங்களைத் தாண்டிப் போயிட்டு இருந்தாலும் நாங்க ரொம்ப கலர்ஃபுல்லா கொடுத்துட்டு இருக்கோம். அதனாலதான் ரேட்டிங்ல முதலிடத்துல இருக்கு."

குழு விவாதம் செய்துதான் திரைக்கதை அமைக்கிறீர்களா?

"கிட்டத்தட்ட 500 எபிசோட் வரைக்கும் எந்தக் குழு விவாதமும் செய்தது கிடையாது. முழுக்க முழுக்க இது இயக்குனரோட கதைதான்; சிந்தனைதான். வாழ்க்கையில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள், சந்திப்புகள் இதைத்தான் சொல்லிக்கிட்டு வரேன். அதனாலதான் இது வித்யாசமா இருக்குன்னு மக்கள் சொல்றாங்க."

தொடரில் வருகின்ற 'கங்கா' என்ற நடிகைக்கும் உங்களுக்கும் 'நட்பு' இருப்பதால்தான் அவங்களுக்கு ரொம்ப முக்கியத்துவம் கொடுத்துக் கதையை நகர்த்துகிறீர்களாமே?

"கண்டிப்பா இல்லை. அபி கதாபாத்திரம், அவங்க பிரசவத்துக்குப் போனதால கதையில ஒரு திடீர் இடைவெளி விழுந்திருச்சு. அந்த இடைவெளிய நான் வேறு ஒரு கதாபாத்திரத்தை உருவாக்கி நிரப்ப வேண்டிய கட்டாயம். அதனால தான் சில எபிசோட் கங்கா கதாபாத்திரத்தைச் சுற்றி கதை நகர்ந்துச்சு. அவங்க

மலையாளத்துல மூணு சீரியல்ல கதா நாயகியா நடிக்கிறாங்க. உண்மையிலே அவங்ககிட்ட நாங்க சொன்னதவிட குறைவாகத்தான் அவங்களைக் காட்டியிருக்கோம். சீரியல்ல வேலை செய்ற எல்லார்கிட்டயும் நான் நட்பாகத்தான் பழகுறேன். அதேமாதிரிதான் அவங்ககிட்டயும்."

இந்தக் கதையில அண்ணனோட கட்டின பொண்ணு, இப்போது தம்பியைத் திருமணம் செய்துகொள்ளப் போவதாகக் காண்பிப்பது, கலாசார இடறல் மாதிரி தோன்றவில்லையா?

"இதிலென்ன கலாசார இடறல்? நாம எல்லாருமே ஒரு பொய் முக்காடு போட்டுக்கிட்டு இருக்கோம். நம்மைச் சுற்றி எத்தனை வக்ரங்கள் நடக்குது தெரியுமா? ஸ்கூல் மாணவிகளிடம் பாலியல் பலாத்காரம் செய்கிற ஆசிரியர்கள், சின்னக் குழந்தைகளிடம் தன் வக்ரங்களைக் காட்டுகிற மனிதர்கள் இருக்குற சமூகம்தானே இது? சொல்கிற விதத்தில் தப்பு இல்லாமல் சொன்னால் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள். அபார்ணா சென்னின் Mrs.Iyer படம் இதற்கு உதாரணம்."

"தொல்காப்பியன் என்ற கதாபாத்திரத்தோடு அவருடைய நண்பனின் மனைவி தங்கியிருப்பதுபோல காட்டுகிறீர்கள். இது நிஜத்தில் சாத்தியமில்லாத விஷயமில்லையா?

"உண்மைதான். கணவன் இல்லாத பெண் தன் உணர்வுகளை வெளிப்படுத்துகிறாள். அதுதான் அந்தக் கதாபாத்திரம் தொல்காப்பியன் மேல ஒரு ஈடுபாடு கொண்டிருப்பதாகக் காண்பிக்கப்படுகிறது. இந்தக் கதாபாத்திரத்துக்கு ஒரு 'நாவல்டியான எண்ட்' வச்சிருந்தோம். கதை கொஞ்சம் வேறு மாதிரி நகர்ந்ததால் இந்தக் கதாபாத்திரத்தை வேறு ஒரு நல்ல முடிவு கொண்டு வருவதற்காக இன்னமும் வைத்திருக்கிறேன்."

இயக்குனராக இருந்துகொண்டு, நடிகராகவும் இருப்பது சுலபமாகத் தோன்றுகிறதா? நடிப்பதில் உங்களுக்கு ரொம்ப விருப்பமா?

"நான் நடிக்கிறதுக்கு எப்பவுமே ஆசைப்பட்டது கிடையாது. மெட்டி ஒலியில் என் நண்பர் திருமுருகன் நடிக்கச் சொன்னதால் சந்தோஷ் கதாபாத்திரத்தில் நடிக்க வேண்டியதாகிவிட்டது. ஆனா அந்தக் கதாபாத்திரம் ரொம்பப் பாராட்டு வாங்கித் தந்துச்சு. அதனால இந்த சீரியல்ல நடிக்கற தேவை ஏற்பட்டது. மற்றபடி எதுவுமில்லை."

- சுகந்தி ஜி. பாரதி

படம் : **ஸ்ரீஹரி**

கிளம்பிட்டாங்கய்யா... கிளம்பிட்டாங்க!

• கங்கா



‘அஜய்’ டீ.வி.யின் மிகப் பிரம்மாண்டமான ப்ரோக்ராம் ‘பிராண்ட் மாஸ்டர் கேம் ஷோ.’ இதனை நடத்துபவர் புலவர் புண்ணியகோடி. மலையாளம் கலந்த தமிழில் அவர் கேமை நடத்தும் விதமே அழகு. இதோ ஷோவுக்கு வந்திருக்கும் குடும்பத் தலைவி குப்பம்மாவிடம் கேள்விகளை ஆரம்பிக்கிறார் புண்ணியகோடி.

யார் மனசுல யாரு?



“யாரு மனசுல யாரு மிஸஸ் குப்பம்மா?”

“யார் மனசுல யாரு சார்?”

“அதாம்மா உங்களைக் கேக்கறேன்.. யார் மனசுல யாரு?”

“அதான் சார் நானும் கேக்கறேன்.. யார் மனசுல யாரு?”

“சரியாப் போச்சு போங்க. சரி, வாங்க நிகழ்ச்சிக்குப் போகலாம்.”

“போலாம் வாங்க சார்!”

“எஸ் மிஸஸ் குப்பம்மா, நீங்கள் உங்கள் மனத்தில் நினைத்திருக்கும், அதாவது வெறுக்கும் மனிதரைப் பற்றிப் பேசுவோமா?”

“எஸ் சார்.”

“மிஸஸ் குப்பம்மா! நீங்கள் வெறுக்கும் அந்தக் குடும்ப உறுப்பினர்... புகுந்த வீட்டைச் சேர்ந்தவரா?”

“ஆம்!”

“அவர் ஒரு ஆணா..?”

“இல்லை!”

“நாற்பது வயதுக்கு மேற்பட்டவரா?”

“ஆம்...”

“அவரைப் பார்த்தாலே கோபம் வருமோ?”

“ஆம்...”

"உங்கள் கணவரின் ஆதரவு பெற்றவரா?"

"ஆம்."

"அடிக்கடி பார்க்கும் சந்தர்ப்பம் வருமா?"

"ஆம்."

"ஒரே வீட்டில், உங்களுடன் வசிப்பவரா?"

"ஆம்."

"என்னுடைய எட்டாவது கேள்வி. அவர் மாமியார், சின்ன மாமியார், நாத்தனார், ஓரகத்தி... இவர்களில் ஒருவரா...?"

"ஆம்."

"ஓரகத்தி... நாத்தனார்... இவர்களில் ஒருவரா?"

"இல்லை."

"சின்ன மாமியார்.."

"இல்லை!"

"என்ன மேடம்... இப்ப எவ்வளவு பர்சன்ட் கான்ஃபிடன்ஸ் இருக்கு?"

"அல்மோஸ்ட்... நீங்க கண்டு பிடிச்சாச்சுன்னு தோணுது சார்!"

"மிஸஸ் குப்பம்மா, உங்கள் நினைவில் பெரிய குறையில்லை என்றுதான் நினைக்கிறேன். இது பெரிய ஆச்சரியமான விஷயமும் இல்லை. ஜஸ்ட் நேச்சுரல். உங்கள் மனதில்... நீங்கள் வெறுத்துக் கொண்டிருக்கும் அந்த நபர்... உங்கள் கணவரைப் பெற்றெடுத்த... வீட்டுக்குக் காவலாக இருக்கின்ற... நல்ல திடகாத்ரமாக, உயிரோடு இருக்கின்ற... வெறும் தோற்றத்திலேயே உங்களை டார்ச்சர் செய்கின்ற... தி ஒன் அன்ட் ஒன்லி டார்ச்சர்... யுவர் மதர் இன் லா... கரெக்ட்?"

"எஸ் ஸார்!"

"வெரி காமன் செலக்ஷன்... அண்ட் ஜெனியூன் செலக்ஷன்.."


கற்பனை : **ம.சீனிவாசன்**



ரசிகமணி டி.கே.சி. என்றதும் புன்னகை தவழும் முகமும் பஞ்சு போன்ற அடர்த்தியான வெண் மீசையும் 'பளிச்'சென நினைவுக்கு வரும். தமிழ் இலக்கியப் பதிவேடுகளில் இவரது படைப்புகளுக்கு முக்கிய இடமுண்டு. அண்மையில் அவரது 125-ஆவது பிறந்த நாள் விழா, அவர் பிறந்த ஸ்ரீவில்லிபுத்தூரில் நடந்தது. டி.கே.சி.யின் பேரன்கள் தீப.நடராஜன், தீப.குற்றாலலிங்கம், எழுத்தாளர் பொன்னீலன், டி.கே.சி.யால் புடம் போடப்பட்ட தமிழறிஞர் சண்முகசுந்தரம், பன்மொழிப் புலவர் ஜகந்நாதராஜா மற்றும் இலக்கிய அன்பர்கள் பலரும் கலந்து கொண்டனர். டி.கே.சி.யின் உருவப் படத்திறப்பு, அவர் பிறந்து வளர்ந்த வீட்டில் கல்வெட்டுத் திறப்பு ஆகியவை நடைபெற்றன. விழாவில் பங்கேற்றவர்கள் ரசிகமணியின் இலக்கியச் சுவைகளையும் அவருடனான அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர். 'அவரது படைப்புகள் அரசுடைமை ஆக்கப்பட வேண்டும். தபால் தலை வெளியிட வேண்டும்' என்று கோரிக்கை வைத்தார்கள். ஸ்ரீவில்லிபுத்தூர் இலக்கியப் பேரவை அமைப்பு விழாவை மிகச் சிறப்பாக நடத்தியது.

- குரு.மனோகரவேல்

நடக்குமென்பார்; நடக்கும்!



மேஷம் : பொருளாதாரம் மேலோங்கும். குடும்ப வாழ்க்கை நன்றாக இருக்கும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். திருமணம் கைகூடும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். கொடுக்கல், வாங்கல் நற்பலனைத் தரும். பூமி, வாகனம் வாங்க நல்ல தருணம். ஏற்றுமதி, இறக்குமதித் தொழில் நன்கு கைகொடுக்கும். மனச் சலனம் விலகும். ஆஞ்சநேயர் வழிபாடு செய்துவர, நற்பலன் பெருகும்.


ரிஷபம் : வழக்கு வியாஜ்யம் வெற்றி அளிக்கும். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். நீண்ட தூரப் பிரயாணம் செல்ல நேரிடும். குடும்ப வாழ்வில் விட்டுக் கொடுத்தல் நல்லது. திருமணம் கைகூடும். உத்தியோகத்தில் நற்பெயர் கிடைக்கும். வியாபாரத்தில் முன்னேற்றம் கிட்டும். ராகு / கேது/ குரு வழிபாடு செய்து வரவும்.


மிதுனம் : உல்லாசப் பிரயாண வாய்ப்பு வந்து சேரும். சுபநிகழ்ச்சி கைகூடும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழிலில் முன்னேற்றம் கிட்டும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். கொடுக்கல், வாங்கல் நற்பலனைத் தரும். மன இறுக்கம் குறையும். முயற்சி செய்யும் காரியம் வெற்றி அளிக்கும். எண்ணிய யாவும் ஈடேறும். ராகு / கேது வழிபட்டு வர, நற்பலன் கிட்டும்.

கடகம் : மன உளைச்சல் விலகும் வாரம். எண்ணங்கள் யாவும் ஈடேறும். வீடு / வாகனம் வாங்க முயற்சி செய்யவும். கல்வி வளம் மேலோங்கும். மனதில் தன்னம்பிக்கை மிகுந்து காணப்படும். புண்ணிய ஸ்தலம் செல்லும் வாய்ப்பு வந்து சேரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் தீரும். பணவரவு உண்டு. உடல்நிலை நன்றாக இருக்கும். உத்தியோகத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். வியாபாரம் விறுவிறுப்பு காணும். வழக்கு வெற்றி அளிக்கும். சனி/ குரு வழிபாடு செய்துவர, நற்பலன் கிட்டும்.

சிம்மம் : வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. நெருங்கியவர்களால் மனக்கஷ்டம் ஏற்படும். கணவன், மனைவி அனுசரித்து நடந்துகொள்வது நற்பலனைத் தரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் சுமாரான போக்கு நிலவும். உணவுக் கட்டுப்பாடு அவசியம். குழந்தைகள் இடம்மாற வாய்ப்பு ஏற்படும். வேலைப்பளு அதிகரிக்கும். வாகனத்தில் செல்லும்போது கவனம்








தஞ்சை பரத்வாஜ்









தேவை. கேது / ராகு / சனி / குரு வழிபாடு உத்தமம்.

கன்னி : அற்புதமான வாரம். பூமி வாங்கும் யோகம் கிட்டும். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் வந்து சேரும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். தனவிருத்தி ஏற்படும். பணக்கஷ்டம் வராது. வெளிநாட்டு அழைப்பு வரும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். எதிர்ப்பு, வழக்குகளை வெல்வீர்கள். செலவுகள் சுபமானவையாக அமையும். கல்வி மேலோங்கும். வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். வாகனம் வாங்க நல்ல தருணம். ராகு / கேதுவை வணங்க, வராத நிலுவை நம்மை வந்து சேரும்.

துலாம் : மேன்மையான வாரம். செய்யும் தொழிலில் அதிக வருவாய் கிட்டும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். உத்தியோகத்தில் நற்பெயர் ஏற்படும். சிலருக்கு இடமாற்றம் ஏற்படும். வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும். புதிய முயற்சி அனுகூலம் ஆகும். நண்பர்கள், உறவினர்களால் ஆதாயம் உண்டு. வழக்கு/வியாபாரம் வெற்றி அளிக்கும். உடல் நிலை நன்றாக இருக்கும். தெய்வ சங்கல்பம் ஏற்படும். நீண்ட தூரப் பிரயாண வாய்ப்பு வந்து சேரும். பண வரவு நன்றாக இருக்கும். குரு / சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

விருச்சிகம் : மகிழ்ச்சிகரமான வாரம். எண்ணிய யாவும் ஈடேறும். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். புதிய தொழில்முயற்சி கைகொடுக்கும். சுபச் செலவு ஏற்படும். நெருங்கிய உறவினர்கள் இடம் மாறிச் செல்ல நேரிடும். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். கல்வி நிலை, மேலோங்கும். உத்தியோகத்தில் நற்பெயர் ஏற்படும். பண உயர்வு, பதவி மாற்றம் கிட்டும். வீடு / வாகனம் வாங்க நல்ல தருணம். செய்யும் தொழிலில் லாபம் கிட்டும். கொடுக்கல், வாங்கல் நல்லபடியாக நடக்கும். உடல்நிலை நன்றாக இருக்கும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். ராகு / கேது / குரு வழிபாடு நல்ல பலனைத் தரும்.

தனுசு : செல்வாக்கு பெற்ற வாரம். மனமகிழ்ச்சி ஏற்படும். சுபச் செலவு



கைகூடும். புதிய ஆடை, அலங்காரப் பொருள் வாங்குவீர்கள். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். நீண்ட தூரப் பிரயாண வாய்ப்பு வந்து சேரும். கல்வி வளம் மேலோங்கும். மகான் சந்திப்பு கிட்டும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். கொடுக்கல், வாங்கல் நன்றாக இருக்கும். ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் நற்பலனைத் தரும். செலவுகள் சுபமானவையாக இருக்கும். மன உளைச்சல் தீரும். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வர, நற்பலனை அடைவீர்கள்.

27.8.06 முதல்
2.9.06 வரை

பரத்வாஜ்...

என் மைத்துனருக்குப் பல ஜாதகங்களைப் பார்த்தும் பலன் இல்லை. ஏதேனும் தடங்கல் ஏற்படுகிறது. இவருக்கு எப்போது திருமணம் நடக்கும்?

- கே.சி.சங்கர், போபால்

ஜாதகருக்கு 33 வயதில் திருமணம் நடக்கும். பிறந்த ஊருக்குப் பத்து மைல் தொலைவில் பிறந்த பெண் அமைவாள். உறவு கிடையாது. ஒரே பெண்ணாக இருப்பார். உடன் பிறந்தோர் இருவர் இருப்பர். நாகதோஷம் உள்ள வரனாகப் பார்க்கவும்.

என் மகனுக்கு ஜாதகம் பார்த்தோம். தடங்கல் ஏற்படுகிறது. அவனுக்கு எப்போது வரன் அமையும்?

- மு.பிச்சாண்டி, வீரவநல்லூர்

தங்கள் மகனுக்கு ஒரு பெண், ஒரு பையன் உள்ள இடத்தில் திருமணம் நடக்கும். பிறந்த ஊருக்குத் தென்திசையில் பிறந்த, படித்த, பண்புள்ள அழகான பெண் அமைவாள். ஜாதகருக்குச் சந்திரதசை நடைபெற்று வருகிறது. 37 வயதில் திருமணம் நடக்கும்.

என் மகளுக்கு, மிகவும் மும்முரமாக வரன் பார்க்கிறோம். தள்ளிக்கொண்டே போகிறது. அவளுக்கு எப்போது, எப்படி வரன் அமையும்?

- என். நிர்மலா, பெங்களூர்

உங்கள் பெண்ணுக்கு 2006-ல் திருமணம் கைகூடும். வெளிநாட்டில் வேலை செய்யும் வரன் அமையும். உறவினரல்லாதவர். தோஷம் எதுவும் இல்லை. பரிகாரம் தேவை இல்லை.

என்னுடைய மகளுக்கு எப்போது திருமணம் நடக்கும்? ஏதாவது தோஷம் உள்ளதா?

- பத்மா, திருவனந்தபுரம்

உங்கள் மகளுக்கு 24 வயதில் திருமணம் நடக்கும். தோஷம் எதுவும் இல்லை. வெளிநாட்டில் வேலை செய்யும் வரன் அமையும்.

...பதில்கள்

மகரம் : எதிலும் கவனமாகச் செயல்படவேண்டிய வாரம். குடும்ப வாழ்வில் அனுசரணை தேவை. யாரிடமும் விட்டுக் கொடுத்தல் நலம். வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். உணவுக் கட்டுப்பாடு அவசியம். தெய்வ அனுகூலம் ஏற்படும். புண்ணியஸ்தலம் சென்று வருவீர்கள். பொருளாதாரம் மந்தமாக இருக்கும். எதிலும் டென்ஷன் பட வேண்டி இருக்கும். சிலருக்கு உடல்நலம் சற்றுக் குறைவாகவே இருக்கும். உத்தியோகத்தில் எதிர்ப்பு, தொல்லை ஏற்படலாம். சனி / குரு வழிபாடு செய்து வர, கஷ்டங்கள் விலகி, நற்பலன் கிட்டும்.

கும்பம் : நன்மையும், தீமையும் கலந்த வாரம். வாகனத்தில் போகும் போது கவனம் தேவை. வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். கணவன், மனைவி அனுசரித்துப்போவது நற்பலனை அளிக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கொடுக்கல், வாங்கல் சுமாரான பலனை அளிக்கும். மறைமுகத் தொல்லை இருக்கும். உணவுக் கட்டுப்பாடு அவசியம். புதிய வேலைவாய்ப்பு வந்து சேரும். பணக்கஷ்டம் விலகும். கல்வியில் கவனம் தேவை. ராகு / கேது வழிபாடு செய்துவர, நற்பலனை அடைவீர்கள்.

மீனம் : குழப்பமான சூழ்நிலை விலகும். இருந்தாலும் சற்றுக் கவனத்துடன் செயல்படுவது நல்லது. வெளிநாட்டு வர்த்தகம் நற்பலனைத் தரும். கணவன், மனைவி விட்டுக்கொடுத்து நடந்துகொள்வது நல்லது. மன உளைச்சல் நீங்கும். பண விருத்தி ஏற்படும். எண்ணங்கள் யாவும் ஈடேறும். திருமணத் தடை விலகும். தொழில் துறையில் விரைவில் இடம் மாற்றம் ஏற்படும். செலவுகள் சுபமானவையாக இருக்கும். உடல் ஆரோக்கியம் சுமாராக இருக்கும். புதிய தொழில் கைகூடும். நண்பர், உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். ராகு / கேது / குரு/ சனி வழிபாடு செய்து வர, நற்பலன் கிட்டும். ●

என்றும் உங்களுடன்...

மங்கையர் மலர்

3 புத்தகங்கள்

நவராத்திரி ஸ்பெஷல்

ஆஹா 50! பரிசுப் போட்டி!

அதிக பக்கங்கள்

* நவராத்திரி
  - அன்றும், இன்றும்...






○ தேவியர் திருவருள் கிடைக்க...

○ வாணி, நீ அருள்வாய்!

* டீனேஜ் கொலு

* கோலம் முதல் பொம்மைகளைத் தூங்க வைப்பது வரை - முறையான ஸ்லோகங்கள் அர்த்தங்களுடன்...

உங்கள் மனம் கவர்ந்த மங்கையர் மலரில்... இன்னும்...



பாதாம் ரெசிபிஸ் - 64

- பயனுள்ள இலவச இணைப்பு

சரண்யா பொன்வண்ணன் எழுதும்

தவமாய் தவமிருந்து

- பெண்மைத் தொடரின் தொடக்கம்



கலக்கம்

பத்ரியை நெருங்கிய சிவாவும், சிங்க முத்துவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு எப்படி ஆரம்பித்துக் கேட்பது என்று தயங்கினார்கள்.

தொண்டையைச் செருமிக் கொண்ட சிவா, "தம்பி!" என்றான்.

நிமிர்ந்து பார்த்த பத்ரி, "என்னங்க, தீப்பெட்டி வேணுமா?"என்றான் எடுத்து நீட்டியபடி.

"அதில்லைங்க... எங்களுக்கு ஊரு மதுராந்தகம். வீட்ல விசேஷங்க. கொஞ்சம் நகை வாங்கணும். இங்க தங்கத் தோட்டம் நகைக் கடையில வாங்குங்கன்னு ஊர்ல சொல்லியனுப்பிச்சாங்க. அந்தக் கடை எப்படிங்க... நல்ல கடைங்களா? தங்கம் கேரண்டியா இருக்குமுங்களா?"

"நல்ல கடைதாங்க. நம்பி வாங்கலாம்."

"அந்த முதலாளி எப்படிங்க? கறாரா இருப்பாருங்களா, இல்ல தள்ளுபடி எதுவும் போட்டுக் குடுப்பாருங்களா... உங்களுக்கு எதுவும் தெரியுமுங்களா?"

"நீங்க அந்தக் கடைக்குப் போனதில்லையா?"

"இல்லைங்க. வெளியேர்ந்து பாத்திருக்கேன்."

"கடையில முதலாளியை நீங்க பார்க்க முடியாது. அவரு உள்ளே ரூம்ல இருப்பாரு. மேனேஜர்ஸ்தான் நிர்வாகம் பண்ணுவாங்க. அவங்ககிட்டயே நீங்க

பட்டுக்கோட்டை பிரபாகர்



தள்ளுபடி கேக்கலாம். செஞ்சுத் தரு வாங்க."

"அந்த முதலாளி, அவரு குடும்பத்தைப் பத்தி உங்களுக்குத் தெரியுமா தம்பி?"

"ஓரளவுக்குத் தெரியும். எதுக்குக் கேக்கறீங்க?"

"இல்ல, மயில்பட்டி இல்லைங்க, அங்க என் சொந்தக்காரன் இருக்கான். அவன் தங்கச்சியைத் தங்கத் தோட்டம் முதலாளியோட ஒரே பையனுக்குக் கல்யாணம் நிச்சயம் பண்ணிருக்காங்க."

"அப்படியா?" என்றான், பத்ரி புத்தகத்தை மடக்கி வைத்துக்கொண்டு சுவாரசியமாக.

"ஆமாங்க. அந்தப் பொண்ணோட அதிர்ஷ்டத்தைப் பத்திதான் இப்ப ஊரு பூராப் பேச்சு. நல்லது பேசற வாயி பொல்லாததும் சேர்த்துத்தானேப் பேசும்? ஒரு கோடீஸ்வரன் தனக்குச் சமமா இன்னொரு கோடீஸ்வரன் வீட்ல சம்பந்தம் வெச்சுக்காம, ஒரு கிராமத்து விவசாயி வீட்ல எதுக்குப் பொண்ணு எடுக்கணும்னு இப்ப ஒரு புரளியும் கௌம்பிடுச்சிங்க."

"என்ன புரளி?"

"அந்தப் பையன் விஷயத்துல ஏதாச்சும் தப்பு கிப்பு இருந்து, அதை மறைச்சுக் கல்யாணம் பண்றாங்களோன்னு ஒரு பேச்சு. நாளைக்கு வில்லங்கம் வெளில தெரிஞ்சாக்கூட, பிரச்னை ஆகாம இருக்கணும்னுதான் தன் சொல்லுக்குக் கட்டுப்படற மாதிரி சாதாரணமான குடும்பத்துல சம்பந்தம் பண்ணிருக்காங்கன்னு பேசறாங்க. ஏன் தம்பி, அந்தப் பையனைப் பத்தி உங்

களுக்கு ஏதாவது தெரியுமா? அவரு நல்ல பையன்தானா?" என்ற சிவா பத்ரியின் பதிலுக்குக் காத்திருந்தான்.

என்ன பதில் சொல்வதென்று தடுமாறிய பத்ரி, "எனக்கு அந்தப் பையன் கொஞ்சம் பழக்கம்தான். ஆனா ரொம்ப நெருக்கம் இல்லை. எனக்குத் தெரிஞ்சு குமரன் நல்ல பையன்தான்" என்றான்.

"ஆமாங்க. குமரன்தான் மாப்பிள்ளையோட பேரு. உங்களுக்கு எப்படி பழக்கம்?"

"அது... வந்து... அந்தக் கடையில நகை வாங்கப் போனப்ப ஏற்பட்ட பழக்கம்தான். எனக்குத் தெரிஞ்சு எதுவும் தப்பா கேள்விப்பட்டதில்லை. ஆமாம், நீங்க யாரு... பொண்ணுக்கு என்ன உறவு வேணும்?"

"நெருக்கமான சொந்தம்தான். அதனாலதானே அக்கறையா விசாரிக்கிறோம். ரொம்ப நன்றி தம்பி; வர்றோம்" என்று கரம் கூப்பிவிட்டு விலகி நடந்த

5



சிவாவை சிங்கமுத்து தொடர, பத்ரி யோசனையில் ஆழ்ந்தான்.

தங்கத் தோட்டம் நகை மாளிகையில் 'ஆண்டுவிழாவை முன்னிட்டு இன்று ஒரு நாள் மட்டும் செய்கூலி, சேதாரம் இல்லை' என்று எல்லாப் பத்திரிகைகளிலும் விளம்பரம் கொடுத்திருந்ததால் மக்கள் கூட்டம் முண்டியடித்துக் கொண்டிருந்தது. உள்ளே கல்லாப் பகுதியில் ஆறு பேர் நின்றபடி பணக்கட்டுக்களை வாங்கி இயந்திரத்தில் போட்டுக் கொண்டு, கிரெடிட் கார்டுகளைத் தேய்த்துக் கொண்டு, அவர்களும் இயந்திரங்களாக மாறியிருந்தார்கள். உள்ளறையில் மூன்று உதவியாளர்களை வைத்துக் கொண்டு குமரன் மேஜைமீது குட்டிக் கோபுரம் மாதிரி குவிந்திருந்த பணக் கட்டுக்களில் ஐந்நூறு, நூறு, ஐம்பது ரூபாய்க் கட்டுக்களைத் தனித்தனிச் சாக்குப் பைகளில் போட்டுக் கொண்டிருந்தான்.

குமரன் சங்கேதமாய் ஒலித்த தன்



செல்போனை எடுத்து எண் பார்த்து, "ஹலோ பத்ரி, குட்மார்னிங்" என்றான்.

"குட்மார்னிங் குமரன். பிஸியா இருக்கீங்களா, பேசலாமா?"

"இன்னிக்குக் கடையில ஆண்டு விழா காரணமா 'தங்க மழைத் திட்டம்'ன்னு ஸ்கீம் போட்ருக்கோம். அதனால செம கூட்டம். அப்பா வேற திடீர்ன்னு திருப்பதிக்குப் புறப்பட்டுப் போய்ட்டாரு. கொஞ்சம் பிசிதான். பரவால்ல, சொல்லுங்க."

"உங்களுக்கு என்ன குமரன், பணத்தை எண்ணுறதைத் தவிர வேற என்ன வேலை உங்களுக்கு இருக்கப் போகுது? சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன்."

தன்னைச் சுற்றி நிகழ்வதைப் பார்த்துக் கொண்ட குமரன் சிரித்தபடி, "விளையாட்டில்லை பத்ரி. நிஜமாவே நீங்க சொன்னதைதான் நான் செஞ்சுட்டிருக்கேன். இன்னிக்குக் கலெக்ஷனை பேங்கில கொண்டுபோய் சேர்க்கறதே பெரிய வேலைதான். ஆமாம், எங்கேர்ந்து பேசறீங்க?"

"ஆபீஸ் போற வழியில பஸ் ஸ்டாண்டுல மேகசின்ஸ் வாங்கினேன். இங்க ஒரு மேட்டர் நடந்துச்சு. உடனே உங்ககிட்ட சொல்லணும்னு தோணுச்சு."

"என்ன மேட்டர்?"

"போன்ல சொல்ற விஷயமில்ல குமரன். இது அவசரமான்னும் தெரியலை. ஆனா முக்கியம்னு நினைக்கிறேன்."

"என்னங்க பத்ரி, இவ்வளவு பீடிகை போடறீங்க? சரி, ஈவினிங் அஞ்சு மணி வரைக்கும் அந்த விஷயம் காத்திருக்குமா?"

"காத்திருக்கும். நானும் இப்ப ஆபீஸ் போற அவசரத்துல இருக்கேன்."

"அப்ப அஞ்சு மணிக்கு பீச்சுல காந்தி சிலைகிட்ட நான் வெய்ட் பண்றேன். வந்துடறீங்களா?"

"சரி."

செல்போனை வைத்துவிட்டுத் திரும்ப, ஊழியர்கள் உள்ளே வந்து மேஜைமேல் மற்றும் ஒரு பணக் கோபுரத்தைக் கொட்டினார்கள்.

பாண்டிச்சேரி கடற்கரை. அலைகளுக்கும், சாலைக்கும் நடுவிலான கொஞ்சமான மணல் வெளியைப் பெரிய பெரிய பாறைகள் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன. மேற்கில் சரிந்து கொண்டிருந்த ஆரஞ்சு சூரியன் இருட்டுப் போர்வையை இழுத்துக் கொண்டிருந்தான். சாலையில் சிலர் அவசரமில்லாமல் நடந்து கொண்டிருந்தார்கள். தள்ளப்படும் பெரம்புலேட்டரில் உட்கார்ந்திருந்த அந்த ஃப்ரெஞ்சுக் குழந்தை கையில் பலூன் வைத்திருந்தது. நிறைய சைக்கிள்கள் கூட்டமாகக் கடந்தன.

"சார், சாக்கோபார் ஐஸ்கிரீம் இருக்கு சார்" என்று வியாபார அழைப்பு விடுத்த தள்ளு வண்டிக்காரனைத் தலையசைத்து மறுத்த பத்ரி, கடலை சாப்பிட்டபடி குமரனுக்காகக் காத்திருந்தான்.

தூரமாகக் காரை நிறுத்தி இறங்கிய குமரன் அங்கிருந்தே கையசைத்தபடி இவனை நோக்கி வந்து உரிமையாகத் தோளில் கைபோட்டு, "ஸாரி பத்ரி, அரை மணி நேரம் காக்க வெச்சுட்டேன்" என்றான்.

"பரவால்லை, அப்படி அலையில காலை நனைச்சுக்கிட்டே பேசலாமா?" என்ற பத்ரி நீட்டிய பொட்டலத்திலிருந்து கடலையை எடுத்துக் கொண்டு அவனோடு நடந்தான் குமரன்.

ஆவேசமில்லாத அலைகள் தவழ்ந்து வந்து கால்களைத் தழுவி நழுவின. உள்ளங்கால்களுக்கு அடியில் கரையும் மணல் குறுகுறுப்பை ஏற்படுத்தியது. காற்று உடைகளோடு உற்சாகமாக உரையாடிக் கொண்டிருந்தது.

"குமரன், உங்க வீட்ல நேத்து நான் சாப்பிட்ட மாதிரி அவ்வளவு டேஸ்ட்டா இதுவரைக்கும் என் வாழ்க்கையிலேயே

புதிய அவதாரம்!

பிரபல தயாரிப்பாளர் விஸ்வாஸ் சுந்தர், இயக்குநராக அவதாரமெடுத்திருக்கிறார். 'நினைத்தாலே' இதுதான் படத்தின் பெயர். வைஜெயந்திமாலா பாலியின் மகன் சுச்சின் கதாநாயகனாக நடிக்க, மும்பைப் பெண் நர்கீஸ் நாயகியாக அறிமுகமாகிறார். இதன் முதற்கட்டப் படப்பிடிப்பு சென்னை மற்றும் திருச்சியில் நடந்துள்ள நிலையில், தீபாவளிக்குப் படத்தைத் திரையிடத் திட்டமிட்டிருக்கிறார்கள். விஜய் ஆண்டனியின் இசையில் இப்படத்தின் பாடல்கள்

சாப்பிட்டதில்லை. எனக்கு எங்க அம்மா ஞாபகம் வந்துச்சு."

"ரொம்ப ஓவரா சொல்லாதீங்க."

"இல்லை, நிஜமாத்தான் சொல்றேன். நேத்து உங்க அப்பாவும் பக்கத்தில இருந்ததால எதுவுமே சொல்லாம வந்துட்டேன். உங்க அப்பா இப்படி முதல் சந்திப்புலேயே ரொம்ப வருஷம் பழகின மாதிரி இவ்வளவு உரிமையா எங்கிட்ட பேசுவாருன்னு நான் எதிர்பார்க்கவே யில்லை."

"அவரு எப்பவுமே இப்படிதான். சோ சிம்பிள். அவரோட பலமும் அதுதான்; பலவீனமும் அதுதான்."

"உங்களுக்குக் கல்யாணம் நிச்சயம் பண்ணியிருக்கிற விஷயத்தை நீங்ககூட சொல்லலை பாருங்க. ஆனா, அவரு போட்டு உடைச்சது உங்களுக்குத் தர்ம சங்கடமா போயிடுச்சு இல்ல?"

"சேச்சே. நானே சொல்லலாம்னுதான் இருந்தேன். நீங்க பூஜாவைப் பத்தித் தெரிஞ்சவர்ங்கறதால ஒரு தயக்கம் இருந்துச்சு. அவ்வளவுதான். மத்தபடி இதுல ரகசியம் என்ன இருக்கு?"

"எனக்கு ஓகே. நான் உங்க நண்பன். பொண்ணு வீட்டுக்காரங்களுக்கு பூஜா மேட்டர் ஒரு ரகசியம்தானே? இல்லை, வெளிப்படையாச் சொல்லிட்டீங்களா குமரன்?"

"நீங்க வேற... நான் பூஜாவை லவ் பண்ணதும், அந்த லவ் நிறைவேறாமப் போனதும் எங்க வீட்டுக்கே தெரியாதே. நான்தான் சொன்னேனே, மஞ்சரி கிராமத்துப் பொண்ணு. அவளால இதைச் சாதாரணமா எடுத்துக்க முடியுமான்னு தெரியலை. அதனால எதையும் சொல்லலை. ஆமாம், முக்கியமான விஷயம்னு சொன்னீங்களே, என்ன அது?"

"காலையில பஸ் ஸ்டாண்டுல ரெண்டு பேர் எங்கிட்ட வந்து பேச்சு குடுத்தாங்க. மயில்பட்டியில இப்ப நீங்க சம்பந்தம் பண்ணியிருக்கிற இடம் அவங்களுக்குச் சொந்தம்னு சொன்னாங்க. உங்க குடும்பத்தைப் பத்தி, குறிப்பா உங்களைப் பத்தி அதிகம் விசாரிச்சாங்க. நல்ல மாப்பிள்ளைதான்னு நான் சொன்னேன். அவங்க எதார்த்தமா விசாரிச்ச மாதிரியும் தெரியலை; எங்கிட்ட மட்டும் விசாரிச்ச மாதிரியும் தெரியலை."

"நீங்க என்ன சொல்ல வர்றீங்க?"

"மதுராந்தகம்னு அவங்க ஊர் பேரைச் சொன்னப்போ ஒரு தயக்கம் தெரிஞ்சது. எனக்கென்னவோ அவங்க மயில்பட்டிக் காரங்களா இருக்கலாமோன்னு ஒரு சந்தேகம்."

"அதனால என்ன? பொண்ணைக் கொடுக்கறவங்க மாப்பிள்ளை எப்படின்னு விசாரிச்சுத் தெரிஞ்சுக்கணும்னு நினைக்கிறது தப்பில்லையே."

"கரெக்ட்டுதான். ஆனா அதை எப்ப செய்யறது? நிச்சயதார்த்தம் பண்றதுக்கு முன்னாடிதானே செய்யணும்? கல்யாணத்துக்குத் தேதி வெச்சு, எல்லா வேலையும் ஆரம்பிச்சதுக்கு அப்புறமாவா செய்வாங்க?"

"இந்தப் பாய்ண்ட்டை நான் யோசிக்கலையே. இதுக்கு என்ன அர்த்தம்?"

"உங்களுக்கு ஏற்கெனவே ஒரு காதல் அனுபவம் இருக்கிற தகவலை யாராவது உங்களுக்கு வேண்டாதவங்க ஒரு வேளை அவங்களுக்குத் தெரிவிச்சிருந்தா? எனக்கு அது தெரியுங்கறதால அப்படி ஒரு சந்தேகம் மனசுல வந்துச்சு."

சற்று நேரம் அமைதியாக யோசித்த குமரன், "இந்த நிமிஷம் என் மனசுல இருக்கறதை மறைக்காம சொல்லட்டுமா? எதாச்சும் ஒரு தடை வந்து இந்தக் கல்யாணம் நின்னுப் போனாக்கூட பரவால்லைன்னு நான் நினைக்கிறேன்" என்றதும் அதிர்ந்தாள் பத்ரி.

(தொடரும்)

சிறப்பாக வந்திருக்கின்றனவாம்! 'தயாரிப்பாளராக இருந்துவிட்டு இயக்குநராகும் அனுபவம் எப்படியிருக்கிறது?' என்றால், "புதிதாக எதுவுமில்லை. முன்பு எனது படங்களில் கண்காணிப்பை மட்டுமே செலுத்துவேன். இப்போது நானே முன்னின்று வழி நடத்துகிறேன்" என்கிறார் சுந்தர். 'ஸ்வீட்'தான் 'நினைத்தாலே' என்று மாறியிருக்கிறது. உபயம், தமிழக அரசின் தமிழில் தலைப்பு வைத்தால் வரி விலக்குத் திட்டம்!

- மிருதுளா



• பால.சூர்யா, சென்னை

? தி.மு.க.கூட தான் மைனாரிட்டி அரசு என்பதை மறந்துவிடும் போலிருக்கிறது. ஆனால் ஜெயா டி.வி. செய்திகளில் மைனாரிட்டி தி.மு.க. எனத் திரும்பத் திரும்பச் சொல்கிறார்களே?

! மறப்பதாவது? தி.மு.க.வும், குறிப்பாக அதன் தலைவரும் மறக்கக்கூடாது என்பதற்காகத் தானே திரும்பத் திரும்ப ஞாபகப்படுத்தறாங்க, அந்த உண்மையை!

• ஜோ.பன்னீர்செல்வம், சென்னை - 12

? நடைபெற்றுக் கொண்டிருக்கும் தி.மு.க. ஆட்சி 'சின்ன காமராஜர் ஆட்சி' என்று இராமநாதபுரம் காங்கிரஸ் எம்.எல்.ஏ. அசன் அலி வர்ணித்துள்ளாரே?

! ஓஹோ! காங்கிரஸ் தனித்து ஆட்சி அமைக்கிற(?) காலத்தில் அது 'பெரிய' காமராஜர் ஆட்சியாக அமையுமாக்கும்!

• முகவை முத்துசாமி, தொண்டி

? 'ஆபாசப் படங்களைத் தயார் செய்து பரப்புவதும் ஒரு விதமான தனிமனிதத் தீவிரவாதம்தான்' என்று ஜனநாயக மாதர் சங்கத்தை சேர்ந்த வாசுகி கூறியுள்ளது குறித்து...?

! அதி கொடூரமான வன்முறைக் காட்சிகள் மூலம் பயங்கரவாதத்தையும் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை வாசுகி சேர்த்துச் சொல்லியிருக்கலாம்.

• ஜே.துரைராஜ், சென்னை

? சுதந்திர தின விழாவில் கலைஞரின் இலவச சமையல் எரிவாயு வழங்குதல் மற்றும் வேலையில்லாத பட்டதாரிகளுக்கு நிதியுதவி அறிவிப்புகள்...?

! சுதந்திர தினச் சிந்தனை :



• கெட்டிக்காரக் கையெழுத்து!



• சீசரின் மனைவி...



• (சு)தந்திர அறிவிப்புகள்!



• மைனாரிட்டி மந்திரம்!

தமிழக மக்கள் தன்மானத்துடன் வாழ வேண்டுமா? பிச்சைக்காரர்களாக மாற வேண்டுமா? மக்களுக்கு நேரடியாக உதவுவதன் மூலமாக பப்ளிசிட்டி கிடைக்கும்; வோட்டு கிடைக்கும்; வறுமை நீங்காது. தொழில் வளமும் வேலை வாய்ப்பும் பெருகினால் மக்கள் தங்களுக்குத் தாங்களே உதவிக் கொள்வார்கள். எதற்கு முக்கியத்துவம்?

• வி.ஷியாம், கும்பகோணம்

? பர்னாலாவின் மகன் பாலியல் பலாத்காரம் செய்தார் என்ற செய்தி கவர்னருக்குப் பாதிப்பை ஏற்படுத்துமா?

! பதவிக்குப் பாதிப்பில்லாவிட்டாலும் மனசுக்குப் பாதிப்பு ஏற்படத்தான் செய்யும். பொதுவாழ்வில் உள்ளோர் தப்பு செய்யாமல் இருந்தால் மட்டும் போதாது; விரோதியால்கூட குற்றம்சாட்டப்பட முடியாதபடிக்கு எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டும். "Caeser's wife must be above suspicion" என்றது இதைத்தான்!

• ஆரூர் சேகர், சென்னை

? லாட்டரி விற்பனைத் தடையால் வேலைவாய்ப்பை இழந்தவர்கள் அரசிடம் உதவித் தொகையையோ, வேறு வேலை வாய்ப்பையோ கேட்காமல் மீண்டும் லாட்டரி தொழிலுக்கே அனுமதி கேட்பது ஏன்? ருசி கண்ட பூனைகளாகியதாலா?

! ஆமாம். குறைந்த முதலீடு; மிகக் குறைந்த உழைப்பு. அதைவிட குறைந்த ரிஸ்க் மூலம் அதிகபட்ச லாபம் காணும் 'தொழில்' ஆயிற்றே.

• ஆண்டனி தமிழரசன், மும்பை - 17

? மும்பையில் பொது

இடங்களில் எச்சில் துப்புதல், குளித்தல், குப்பை போடுதல் ஆகியவற்றுக்கு ரூபாய் 500 அபராதம் விதிக்க மும்பை மாநகராட்சி அக்டோபரில் சட்டம் இயற்றப் போகிற தாமே?

! அறுபது ஆண்டுகளில் மூன்று தலை முறைகளுக்குச் சுகாதாரக் கல்வியைச் சரியானபடி போதித்திருந்தால் இப்போது இந்தச் சட்டத்துக்கே அவசிய மிராது. இருப்பினும்கூட இந்தச் சட்டம் அவசியமானதுதான். லஞ்ச - ஊழலுக்கு இடமின்றி அமல்படுத்த வழிகாண வேண்டும்.

● வசீகரன், சென்னை - 18

? கற்பனைக் கதாபாத்திரமான கண்ணகி என்கிறாரே திருமா, கண்ணகி வரலாறு இல்லையா?

! இல்லைங்க. வரலாறாகிவிட்ட காவியக் கதாபாத்திரம்.

● மு.லெ.செந்தில்குமார், உ.தி.மலை அஞ்சல் ★

? மக்களின் வாழ்க்கை முறையாகி விட்ட எந்த மதத்துக்கும் அழிவு இல்லை. ஆனால் அதையும் மீறி பிரசாரம் செய்வது அதன் பலவீனத்தைக் காட்டவில்லையா?

! பிரசாரம் மதத்தைப் பலப்படுத்துவதற்கல்ல. மனிதர்கள் பலவீனமாகிவிடக்கூடாது என்பதற்காகத்தான். சாப்பிடுவது வாழ்க்கை முறைதான். ஆனால் விளையாட்டு மும்முரத்தில் இருக்கும் குழந்தைகளைச் சரியான நேரத்துக்கு அழைத்து, பெற்றோர்கள் சாப்பாடு போடுகிறார்கள் அல்லவா? அப்படித்தான். ஆனால், பிரசாரம் என்ற பெயரில் மத துவேஷமும் மதமாற்றமும் தூண்டப்படும் போதுதான் பிரச்னையாகிறது.

● பி.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

? கோயில் அறங்காவல் குழுக்களில் பெண்களை நியமிக்க தி.மு.க. அரசு சட்டத் திருத்த மசோதா கொண்டு வந்துள்ளது குறித்து?

! அரசு நியமன அறங்காவலர் ஆணானால் என்ன, பெண்ணானால் என்ன - அக்கறையுள்ளவராக, கறைபடியாதவராக இருப்பதல்லவா முக்கியம். இதைத் தகுதியாகக் கொண்டு நியமிக்கப்படும் யாரையும் ஏற்கலாம்.

● எஸ்.சாரதா, சென்னை - 15

? சூர்யா - ஜோதிகா திருமணம் செய்வது அவசியமாக எல்லோரும்



• சரியான சாடல்!

பெண் அறங்காவலர்கள் அமர்த்தப்படலாமா?



• ஊர்ஜித அறிவிப்பு!

தெரிந்துகொள்ள வேண்டிய ஒன்றா - அனைத்துப் பத்திரிகைகளும் வெளியிட்டது எதற்காக?

! பத்திரிகைகள் அரசல் புரசலாகச் சொல்லி வந்ததை மாப்பிள்ளையின் அப்பா பிரஸ் ரிலீஸாக அறிவித்ததால் செய்தி முக்கியத்துவம் பெற்றது. ஆனால், பத்திரிகைகள் செய்தியைத் தாண்டிப் போய், அதற்கு அப்பாலும் இப்பாலும் உள்ளவற்றைச் சேகரித்துக் குவிப்பதுதான் ஓவராக இருக்கிறது.

● ஆர்.ராமசுப்ரமணியன், வடவள்ளி

? எம்.பி.க்களின் செயல்பாடுகள் மக்களின் அதிருப்தியை அதிகரித்திருக்கும் இச்சமயத்தில் அவர்களின் ஊதியம்-அலவன்ஸுகள் போன்றவற்றைக் கூச்சநாச்சமில்லாமல் அதிகரித்திருப்பதோடு தலா இரண்டு செல்போன்கள் வேறு தர அரசு முடிவெடுத்துள்ளதே?

! அரசு எடுக்கும் முடிவல்ல; எம்.பி.க்கள் தங்களுக்குத் தாங்களே வழங்கிக் கொள்கிறார்கள். இதோடு நிறுத்திக்கிட்டாங்களேன்னு ஆறுதல் அடைய வேண்டியதுதான். மக்களுக்கு அதிருப்தின்னு சொல்றீங்க; அப்ப ஏன் இந்த மாதிரி ஆளுங்களைத் தேர்ந்தெடுத்தாங்களாம்?

● டி.முருகேசன், திருவாரூர்

? அனைவரும் அர்ச்சகராகலாம் திட்டத்துக்கு கோர்ட் தடை விதித்திருப்பது பற்றி?

! வழக்கு முடியும் வரை தற்காலிகத் தடைதான். அதைக் கண்ணியமாக ஏற்று, தமிழக அரசும் திட்டத்தை நிறுத்தி வைத்துள்ளது. இவ்விஷயத்தில் அள்ளித் தெளித்த அவசரக் கோலமாகச் செயல்படக்கூடாது. பல்வேறு அம்சங்களை யோசிக்க வேண்டும்; நிதானம் தேவை என்ற உச்சநீதிமன்ற கருத்து ரொம்ப ரொம்பச் சரி.

● பி.ராஜேஸ்வரி, மதுரை - 16

? என்னதான் டெபாசிட்டையும் கேஸ் அடுப்பையும் அரசு கொடுத்தாலும் செலவில்லாமல் விறகையும் எருவையும் வைத்து எரித்து வரும் ஏழைகளால் மாதம் ரூ.300 கொடுத்து கேஸ் வாங்க முடியுமா?

! அடுத்த கட்ட இலவசம் கேஸ் ஸிலிண்டர் சப்ளைதான். இல்லையெனில், எதிர்கட்சிகள் இந்தக் குறையைப் பெரிதாக்கித் தங்களுக்குச் சாதக வோட்டுகளாக நிறைவு செய்துவிடுமே!

● கே.தெய்வசிகாமணி, சென்னை

? தேனீர், பால் பொருட்களில் 20,000 மடங்கு நச்சுத்தன்மை இருக்கும்போது, நாங்கள் மட்டும் ஏன் இலக்காக்கப்பட வேண்டும் என பெப்ஸி, கோக் நிறுவனங்கள் கேள்வி எழுப்பியுள்ளனவே?

! டீக்கடைகளில் சாப்பிடுகிறவர்கள் நூறு சதவிகிதம் பரிசுத்தமாக இருக்கும் என்று எதிர்பார்த்துச் செல்வதில்லை. ஆனால், பெப்ஸி-கோக் போன்ற சர்வதேச நிறுவனங்கள் பரிசுத்தத்துக்கு உத்தரவாதம் தந்து, ஏகமாக விளம்பரம் செய்து மயக்கி, விலையை உயர்த்தி வியாபாரம் செய்கின்றன. அவர்களுக்குப் பொறுப்பு அதிகம்.

● இரா.சாந்தகுமார், திருவள்ளூர்

? ஆதாயம் தரும் பதவி தொடர்பான மசோதாவுக்கு, கலாம் ஒப்புதல் அளித்துவிட்டாரே?

! இது தொடர்பாக விரிவான ஆலோசனை நடத்தி முடிவுக்கு வர, நாடாளுமன்ற கூட்டுக்குழு அமைத்த பிறகுதான், கட்டிப் போட்டிருந்த மசோதாவை எடுத்து, தூசி தட்டிக் கையெழுத்திட்டார், கெட்டிக்காரர். ●

❑ ரூ.100 பரிசு பெறுபவர் :
ஆரூர் சேகர்,
76, பெரியார் பாதை,
சூளைமேடு,
சென்னை - 600 094.

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
மு.லெ.செந்தில்குமார்
3/121, பெருமாள் கோயில் தெரு,
கொடாப்பு,
உ.தி.மலை அஞ்சல்,
திருச்சி - 620 102.

சென்னையில் கொத்துமல்லி வாசம்!

ஞாயிற்றுக்கிழமை சாயந்திரமானால் குடும்பத்தோடு ஓட்டலுக்குப்போய் அரை ப்ளேட் நூடுல்ஸை ஐம்பது ரூபாய் கொடுத்து வாங்கி பர்ஸைக் காலி பண்ணுகிற ஆசாமிகள் இதைப் படித்தே ஆக வேண்டும். உங்கள் பர்சுக்குச் சேதாரமில்லாமல் வீட்டிலேயே அருமையான டிஷ் செய்து டேஸ்ட் பார்க்க வழியுண்டு. ஓவர் டூ ஃபுட் ஃபெஸ்டிவல்.

சென்னையில் பத்து நாட்களாக, பரபரப்பாக நடந்து முடிந்தது, ஓர் உணவுத் திருவிழா. சொந்த ஊரை மறந்து சென்னையிலேயே செட்டிலாகிவிட்ட குடும்பங்களின் மனத்தில் ஆட்டோகிராஃப் போட்டிருக்கிறது இந்தத் திருவிழா. நாடார் சமூகத்துச் சமையலைப் பிரபலப்படுத்துவதற்காக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

செட்டிநாடு சமையல் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறோம். அதென்ன நாடார் சமையல்? சாப்பாட்டு விஷயமென்பதால் மனசுக்குள் வைத்துக்கொள்ளாமல் வெளிப்படையாகவே கேட்டுவிட்டோம். விவரமாகச் சொல்ல ஆரம்பித்தார் ஜேக்கப், காங்கேயத்திலிருக்கும் சேரன் கலை & அறிவியல் கல்லூரியின் சமையல் துறைத் தலைவர். "செட்டிநாட்டு சமையல்ல மிளகு தாராளமா இருக்கும். இதுவே கொங்கு நாட்டுச் சமையல்னா என் அதிமா போடுவாங்க. நாடார் சமையல்ல கொத்துமல்லி வாசம் தூக்கலா இருக்கும். இது தாங்க முக்கியமான வித்தியாசம்!"



• ஜேக்கப்

35 விதமான உணவு வகைகளை ஸ்டாலில் அடுக்கி வைத்திருக்கிறார்கள். விமலதா, சிகப்பி, சட்டாம்பிள்ளை என ஒரு மூவரணி ஜேக்கப் தலைமையில் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அப்படியென்ன நாடார் சமையலில் ஸ்பெஷலாக இருக்கிறது என்றால், "இதுல முக்கியமான விஷயமே காரமும், ஆயிலும் கம்மிங்கிறது தான். கொத்துமல்லிப் பொடி, மிளகுப் பொடி, பருப்புப் பொடின்னு ஆந்திரா ஸ்டைல்ல ஒரு டஜன் பொடிங்க நாடார் சமையல்லயும் உண்டு. செய்றதுக்கும் ஈஸியானது. அதே சமயம் ரொம்ப நாள் கெட்டுப் போகாமலும் இருக்கும்" என்றார்கள் ஒரே குரலில். நாடார் சமையலின் ஸ்பெஷல் பற்றி காலேஜில் ஒரு பெரிய ஆராய்ச்சியே நடந்து வருகிறதாம்!

ஆராய்ச்சி ஒரு பக்கம் இருந்தாலும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை சென்னை, பெங்களூர், ஹைதராபாத் என்று சுற்றிச் சுற்றி வந்து உணவுத் திருவிழா நடத்தி ருசியேற்றுகிறார்கள். கொங்கு நாடு, முஸ்லிம், மாப்பிள்ளைமார், பிராமின் என்றிருப்பது போல் ஊருக்கு ஊர் சாப்பாட்டு ருசியும் மாறுகிறதாம். மதுரை சாப்பாட்டுக்கும் திருநெல்வேலி சாப்பாட்டுக்கும் பெரிய வித்தியாசமிருப்பது நமக்கெல்லாம் தெரிந்த விஷயம்தான். ஆனால் ஜேக்கப்டம் சொல்வது வட ஆற்காடு சமையலுக்கும் தென் ஆற்காடு சமையலுக்குமே பெரிய வித்தியாசம் இருக்கிறதென்பது!

"எங்க ஃபுட் ஃபெஸ்டிவலுக்கு ஒரு தடவை வந்

துட்டா நார்த் இண்டியன், சைனீஸ் சமையல் எல்லாமே அலுத்துப் போய்விடும்'' என்று அடித்துச் சொல்கிறார்கள். வயது வித்தியாச மில்லாமல் ஜேஜேவென்று குழந்தை குட்டிகளோடு வரும் கூட்டம், நிதானமாக டேஸ்ட் பார்ப்பதோடு ரெஸிபி வேண்டும் என்றும் அடம் பிடிக்கிறார்களாம்! ஏகப்பட்ட வரவேற்பை பார்த்துவிட்டு செய் முறைகளையெல்லாம் தொகுத்து புத்தக மாகப் போடவும் முடிவு செய்திருக் கிறார்கள்.

தமிழ்நாடு முழுவதும் கிட்டத்தட்ட இருபதுவிதமான சமையல் இருப்பதாகச் சொல்கிறார் ஜேக்கப். பெரும்பாலும் இவை அந்தந்த சமூகத்தைச் சார்ந்தவை யாக இருக்கிறதாம். 'ஏற்கெனவே இருக்கிற ஜாதிப் பிரச்னை போதாதா? இதில் ஜாதிப் பெயர் இருக்கும் சமையலை வேறு பிரபலப்படுத்தியாகணுமா?' என்று கேட் டால், பளிச்சென்று பதில் வருகிறது: ''சாப்பிடற விஷயத்துல யாருங்க ஜாதி வித்தியாசம் பார்க்கப் போறாங்க?''



• உணவுத் திருவிழா

\- ஜெ.ராம்கி



கோடி ரூபாய் கொடுத்தாலும்...

பீகாரில் பிறந்தாலும், வாரணாசியைத் தம் வசிப்பிடமாக்கிக் கொண்டவர் அண்மையில் மறைந்த ஷெனாய் மேதை பிஸ்மில்லாகான். ''அமெரிக்காவுக்கு வந்து விடுங்கள்'' என்று அவரை அழைத்த போது, ''என் உயிருக்குயிரான கங்கையை அங்கே உங்களால் எப்படித் தர முடியும்?'' என்று மறுத்துவிட்டார். ''கங்கைக் கரை யில் மெய்மறந்து வாசிக்கிறபோது எனக் குக் கிடைக்கும் மன அமைதியும், சந் தோஷமும் கோடி ரூபாய் கொடுத்தாலும் கிடைக்காது'' என்று அடிக்கடிச் சொல்வார்.

ஒரு கச்சேரிக்கு இவ்வளவு எனக் கறாராகப் பணம் வாங்கத் தெரியாது. பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் என்று சுமார் எழுபது பேர் கொண்ட பெரிய குடும்பத்தைப் பராமரிக்க வருமானம் போதுமானதாக இல்லை.

வாரணாசியில், மிகவும் பழைய வீடு ஒன்றில்தான் வசித்தார். அவர் அறை யில் மின்விசிறிகூட கிடையாது. வியர்வை சொட்ட அவர் நமாஸ் செய்வதைப் பார்த்த பத்திரிகையாளர் ஒருவர், ''இந்த அறையை ஏ.சி. செய்துகொள்ளக் கூடாதா?'' என்று கேட்டதற்கு, ''பெரிய குடும்பம். எனக்கு மட்டும் ஃபேன் போட்டுக்கொள்ள மன மில்லை; எல்லாருக்கும் ஃபேன் போட்டுத் தர வசதியில்லை'' என்றாராம்.

''என் பேரன்களில் ஒருவனுக்கு ஒரு கேஸ் ஏஜென்சி லைசென்ஸ் கொடுங்கள். குடும்பத்தின் வறுமை தீரும்'' என்று மத்திய அரசைக் கேட்டார். ஆனால், அரசு செவி மடுக்கவில்லை.

\- மௌலி

பெப்ஸி - கோக் காண்ட்ரவர்ஸிக்கு நடுவில் ஒரு பெருமைக்குரிய விஷயம் என்னென்னா, நம்ம சென்னை கர்ள் இந்திரா நூயி, பெப்ஸிகோ (அமெரிக்கா) நிறுவனத்தோட சி.ஈ.ஓ. ஆகியிருக்காங்க. சும்மா வரலை இந்தப் பதவி... கடுமையான உழைப்பு, செமர்த்தியான புத்திசாலித்தனம்! விடியற்காலைல டெலிவரி வேன்ல ஏறி மார்க்கெட்டிங் ஒழுங்கா இருக்கான்னுகூட போய்ப் பார்ப்பாங்களாம்.

அதுவுமில்லாம அமெரிக்கா மாதிரி ஷோ கால்ட் முன்னேறிய நாடுகள்ல கிளாஸ் ஸீலிங்னு ஒரு பிரச்னை பெண்களுக்கு. அதாவது ரொம்ப உயரத்தை எட்டுவாங்க அவங்க கரியர்ல... ஆனா டாப் போஸ்ட்டுக்கும் அவங்களுக்கும் இடையில ஒரு 'கிளாஸ் ஸீலிங்' தடையா இருக்கும். கண்ணாடி வழியா தலைமைப் பதவி தெரியும். ஆனா கண்ணாடியைத்தான் தொட முடியுமே தவிர, பெண்களால் பதவியை எட்ட முடியாது. இந்த [illegible] ஸீலிங்கை 'பிரேக்' பண்ணி உச்சியை [illegible] தொட்டதுக்காகவும் இந்திரா நூயியைப பாராட்டணும்.

பெப்ஸியோட எல்லாத்துலயும் போட்டி போடற கோக் நிறுவனம், தன்னோட தலைமை அதிகாரியா மேரி மின்னிச்னு ஒரு லேடியை அப்பாயின்ட் பண்ணியிருக்கு...

கொசுறா ஒரு நியூஸ் : இந்திரா நூயி, கர்னாடக சங்கீதப் பாடகர் அருணா சாய்ராமோட கஸின். இரண்டு பேரும் வாரா வாரம் போன்ல பேசிப்பாங்களாம். "குடும்ப உறவுகளை பலப்படுத்த இந்திரா ரொம்ப முயற்சி எடுப்பா. அது அவளோட இயல்பு. அதுதான் அவளோட பலமும்கூட"ன்னு அருணா சாய்ராம் ரீசன்டா ஒரு பேட்டியில சொல்லியிருக்காங்க.



• இந்திரா நூயி

ஜப்பான்ல பாருங்க, வேற மாதிரி டிராக்ல விஷயம் போய்ட்டிருக்கு. சில வருஷங்கள் முன்னால வரையிலும் பெண்கள், கல்யாணத்தைக் காரணம் காட்டி வேலையை விட்டுட்டுக் குழந்தை குட்டின்னு போய்டுவாங்களாம். இப்போ என்னன்னா டாப் லெவல் பொஸிஷனுக்கு வர்றதுக்காக கல்யாணத்தை ஒத்திப் போடறாங்களாம்.

நம்ம நாட்டுலயும் அப்படித்தான்றீங்க... ரைட். ஆனா, ஜப்பான்ல பெண்களுக்குச் சட்டரீதியா பெரிய பதவிகள் வகிக்கற சம உரிமை ('ஈக்குவல் எம்ப்ளாய்மென்ட் ஆபர்சூனிடி' சட்டம்) 1986லதான் தரப்பட்டிருக்கு. இந்த இருபது வருஷத்துல அந்த சப்பை மூக்குக் கிளிகள் சும்மா பட்டையைக் கிளப்பியிருக்காங்க.

பட்டையைக் கிளப்ப



• சப்பை மூக்குக் கிளி

காவோரி சஸாகின்றவங்க ஒரு வெப்ஸைட்டை (www.ewoman.co.jp) பெண்களுக்



காக ஆரம்பிச்சு, உழைக்கும் மகளிரோட கருத்துப் பதிவுத் தளமா அதை உருவாக்கி யிருக்காங்க. பெரிய பெரிய நிறுவனத் தலைவர்கள் இப்போ இந்த வெப்ஸைட்ல பதிவாகற கருத்துகளைக் கூர்ந்து கவனிக்கறாங்களாம். தங்களோட மார்க்கெட்டிங் ரிசர்ச் இன்னும் பல கருத்துக் கணிப்புகள் நடத்த இந்த வெப்ஸைட்டைப் பயன்படுத்திக்கறாங்களாம்.

பியூஷன் யாரோடது தெரியுமா...? ஹவுஸ் வைஃப் ஸோடதுதான்! அவங்க செய்யற 'கண்ணுக்குத் தெரியாத' வீட்டு வேலைகள்லேருந்து விளையற 'உற்பத்தி'.

இட ஒதுக்கீடு இல்லாமலே சாதிக்கும் இந்தியத் தாய்க்குலத்துக்கு, நம்ம மன்றத்தோட ராயல் சல்யூட் வைக்கலாமில்லே.

ஹீரோ அக்கா... ஸாரி ஸாரி! ஹிரோகோ நொமுரா அப்படின்னு ஒரு ஹீரோயின். இந்த வீராங்கனை ஒரு ஜாபனீஸ் பெண்கள் பத்திரிகையின் ஆசிரியர். பணிக்குச் செல்லும் பெண்களோட தன்னம்பிக்கை, மன உறுதியையெல்லாம் வளர்க்கற மாதிரி 'நிக்கெய் வுமன்' பத்திரிகையை நடத்திட்டு வர்றாங்க. 1995ல இவங்க சப் எடிட்டரா சேர்ந்து, சம உரிமைச் சட்டத்துனால ஏற்பட்ட மாறுதல்களை நல்லா புரிஞ்சுக்கிட்டு, அதுக்கேத்த மாதிரி மாகஸினை டெவலப் பண்ணிட்டாங்க. போன வருஷம் மட்டும் இந்தப் பத்திரிகை விற்பனை 40 பர்சன்ட் பெருகியிருக்கு. அனுஷா நடராஜன் மேடம், இதை ஜாபனீஸ் மங்கையர் மலர்னு சொல்லலாம் இல்லே!

பாரதியாரோட பெண் விடுதலை கனவு பகுதியளவு நிறைவேறியிருக்கற இந்தக் கட்டத்துல ஒரு சரியான மேல் ஷாவினிஸ்ட் ஜோக் காதுல விழுந்தது :

"பாரதியார் ரொம்ப தீர்க்க தரிசி..."

"எப்படிச் சொல்றே?..."

"'பெண் விடுதலை வேண்டும்'னு பாடினவர், அடுத்த வரியிலயே 'பெரிய கடவுள் காக்க வேண்டும்'னு பாடியிருக்காரே... அவருக்குத் தெரியும் விடுதலையடைஞ்ச பெண்கள்கிட்டேருந்து ஆண்களைக் கடவுள்தான் காப்பாத்த முடியும்னு!"

ஓ.கே.! ஓ.கே.! இட்ஸ் ஒன்லி எ ஜோக். இதையே சீரியஸா இன்னொரு

வேலைக்குப் போகற பெண்கள்தான்

ப்பை மேக்கு கிளைகள்!



வெளுத்துக் கட்டறாங்கன்னு (எல்லா நாடுகள்லயும்தான்) ஒரு ஆழ்மன நினைப்பு பெருகிட்டேயிருக்கு. பட் உங்களுக்கு ஒண்ணு தெரியுமா...? GNPன்னு ஒரு கணக்குப் போடுவாங்க பொருளாதார நிபுணர்கள் - அதாவது ஒரு நாட்டின் மொத்த வருடாந்தர உற்பத்தி. இந்தியாவோட ஜி.என்.பி. யில 33.3 சதவிகித கான்ட்ரி

கோணத்துல பார்க்கறார் ஒரு சகா :

"பெண்கள் விடுதலை அடைந்து பல விதமான வேலைகளுக்குப் பொறுப்பேற்கறப்போ, ஆண்கள் அவங்களுக்கு ஆதரவு தரமாட்டாங்க.... அதனால கடவுள்தான் அவங்களைக் காப்பாத்தணும் - அதுவும் பெரிய கடவுள்!"

- சுமி

சினிமாவுக்குப் போகலாம் வாங்க!

எங்கள் ஊருக்கு நடுவில் இருந்த சாவடியில் (அதாவது ஊருக்குப் பொதுவாக ஓர் உயர்ந்த திண்ணை கட்டிக் கூரை வேய்ந்திருப்பார்கள்) ஊர்ப் பஞ்சாயத்து. பெரியவர்களுக்குப் பொழுது போக எனப் பல செயல்கள் நடைபெறும். அங்கே அந்த வருடப் பொங்கல் விழாவுக்கான கலை நிகழ்ச்சிக்கு யாரைக் கூப்பிடுவது, கரகாட்டம் எந்த ஊர் என்ற பேச்சுக்கள் தொடங்கியிருந்தன.

சினிமா மணி வீட்டுத் தோட்ட ஊஞ்சலில் நாங்கள் உட்கார்ந்து அது சம்பந்தமாகப் பேசிக் கொண்டிருந்தோம்.

அப்போது, தலையில் பெரிய பூசணிக் காயும், இரண்டு கைகளில் புடலங்காய்களும் கரும்பும், தோளில் மாட்டியிருந்த சாக்குப் பையில் பலவகைக் காய்கறிகளுமாக நடமாடும் காய்கறி மார்க்கெட்டாய் முத்துராக்கு முகமெல்லாம் சிரிப்பாக எங்களை நோக்கி வந்தார். அவரைப் பார்த்தவுடன் எங்களுக்கும் சிரிப்பு வந்து விட்டது.




"எப்படி இந்தப் பூசணிக்காயைக் கீழே விழாமல், கையில் பிடிக்காமல் கொண்டு வந்தீர்கள்?" என்று நான் முத்துராக்கைப் பார்த்து ஆச்சரியமாய்க் கேட்டேன்.

"இதென்ன தம்பி பெரிய விஷயம். நான் அந்தக் காலத்தில் கரகாட்டம் ஆடுன ஆளு தெரியுமா? மாடக்குளம் மாரியம்மா அலங்காநல்லூர் பாண்டியம்மா, ஊர்சேர்



34

கைவந்த கலை!

கு.ஞானசம்பந்தன்

அய்யாவு, பன்னிக்குண்டு கணேசன் கோஷ்டியோட பலகாலம் கிராமம் கிராமமா கரகாட்டம் ஆடினவன்'' என்று சொன்னவருக்கு, சினிமாமணி ஒரு செம்பில் குளிர்ந்த மோர் கொண்டு வந்து கொடுத்தான். ஒரு செம்பு மோரையும் ஒரே மூச்சில் குடித்த முத்துராக்கு, ''தம்பி, மோர் ரொம்ப நல்லா இருக்கு. நேத்து விருதுநகர் போயிருந்தேன். நம்ம வி.கே. ராமசாமியண்ணே வந்திருந்தாரு. என்னைய வரச் சொல்லியிருந்தாரு. விடிய விடிய உக்கார்ந்து பேசிக்கிட்டே இருந்தோம். தம்பி, அந்த மனுஷன்கிட்டே நகைச்சுவை என்னமா இழையோடுது தெரியுமா?'' என்றவுடன், நாங்கள் சுவையான செய்திகளைக் கேட்கத் தயாரானோம்...

''தம்பி, நாடக நடிகர்களாக இருந்து சினிமா உலகத்துக்கு வர்றாங்க பாருங்க... அவங்ககிட்ட எப்பவுமே கற்பனா சக்தி அதிகம் இருக்கும். எந்தச் சூழலையும் சமாளிக்க நடிக்க அவங்களாலதான் முடியும். நம்ம வி.கே.ஆர்கிட்ட பேசிட்டு இருந்தப்போ அவரு ஒரு செய்தியைச் சொன்னாரு பாருங்க... அப்படியே அசந்து போயிட்டேன்... ரொம்ப நாளைக்கு முந்தி சென்னை வானொலியில டி.கே.சண்முகம் அண்ணாச்சி தன் குழுவினரோடு ஒரு நாடகத்தில கலந்துக்கிட்டாராம். அப்பவெல்லாம் ரிக்கார்டு பண்ணி ஒலிபரப்பும் வசதி இல்லையாம். நேரடியா நாடகம் ஒலிபரப்பாகுமாம். ஏதாவது ஒரு சின்னத் தப்பு நடந்தாக்கூட சிரமம்தான்'' என்றவர், அருகில் இருந்த கல் பெஞ்சில் உட்கார்ந்து கொண்டு தொடர்ந்தார்...

''ஒரு சீன்ல சண்முகம் அண்ணாச்சி தன் மனைவியா நடிக்கிறவங்ககிட்டே, 'லட்சுமி உள்ளே தொட்டில்ல குழந்தை அழுவுது பார்... அதைச் சமாதானப்படுத்து' என்று சொல்வதற்கு முன் குழந்தை அழுகிற ஓசையை, ஒலிப்பதிவு செய்ததில் இருந்து போட வேண்டும் என்பது ஏற்பாடு. அப்ப ஒரே டேப்ல ரயில் சத்தம், கார் ஹாரன், குழந்தை அழுகை, நாய் குரைப்பு எல்லாம் எடுத்து வச்சிருப்பாங்களாம்.

ரெடின்னு சைகை காட்டவும், உள்ள இருந்தவரு குழந்தை அழுகைக்குப் பதிலா நாய் குரைக்கிற சத்தத்தைப் போட்டுட்டாராம்! ஒரு வினாடி யாருக்கும் ஒண்ணும் ஓடலையாம்... ஆனா நம்ம டி.கே.சண்முகம் அண்ணாச்சி, சடார்னு சமாளிச்சு, 'லட்சுமி தெருநாய் குரைக்கிற சத்தத்துல குழந்தை அழுவுற சத்தம் கேக்கலை பாரு... உள்ள போய்க் குழந்தையைத் தூக்கு'ன்னு சொன்னவுடன், அத்தனை பேரும் அப்படியே அசந்துபோய், அவரைக் கையெடுத்துக் கும்பிட்டாங்களாம். இதைச் சொல்றப்ப நம்ம வி.கே.ஆர். அண்ணனே நெகிழ்ந்து போனார்'' என்று சொல்லி முடித்தார் முத்துராக்கு.



நேரடி நாடகத்தில் இது மாதிரி பல இக்கட்டுகளைச் சமாளித்துத்தான் நடிகர்கள் பேர் பெறுகிறார்கள்.

''நம்ம வி.கே.ராமசாமி அண்ணனுக்கு முதல் படமே 'நாம் இருவர்' படந்தானா?'' என்று நான் கேட்டேன்.

''இல்ல தம்பி, பழைய

என்.எஸ்.கிருஷ்ணன் படம் ஒண்ணுல. அவரு பொண்ணுக்குச் சங்கீதம் சொல்லித் தர வந்து, என்.எஸ்.கே. அவர்களிடம் அடி வாங்குற மாதிரி சீன்ல கூட வி.கே.ஆர். நடிச்சிருக்காரு. 'சதாரம்' அப்படின்னு ஒரு படம். அதுல சாரங்கபாணி பிள்ளையாவும் வி.கே.ஆர். அப்பாவாகவும் வந்து தெலுங்கும் தமிழும் மாறி மாறிப் பேசி தியேட்டரையே குலுங்க வைப்பாங்க.

"ஏன், 'வீரபாண்டிய கட்டபொம்மன்' படத்தில் எட்டப்பனா வந்து நடிக்கிறதும், 'மக்களைப் பெற்ற மகராசி' படத்தில் கோயம்புத்தூர் பாஷை பேசிக் கலக்குறதும் அவருக்குக் கைவந்த கலை இல்லையா?" என்றான் மணி.

"தம்பி, அந்த மக்களைப் பெற்ற மகராசி படத்தை ஏ.பி.நாகராஜனோடு சேர்ந்து தயாரிச்சதே நம்ம வி.கே.ஆர். தான் என்றார் முத்துராக்கு.

மதுரையில் நகைச்சுவை மன்றத்தைத் தொடங்கி அதனை வெற்றிகரமாகப் பதினாறு ஆண்டுகளாக நடத்தி வருகிறோம். இம்மன்றத்தின் பத்தாவது ஆண்டு விழாவுக்குச் சிறப்பு விருந்தினராக யாரை அழைக்கலாம் என நாங்கள் யோசித்துக் கொண்டிருந்தபோது, வி.கே.ஆர். அவர்கள் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு "தம் துணைவியாருக்கு மருத்துவம் பார்க்க வந்துள்ளார் எனத் தகவல் வந்தது.

எங்கள் நகைச்சுவை மன்றம் அங்கு தான் நடந்து வருகிறது. நகைச்சுவை மன்றப் புரவலர் வ.சேதுராமன் அவர்கள் தான் அந்த மருத்துவமனையின் நிறுவனரும் கூட. ஒரு நாள் காலை டாக்டர் சேதுராமன் அவர்கள் என்னிடத்தில் தொலைபேசியில் தொடர்புகொண்டு, 'நம்ம வி.கே.ஆர். இங்கதான் இருக்கிறார். நான் பேசிவிட்டேன். நீங்கள் வந்து சந்தித்துத் தேதியை உறுதி செய்யுங்கள்' என்றார்.

நான் உடனே புறப்பட்டு வி.கே.ராமசாமி அவர்களைச் சந்திக்கச் சென்றேன். அவர் தங்கியிருந்த அறையில் தயங்கியபடி நுழைந்து என்னை அறிமுகம் செய்துகொண்டேன்.

'அடேடே... வாங்க, வாங்க. உங்களைத்தான் நான் எப்பவும் டி.வி.யில பார்த்துக்கிட்டே இருப்பேனே!''என அழைத்து உட்கார வைத்துக்கொண்டார். எங்கள் பேச்சு, பழைய படங்களைப் பற்றிச் சென்றது. அவருடைய படங்கள் ஒவ்வொன்றாகச் சொல்லிக்கொண்டு வந்த நான், கலைவாணர் என்.எஸ்.கே அவர்களுடன் வி.கே.ஆர். நடித்த படத்தைப் பற்றிச் சொல்லத் தொடங்கினேன் (அந்தக் காலத்தில் முத்துராக்கு எனக்குச் சொன்னது). அதை வியப்போடு கேட்ட வி.கே.ஆர். அவர்கள்,

"ஐயா, உங்களுக்கு என்ன வயசு. எனக்கே மறந்து போன செய்தியெல்லாம் சொல்றீங்களே'' என்று வியந்தவர் நகைச்சுவை மன்றத்துக்குக் கட்டாயம் வருவதாகச் சொன்னார். சொன்னபடியே காலை பத்து மணிக்கு வந்தார். வந்தவர்..

(ரீல் சுற்றும்

படம் : புதூர் சரவணன்



"ஏண்டி விமலா, இடது காதுல பஞ்சை வெச்சுக்கச் சொல்லிட்டு வலது காதுல என்ன சொல்லப் போறே?"

"உங்கம்மாவைப் பத்திச் சொல்லப் போறேன். அதை இந்தக் காதுல வாங்கி அந்தக் காதுல விட்டுடக்கூடாது பாருங்க...!"

- ஜீ.வி.சுபாஷ்



அ... இ...எ..?

அவ்வளவு! இவ்வளவு! எவ்வளவு? தராசு பதில், சுருங்கச் சொல்லி விரிவாக விளங்க வைத்தது. பிடியுங்கள் - 'வழுக்கை' மிதக்க இளநீரை!

- ச. இராசன், கோவை - 38

படுதலம் சுகுமாரனின் 'கொல்லாமல் கொல்லும்' சிறுகதை, உணர்ச்சிக் குவியலைச் சொல்லாமல் சொல்லியது. பாராட்டுக்கள்!

- முகவை முத்துசாமி, தொண்டி

எதற்கெடுத்தாலும் வெளிநடப்பு, சாலை மறியல் செய்வதை கப்பு அவர்களின் வழிகாட்டுதல் மூலம் அ.தி.மு.கவினர் நிறுத்திக்கொண்டால் சரி.

- தர்மன் பெரியசாமி, சென்னை

யுகபாரதியின் நேற்றைய காற்று சுகமாக மனத்தை வருடி, அடுத்த வாரத்தை ஆவலோடு எதிர்நோக்க வைத்து விட்டது!

- ஆர். பிரகாஷ், பொன்மலை

பழைய நாளில் தாசில்தாரைவிட மனைவி அதிகார தோரணை உள்ளவர் என்பதை 'புஷ்பபல்லக்'கில் சிரிக்கச் சிரிக்கச் சொல்லி இருக்கிறார் கல்கி. பலே!

- கே.வி.ராமன், சென்னை

தலையங்கம் நல்ல உதாரணம், கெட்ட உதாரணம் இவற்றுக்கு இடையேயுள்ள வித்தியாசத்தை மிக அழகாகப் பிரதிபலித்தது.

- ஜே. துரைராஜ், சென்னை

மாவூற்று வேலப்பரைப் படித்து முடித்தவுடன், அக்கோயிலுக்குக் கண்டிப்பாகச் சென்றுவர வேண்டும் என்ற எண்ணம் உருவாகிவிட்டது.

- வே.ஈஸ்வரன், ராஜபாளையம்

சும்மா சொல்லக்கூடாது; ஜெயம் ரவி நன்றாகவே பேசக் கற்றுவிட்டார். நட்பு... காதல்... நான்! பேட்டி கச்சிதமாக இருந்தது.

- எஸ்.ஆர். ஹரிஹரன், சென்னை

'பார்வை' சிறுகதை 'அதிகாரத்தால் சாதிக்க இயலாததை அஹிம்சையில் சாதித்துக் காட்ட முடியும்' என்பதை எடுத்துச் சொன்னது!

- வஸந்தா பரமசிவம், மதுரை

இரண்டு புத்திசாலிகள் ஒன்று சேர முடியாது என்பதை, சின்னத்திரை இயக்குநர் சி.ஜே.பாஸ்கர் உணர்த்திவிட்டார்.

- உமரி. பொ. கணேசன், மும்பை

நீ வேணுன்டா செல்லம்!



யார் யாருக்கோ இலவசங்களைக் கொடுக்கற நம்ம சி.எம். நல்ல கதைகளை வாங்கி கோடம்பாக்கத்துக்கு இலவசமா கொடுத்தா எவ்வளவு நல்லா இருக்கும்?

'நீ வேணுன்டா செல்லம்'னு கொஞ்சலான டைட்டில். நாயகன் ரமேஷுக்கு கஜாலாவைப் பார்த்ததும் லவ் வந்துடுது. விவேக்கோட யோசனைப்படி கடிதத்தை ஒரு பையன் மூலமா கொடுத்தனுப்பறார். அது நாயகியோட அப்பா கையில மாட்டுது. அவருக்குப் பொண்ணை காசியில கட்டிக் கொடுத்து அங்கேயே செட்டிலாகணும்ங்கற ஆசை. அதனால தந்திரமா கடிதத்தை அதே தெருவுல இருக்கிற ரௌடியோட முறைப் பொண்ணு நமீதாவுக்கு ஃபார்வர்ட் செய்துடறார். நமீதாவுக்கு ரமேஷ் மேல காதல் பத்திக்குது.

'மணந்தால் கண்ணன்... இல்லையேல் மரணதேவன்'னு டயலாக்விட்டு ரமேஷைச் சுத்தறாங்க. முறைமாமனோ அருவா பார்ட்டி. அப்புறமென்ன? அடிதடிதான்! இத்தனை நிமிஷங்களுக்கு ஒரு பாட்டுன்னு டைம் டேபிள் போட்டு எடுத்து விடறாங்க. முன்னாடி நாலு வரி, பின்னாடி நாலு வரி எடுத்துட்ட மாதிரி திடீர்னு வந்து திடீர்னு போறதால மனசுல ஒட்டலை.

இசையமைப்பாளருக்கு ரொம்பவும் தைரியம். சமீபத்துல ஹிட்டான ஒரு குத்துப் பாட்டோட டியூனை அப்படியே ஜெராக்ஸ் பண்ணியிருக்கார் 'என்னத்த சொல்றது?'. சண்டைக் காட்சிகள்ல பரணியோட கேமரா நல்லா விளையாடி இருக்கு.

ரமேஷுக்கு டான்ஸ், ஃபைட் எல்லாம் நல்லாத்தான் வருது. வசனம் பேசத்தான் ரொம்பக் கஷ்டப்படறார்.

கேட்கற நமக்கும் அதே நிலைமைதான் விவேக் காமெடி கொஞ்சம் ரிலாக்ஸ். நமீதாவோட புண்ணியத்தால தியேட்டருக்கு இளவட்டங்கள் வருது. ஆனா படம் முடிஞ்சு திரும்பறப்ப அவங்க முகத்துலயும் ஏமாற்றம்தான்!

- லஜ்ஜாவதி



இதம் தந்து ரணம் ஆற்றும்




சைபால்

BEST SKIN OINTMENT

எரிச்சல் தரும் வெட்டுக்காயத்தின் மேல் சைபால் தடவுங்கள். எரிச்சலைப் போக்கி இதம் தரும். காயம் இருந்த சுவடே காணாமல் போகும்.

வெட்டுக்காயம், முகப்பரு, சேத்துப்புண், வேனல்கட்டி, பித்தவெடிப்பு முதலிய வியாதிகளுக்கு சிறந்தது.

Mfrs.
THE SOUTH INDIAN MFG. CO.,
MADURAI - 20. Ph: 2534108



சைபால்: எல்லோர் வீட்டிலும் இருக்கவேண்டிய ஒன்று

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN/CC(S)DN/144/06-08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/70/06-08 * Registered as a Newspaper in Srilanka.